மகாமக மகாத்ம

கு… …ம்,

அதிலுள்ள

"மகாமக தீர்த்தம்"

எல்லா தீர்த்தங்களிலும் மேன்மைபெற்றதற்குள்ள வரலாறும்

அடங்கியுள்ளன.

M. அநந்தராமய்யரால்

அச்சிட்டு பிரசுரஞ்செய்தது.

Copy right Registered.

விலை அணு 0-2-0.

1909.

644/7 4/

விவஹார போதினி.

...ஒரு மாதம் முதலில்பிரசுரஞ் செய்யப்படுகிறது.

சிவில், கிரிமினல், ரேவினியூ, போலீஸ், சால்ட் முதலிய பல சட் கோர்ட்டுத் தீர்மானங்களோடும் விவரமான உதாரணங்களோ ...தைக்கப்போது புதிதாய் ஏற்படுகிற சட்டங்களையும் அச்சிட்டுப் செய்யப்படுகிறது.

...ம் போலீசார் இன்னகுற்றங்களைப் பிடிக்கலாம், இன்னகுற்றங்க ...டிக்கக்கூடாதென்றும், இன்னின்ன கேசுகளில் ஜாமீன்வாங்கலா மென்பது, அந்த ஜாமீன் பிடித்தவிடத்திலேயே வாங்கவேண்டும், ஸ்டேஷ ...க்கு பேரை அழைத்துக்கொண்டு போகக்கூடாதென்பது, விலங்கை இன் னின்ன சமயத்தில்தான் உபயோகப்படுத்த வேண்டுமென்பது, அபராதப் பணத்தை வசூல்செய்ய குடும்பப்பொது சொத்தை ஜப்திசெய்து ஏலம் போடக்கூடா தென்பது, போலீஸார் கேஸை ஒளிக்கக்கூடா தென்பது, பிடித்தவர்களை அடித்துத் தொந்திரவுசெய்யக்கூடா தென்பது, முதலான போலீஸ்சம்பந்தமான அனேக இரகசியங்களும், போலீசாரை வேலைவாங் கும்படி நாம் செய்யவேண்டிய உபாயங்களும் போலீஸ் சால்ட் அப்காரீ ரெவினியு உத்தியோகஸ்தர்களுடைய அக்கிரமச்செய்கைகளிலிருந்து தப் பித்துக்கொள்ளும் வழிகளும், இதில் பிரசுரமாகும். இதைப்படிப்பவர்கள் போலீஸ், ரெவினியூ, அப்காரீ முதலான உத்தியோகஸ்தர்களுக்கு அக்கிரம மாய் ஒருகாசுகூடக் கொடாமல் அவர்களைத் தங்கள் வீட்டுவாசலில் காக் கும்படி செய்யலாம். வக்கீல் உதவியில்லாமல் கோர்ட்டுகளில் சுயமாகவே பேசலாம். இதுவரையில் சட்டந்தெரியாமல் சர்க்கார் உத்தியோகஸ்தர் களுக்கு காசைக்கொடுத்து ஏமாந்தவர்கள் இதைவாங்கி படிக்கலாம்.

குறிப்பு.—இது நியூஸ்பேபரைப்போல் படித்ததும் எறிந்துவிடக்கூ [illegible] தல்ல. ஒவ்வொரு மாதம் அனுப்புகிற சஞ்சிகை [illegible] ...ரிய புஸ்தகமாக பைண்டுசெய்து சிவில், ரெவினியூ, கிரிமினல் சம்பந்தமாய் ஏதாவது சந்தேகம் நேரிடும்போதும், விவகாரங்கள் நேரிடும்போதும், வக் கீல்களிடம்போய் அலையாமல் ஸ்வயமாகவே ஒவ்வொருவரும் இதிலிருந்தே தெரிந்துகொள்ளக்கூடியதாயிருப்பதால், இது எக்காலத்திலும் சகல ஜனங்க ளுக்கும் பிரயோசனப்படக்கூடியது.

முன்பணமாக வருஷம் 1-க்கு சந்தாதொகை	ரூ	2—4—0
ஷை 6-மீ த்துக்கு	ரூ	1—4—0

(1) ஒரேசமயத்தில் ஐந்து சந்தாதாரரைச்சேர்த்து முன்பணம் அனுப்பு கிறவர்களுக்கு ஒரு சஞ்சிகை இனுமாய் அனுப்பப்படு...

(2) ஒரேசமயத்தில் 10 சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணம் அனுப் புகிறவர்களுக்கு ஒரு சஞ்சிகை இனமாக அனுப்புவதுடன் ரூ 7 விலையுள்ள வாட்சு ஒன்று இனமாய் அனுப்பப்படும்.

☞ மானேஜர் விவஹாரபோதினி ஆபீஸ்.

அக்கிரகாரம்.

புரசைவாக்கம்—சென்னை.

உ

ஸ்ரீ கணேசாயநம:

மகாமக மஹாத்மியம்.

கும்பகோண க்ஷேத்திரம்.

மோட்சத்தைக்கொடுக்கக்கூடிய பிரதாபம் பொருந்திய கும்பகோண க்ஷேத்திரம் காவேரி மகாநதியின் தென்கரையில் விளங்காநிற்கிறது. இது சோழதேசத்தில் பிரதான பட்டணங்களில் ஒன்று. பல தேவாலயங்களாலும், விப்பிரர்கள் நிறைந்த தெருக்களாலும், மாடமாளிகை கூடகோபுரங்களாலும் நிறைந்து, பலவித விருக்ஷங்களின் சோலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட வீதிகளாலும் கும்பகோணம் வெகு அழகாயிருக்கிறது. வடபுறம் காவேரியும், தென்புறம் அரசலாறும் இந்நகரின் ஜனங்களுக்கு ஸ்நானபானங்களுக்கு உதவுகின்றன. சகல தீர்த்தங்கள் வசிக்கப்பெற்றதும், நீராடியவரை மோக்ஷபதவியை அடையும்படி செய்யக்கூடிய மகிமைபொருந்திய "மகாமக தீர்த்தம்" இந்நகரிலிருக்கிறது.

கும்பகோணமெனப் பெயர்வாய்ந்த காரணம். யுகப்பிரளயம் சமீபத்தில் வரப்போவதால், அக்காலத்தில் ஜகத்திலுள்ள சகல ஜீவகோடிகளும் நாசத்தையடைந்துவிடுமென்பதை யறிந்த பிரமன், பிரளயத்திற்குப்பிறகு மறுபடி ஜீவராசிகளை யெவ்விதம் உற்பத்திசெய்வதெனத் தெரியாமல் தியங்குஞ்சமயத்தில் கைலாயபதியாகிய பரமசிவனுடைய ஞாபகம்வரவே உடனே கைலாயஞ்சென்று உமாபதியைவணங்கி, ஏ பரம்பொருளே! வரப்போகிற பிரளயத்தில் சகல ஜீவராசிகளும், அசேதனமான தாவரங்களும் அழிந்துபோய்விட்டால், மறுபடி அவற்றை எவ்விதம் சிருஷ்டிசெய்வேன், அதை அடியேனுக்கு உபதேசித்தருளவேண்டுமென பிரார்த்திக்க, பார்வதிரமணன் கிருபைகூர்ந்து ஏ பிதாமகனே! "நீர் அதற்காக மனவருத்தப்படவேண்டாம். கொஞ்சமண் எடுத்து அதை அமிர்தம்விட்டுப்பிசைந்து ஓர் கலசம்செய்து அதற்குள் அமிர்தத்தால்பிசைந்த மண்ணைப்போட்டு அதில் சிருஷ்டிபீஜத்தை (வித்தை)ப்புதைத்துச் சுற்றிலும் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், முதலியவைகளைவைத்து, அமுதத்தால் அக்கலசத்தைநிரப்பி மகாமேருவின் தென்பக்கத்திலுள்ள குறிப்பிட்டவோரிடத்தில் ஓர் உரியில்வைத்துவிடு" என ஆஞாபித்தனர்.

...வ்வாறுரைக்கக்கேட்ட சதுர்முகன் உடனே அமுதம்கலந்தமண்ணால் ...செய்து, அவ்விதம் கலந்தமண்ணை கலசத்தில்போட்டு சிருஷ்டிபீஜத் ...ி அமுதத்தால் நிரப்பி, கும்பத்துக்கு நூல்சுற்றி, வாயில் மாவிலைச்

கொத்துவைத்து அதன்மேல் ஒரு தேங்காயையும்வைத்து, பூணூல், கூர்ச்சமும்சாத்தி, வில்வம், சந்தனம், முதலியவற்றால் அலங்கரித்து விதிப்படி பூசைசெய்து, மகாமேருவின் தென்பாகத்தில் ஓர் இடத்தில் தருப்பையால் செய்த உறியில் வைத்துவிட்டனன்.

இதன்பின் சுவல்பதினத்தில் புசற்காற்றும் பெருமழையும்சேர்ந்து சராசரங்களையுமழித்தது. மலைகளெல்லாவற்றையும் முழுகடித்து கடைசியில் மேருவையும் அமிழும்படியான பிரளயமுண்டாகும்படி மழைபொழிந்தது. அம்மேருவில் சதுர்முகனால் வைக்கப்பட்ட கும்பம், கூர்ச்சம், பூணூல் தேங்காய், மாவிலை, வில்வம், உறி முதலியவை [illegible] பிரவாகத்தில் தென்திசையில் மிதந்துசென்று, பிறகு காற்றினால் சிறிது மேற்குமுகமாகத் தள்ளுகையில் கும்பத்தின்மேலுள்ள மாவிலையும் கூர்ச்சமும் ஓரிடத்தில்விழ, அங்கே மாவிலை வன்னிவிருட்சமாக, அவ்விருக்ஷத்தடியில் தருப்பையோர் சிவலிங்கவுருவாகதோன்றி அவ்விடம் சமீவனக்ஷேத்திரம் (திருப்பிரம்பியம்) எனவும், சிவலிங்கம் சமீவனேசுவரரெனவும் (தருப்பைலிங்கம் அல்லது சாக்ஷீசர்) என நாமமுண்டாயிற்று. இச்சிவலிங்கத்தை சப்தகன்னிகைகளும ஜலரூபியாய்ச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இதன்பின் கும்பம் இந்த ஸ்தலத்திற்கு அக்கினிமூலையில் ஒன்றரைக் குரோசதூரத்தில் போனவுடன் (குரோசம் என்பது இரண்டரைநாழிகைவழி) பரமசிவன்திருவருளால் "இத்தலம் இவ்வுலகிலுள்ள எல்லாக்ஷேத்திரங்களிலும் மேன்மையானது" எனவொரு அசரீரவாக்குண்டாக, தேவர்கள் மலர்மாரிபொழிந்தார்கள். பிரளயமும் கொஞ்சங்கொஞ்சமாய்வடியக் கலசமும் அசையாது அவ்விடத்திலேயே நின்றது. அக்கும்பத்தைத் தொடர்ந்து சென்ற பிரமன் இவையனைத்தையும்கண்டு ஆநந்தமடைந்தான். பூமியிற்றங்கியகும்ப மிருந்தஉறி, கலசத்திறகுச் சற்றுக்கீழ்பக்கத்தில் வீழ்ந்து ஒருசிவக்ஷேத்திரமாயிற்று. (இது இப்பொழுது சோமநாதன்கோவில்) கலசத்தின்மேலிருந்த தேங்காய் அக்கினிமூலையிற்சென்று பூமியில்பதிந்து செவ்விளநீர்மரமாகி, அதனடியில் அக்காயின் குடுமிவடிவாக ஓர் சிவஇலிங்கம் உண்டாய், நாரிகேள இலிங்கமெனப் பெயரடைந்தது. இவர்க்கு அமுதநாதர் எனவும்பெயர். உறி விழுந்தஇடத்திற்குக் கீழ்பால் இரண்டுபோனதூரத்தில் அதிலிருந்த வில்வம்விழுந்து வில்வவனமாகி அவ்விடத்தில் பாதாள இலிங்கேசர் உண்டாயினர். (இது நாகேசுவரன்கோயில்) அமுதநாதனுக்கு எழுபானதூரம் மேற்கே பூணூல் வீழ்ந்து இலிங்கமாகி உபவீதேசர் எனப் பெயர்பெற்றது. (இது கவுதமேசர்கோயில்) இவ்வாறு பலக்ஷேத்திரம் உண்டாவதற்குக் கும்பமே காரணமாதலால் அக்கும்பம் க்ஷேத்திரபீஜகும்பமெனப் பெயர்பெறும்.

பிறகு உமாபதி அக்கும்பத்தைப்பார்க்கவேண்டி உலகத்தாருய் வண்ணம் ஓர் கிராதவடிவங்கொண்டு, தமது சிவகணங்களுடன் அதனைப்பார்த்துக்கொண்டே, திருவிடைமருதூர் க்ஷேத்திரத்திற்குச்

த்தில் வந்துநின்று மேற்றிசையைநோக்கக் கும்பம்தெரிவதைப்பார்த்துத் தனது பரிவாரங்களுடன் "இக்கும்பத்திலுள்ள அமுதம் நாலாபக்கமும் வழிந்தோடச் செய்கிறேன்" என்று சொல்லித், தமது பாணங்களிற் சிலபாணங்களை வேடிக்கையாகவிடவே அவை அக்குடத்திற்குச்சமீபத்திலேயே விழுந்துவிட்டன. கூடவந்தவர்களுள் அறக்காப்பாளனாகிய சாத்தா ஓர் பாணத்தை எடுத்துக்கொடுக்கப், பரமசிவனதைவாங்கி அவனைநோக்கி ஐய! "இவ்வம்பினால் அவ்வமிருதகடம் உடையாது. அதை நீபார்ப்பாய்" என்று சொல்லி வில்லில் காணேற்றி அவ்வம்பைவிடவே அது அக்குடத்திற்கு யாதொரு கெடுதியுஞ் செய்யாமல்போயிற்று. இதைக்கண்டு மனம்வருந்திய சாத்தாவைக் கிராதனாகிய பரமசிவ[illegible] "நீ இன்றுமுதல் ஏகபாணசாத்தா என்னும் பெயருடையவனாயும், இவ்விடம் பாணவண்டுறையென்றும் பெயருடையதாயும் ஆகுக" வென வரமளித்து, அச்சாத்தாவை அங்குவைத்துத்தான் தன்னுடைய தூணியினின்றும ஓர் அம்பையெடுத்துக் கொஞ்சதூரம் மேற்கேசென்று, அக்கலசத்திற்கு ஈசான்னியதிக்கில் நின்று, அவ்வம்பைவிடவே அதுவிரைந்தேகி அக்கலசத்தின் மூக்கையுடைத்துக் கடத்தையும் கவிழ்த்தது. அவ்வுடைந்தமூக்கு ஆகாயத்திற்கிளம்பி அக்கினிமூலையில் சிறிதுதூரத்தில் விழுந்து, ஓர் சிவஇலிங்கமாயிற்று. அந்தவிடத்திற்குக் குடவாயிலென்றும்; அவ்விலிங்கத்திற்கு கோணேசரெனவும் பெயருண்டாயிற்று. அவ்வேடன் நின்று பாணம்விட்ட இடம் பெரியக்ஷேத்திரமாய், இடம் பாணபுரியென்றும், இலிங்கம் பாணபுரீசர் எனவும் வழங்குகின்றன.

பிறகு உடைந்த மூக்கின்வழியாகக்கும்பத்துள் இருந்த அமுதம் கவிழ்ந்து சுற்றிலும்பரந்து யோசனைதூரம் நனைந்தது. ஈசன் அமுதம்வருகிறவழியே சென்று குடத்துக்குச் சமீபமாய்ப்போய், குடத்திற்குக்கிழக்கே சமீபத்திலும், அக்கினிமூலையில் கொஞ்சதூரத்திலும் அமுதமதங்குவதற்குப் பூமி சிறிது இடங்கொடுக்கவேண்டுமெனநினைக்கப், பூமிவெடித்து அவ்வாறே அமுதம் தங்கஇடங்கொடுக்க இரண்டு அமுதவாவிகள் உண்டாயின. (இவை பொற்றமரைத் தீர்த்தமும், மகாமக தீர்த்தமும்.)

பிறகு கிராதனாகிய சிவபிரானகுடத்திற்குச் சமீபத்தில்சென்றவுடன், தண்ணீர்வடிந்து நல்லதரையுண்டாயிற்று. உடனே அமுதத்தால் நனைந்த மண்ணைச் சேர்த்துப்பிடித்து ஓர் இலிங்கமாக்கி அவ்வுடைந்த குடமூக்கில் வைத்துத்தானே அவ்வமுதத்தால் அவ்விலிங்கத்தை மஞ்சனமாட்டிப் பூசித்துப் பிர்ம்மாவும் எல்லாத்தேவதைகளும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அவ்விலிங்கத்துட்சென்று மறைந்தார். உடனே தேவதைகளெல்லாம் உலகத்திற்கு மங்களத்தை யுண்டாக்கவேண்டிக், கைலாயத்தினின்றும் உமையை அவ்விலிங்கத்திற்கு இடப்பாகத்தில் எழுந்தருளச்செய்து, பூஜித்து, மங்களநாயகியென் அழைத்தார்கள். இவையெல்லாம்நடந்தது மாசிமாதத்தில் உடனே பிரமன் ஆதிகும்பேசருக்கும், மங்களநாயகிக்கும் ஆலயம் சமைத்து

உற்சவம் செய்யத்தொடங்கி ஒன்பதுநாள் உற்சவம்செய்து பத்தாநாள் அமுதவாவியுள் அவபிருதஸ்நாநாதி மகாமகதீர்த்தத்தில் சுவாமியை தீர்த்தங்கொடுக்கச்செய்தான். இவ்விதமாக ஒவ்வொருவருஷமும் பிர்மா உற்சவம் நடத்துவதாக ஐதீகம். இதை கொஞ்சம விஸ்தரித்து பின்னால் சொல்லியிருக்கிறது.

இவ்வாறு உடைந்தகுடமூக்கின்வழியாக அமுதம் நாற்புறமும் பரவியதாற் கும்பகோணமென்றும், உடைந்தமூக்கின்மேல் பரமசிவன் மண்ணைப்பிடித்து இலிங்கமாகவைத்துப் பூசித்தலாற் கும்பகோணமென்றும்; (கோணம் மூக்கு) பெயருண்டாய் அது தமிழில் மரூஉச்சொல்லாய்க் குடந்தை என்று வழங்கலாயிற்று. படைப்புக்காலத்திலேயே [illegible]வில் தன்கையாலே உண்டான காரணத்தால் ஆதிகும்பேசர் எனவும் அமுதம்நிறைந்த இடத்தில் உண்டானதால் அமுதலிங்கேசர் எனவும், இன்னும் பலகாரணங்களால் பலவிதமாயும் பெயருண்டாயின. இது அடியில்வரும் சுலோகங்களாலறிக.

> கும்பஸ்ய கோணதோயஸ்மாத் ஸுதாபூரமயம் பரம்
> தஸ்மாத்துதத்பதம்லோகே கும்பகோணம் வதந்திஹி.
> கும்பப்ரதாந ரூபத்வாத் கும்பகோணம் விதுர்புதா:
> கோணபேதநஸம்ஸ்தாநே யஸ்மாத்ஸம்ஸ்தாபிதம்சிவம்
> கும்பகோணேசுவரம் நாம்நாவதந்திமுநயோதிவி.

இத்தலத்திற்கு பாஸ்கரக்ஷேத்திரமென்றும் பெயருண்டு. பாஸ்கரக்ஷேத்திரமென்றால், மலையயாவது அல்லது நதியையாவது அடுத்துள்ளதலத்தில் பிரமவிஷ்ணு ருத்திராதி மும்மூர்த்திகளும் இருந்து சூரியனால் அம்மூர்த்திகள் பூசிக்கப்பட்டால் அது பாஸ்கரக்ஷேத்திரமென்று பெயர்.

> பர்வதாக்ராத் நதீகூலாத் ப்ரம்மவிஷ்ணு சிவார்விதாத்
> தூர்க்காதிருகமுக்யாச்ச பாஸ்கரணைப்ரபூஜநாத்
> பாஸ்கரக்ஷேத்திரமிதயாஹு: விருஜிநௌகவிநாசகம்.

கும்பகோணமிருக்குமிடமும் எல்லைகளும். இத்தலம் இருக்குமிடத்தைச் செவ்வையாய்ச் சொல்லுமிடத்துக் கீழ்கடலாகிய வங்காள விரிகுடாவுக்கு மேல்பக்கத்தில் ஐந்துயோசனை தூரத்திலும், விபீஷணர்க்கருள எம்பிரான் பள்ளிகொள்ளும் காவிரிநதியை மாலையாகக்கொண்ட ஸ்ரீரங்கத்திற்கும், நாகேந்திரவனமென்ற திருவானைக்காவிற்கும் கீழ்பால் நான்குயோசனைதூரத்திலும், திருஆதவூரடிகட் கருளிய இடமாகிய திருப்பெருந்துறையென்னும் ஆவடையார்கோவிலுக்கு வடபால் எழுயோசனைதூரத்திலும், மணிமுத்த நதிக்கரையில் விளங்கும் விருத்தாசலத்துக்குத் தென்பால் ஐந்துயோசனை தூரத்திலுமுள்ளது. இது பூதேவின் மார்பணியாகிய மதாணியின் நடுநாயகமாகிய இரத்தினம்போன்றது. இதைச்சூழ்ந்து அநேகஸ்தலங்களிருக்கின்றன. அவைகளுள் கிழக்கில் திருவாவடுதுறை தென் குரங்காடுதுறை, முதலிய சிலஸ்தலங்களும்; தென்கிழக்கில் குடவாயில், திருநாரையூர், சிவபுரம்

கலயநல்லூர், முதலிய சிலஸ்தலங்களும்; தெற்கில் மதங்கர்க்கருளும் தெக்ஷிணகாஞ்சியும் பட்டீச்சுரம், பழையாறை, திருச்சத்திமுற்றம் முதலிய பலதலங்களும்; தென்மேற்கில் நல்லூர், திருப்பாலைத்துறை, சக்கரப்பள்ளி முதலியபலதலங்களும், மேற்கில் திருவலஞ்சுழி, வடகுரங்காடுதுறை, முதலியவைகளும்; தென்மேற்கில் திருவைகாவூர் விசயமங்கை; முதலியபலவும், வடக்கில் திருப்பிரம்பியம், கோகறந்தபுத்தூர் முதலியவைகளும்; வடகிழக்கில் திருவாய்ப்பாடி, சேய்ஞலூர், திருப்பனந்தாள், திருமங்கலக்குடி, கஞ்சனூர் முதலிய பலஸ்தலங்களும், இக்கும்பகோணத்துக்கு நான்குபுறத்தும் ஒருயோசனைக்குள் விளங்கி இத்தலப்பெருமையை நன்குபுலப்படுத்துகின்றன.

இந்தக்ஷேத்திரம் கிருதயுகத்தில் மூன்றுயோசனையும், திரேதாயுகத்தில் இரண்டுயோஜனையும், துவாபரத்தில் ஒருயோஜனையும், கலியில் அரையோஜனையும் விஸ்தீரணத்தையுடையதாயிருக்குமென்று சொல்லப்படுகிறது.

மகாமகம் என்பது பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை இந்த கும்பகோணம் க்ஷேத்திரத்திற் நடக்கும் திருவிழாவின் கடைசி ஸ்நாநதினம். இந்நாளில் இமயமலைமுதல் சேது வரையிலுள்ள எல்லா தேசத்து ஜனங்களும் யாத்திரைசெய்து இக்கும்பகோணத்தில் அக்கினி மூலையில் உள்ள மகாமக தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்வது வழக்கம். இக்குளம் முன்னமே சொல்லியபடி அமுதத்தால் நிறப்பியதால் ஸுதாதீர்த்தமென்றும்; "நதீநாம் பிரமுகம் யாந்திவத்ஸராபூர்வ மேவஹி" என்று சொல்லுகிறபடி பரதகண்டத்திலுள்ள எல்லாத்தீர்த்தங்களும் ஒருவருஷத்திற்கு முந்தியேகும்பகோணம் வந்து மகாமகதீர்த்தத்தில் சேருகிறகாரணத்தால் பதுதீர்த்தமென்றும்; கங்கைமுதலிய ஒன்பது தீர்த்த தேவதைகளாகிய கன்னிகைகளும் வந்துசேர்ந்து அங்கேயே வாசம்பண்ணுகிறபடியால் கன்னியாதீர்த்தமென்றும்; மகாபாதகங்களைப் போக்கடிக்கக்கூடிய மகிமையுள்ளதாயிருப்பதால் "பாபா பநோதனம்" என்றும், தேவகுருவாகிய பிரகஸ்பதி சிம்ம இராசியிற்சேர்ந்து அந்தசிம்மவிராசிக்கு உடையவனாகிய சூரியன் தனது புத்திரனும் சனியின் வீட்டின் கும்பமாகிய எழாமிடம் சார்ந்து நின்று, மகாநட்சத்திரத்தில் பௌர்ணமியில் சந்திரன்வந்து, சிம்மத்தில் நிற்கிற குருவுடனசேர, இவ்விருவரையும் சூரியனும் (ஏழாமிடம் ஒவ்வொருவருக்கும் முழுப்பார்வை என்பது சோசியநூல்) சூரியனை இவ்விருவரும் முழுப்பார்வையுடன் பார்க்கிறநாளில் ஸ்நாநஞ்செய்வது வெகுபுராணங்களிலும் கொண்டாடப்பட்டதாதலால் மஹாஸரோவரம் (மகாமகதீர்த்த) மென்றும், பெயர்களையுடையது.

இது தன்னுள் ஆடுவோர் அனைவர்க்கும் அவரவர்கள் விரும்பும் பலனை எந்நாளுந் தருவதாயினும் மகாமகநாள் நீராடும்நாட்களுள் முதன்மையானது.

இந்த மகாமகம் பிரபவ வருஷம் முதலாகிய அறுபது வருஷங்களுள் ஒருவருஷத்தில் சிம்ம இராசியில் வந்த குரு, சுற்றிவந்து இராசிக்கு ஒவ்வொ

ருவருஷமாக இருந்து. மறுபடியும் அந்தச்சிம்ம இராசிக்குவரப் பொதுவாகப் பன்னிரண்டுவருஷம்செல்லும் என்று நினைத்து, பவ, விய, விளம்பி, சாதாரண, துந்துபி வருஷங்களில்வர வேண்டுமென்று "பவே, வியே, விளம்பேச ததா, சாதாரணேபிச, துந்துபௌசமஹாபாக, மஹாமாகப் பிரகீர்த்திதா:" குருவினுடைய அதிசாரத்தினாலும் வக்கிரத்தினாலும் (அதிசாரம்-ஒவ்வொரு நட்சத்திரத்தின் நான்கு பாதங்களில் ஒவ்வொருபாதத்திலும், இருக்கவேண்டிய நாட்கள் இராமல், சீக்கிரமாக வேறு பாதத்திற்காவது, நட்சத்திரத்திற்காவது செல்வது; வக்கிரமாவது-இவ்வாறு ஒருபாதத்திலிருந்து மற்றொரு பாதத்திற்குச்சென்று திரும்பித்தான் முன்னிருந்த நட்சத்திரத்திற்காவது பாதத்திற்காவதுசெல்வது) முன்சொன்ன வருஷங்களிற்கு ஒருவருஷம் முந்தியாவது பிந்தியாவது வருவதுமுண்டு என்பதுதோன்ற,

> "அதிசாரே அதவாவக்ரே ஜீவே சிம்மகதேஸதி
> மாகாப்தே மாகமாஸேது மஹாமாகவிருதம் சரேத்"

என்றும் புராணத்தில் காணப்படுகிறது.

மகாமகஸ்நாநம் என்பதை ஒருநாள் ஸ்நாநதினமாக எல்லாரும் கொண்டாடினாலும் அது நான்குநாள் அநுஷ்டிக்கவேண்டிய ஒருவிரதம். இவ்விரதம் வடக்கே சிலதேசங்களிலுள்ள தீர்த்தங்களில் அநுஷ்டிப்பதும் உண்டு. ஆனால் இக்கன்னியாதீர்த்தத்தில் அநுஷ்டித்து நீராடுவதுபோல இராதெனத்தோன்றுகிறது.

இச்சிறுபுத்தகத்துள், இத்தலத்திற்குக் கும்பகோணம் எனப் பெயர்வந்த காரணம் முதலில்சொல்லப்பட்டிருக்கிறது. கும்பகோணயாத்திரையுள் முக்கியமாகிய பஞ்சக்குரோச க்ஷேத்திரயாத்திரை, பதினெண்தலயாத்திரை முதலியவைகளும், அவற்றின் வைபவமும்; மகாமக தீர்த்தமகிமையும், மகாமகவிருத நியமமும், நவகன்னியர்பூஜையும், அங்குசெய்யும் தானமும் அவற்றின்பலனும், நீராடியதால் நினைத்தபலனை அடைந்தவர்கள் சரித்திரங்களும் இனி கூறப்படும்.

மகாமக உத்ஸவத்தை பிர்ம்மா நடத்தியது.

உலகத்திலுள்ள முக்கியமான 7744 சிவஸ்தலங்களிலும், 800 விஷ்ணு ஸ்தலங்களிலும் முக்கியமாய் தென்னாட்டில் அடியார்களால் பாடல்பெற்ற ஸ்தலங்கள் 274 உள்ளன. இவற்றுள் அதிக முக்கியமானது ஸ்ரீரெங்கம், கும்பகோணம், காவேரிப்பட்டணம், இவைமூன்றே. அதிலும் த்ரிமதஸ்தர்களுக்கு தங்கள் இஷ்டகாம்யார்த்த சித்திகளைப்பெற்று மோட்சமடைவிக்கும் ஸ்தலம் கும்பகோணமாதலால், அதுவே இம்மூன்றிலும் மேன்மையானது.

ஆதிகாலத்தில் பிர்ம்மாகிருபாநிதியாகிய பரமசிவனின் அருள்பெற்றுமகாமக உற்சவத்தை நடத்துவதற்காக கும்பகோணத்துக்கு ஒருவருஷத்துக்கு

முன்னே சகல தேவர்களோடும், ருஷீசுவரர்களோடும் வந்து ஆதி கும்பே சுவரருக்கு உத்ஸவம் செய்வதற்காக தாமே கங்கணம் கட்டிக்கொண்டு நல்ல சுபமுகூர்த்தத்தில் துவஜாரோகணம் செய்தார். பிறகு ஒவ்வொருநாளும் வரிசைக்கிரமமாக உற்சவத்தைநடத்தி வாகனாதிகளில் பஞ்சமூர்த்திகளையும் ஊர்வலம்செய்வித்து வாத்தியம், வேதகோஷம், நர்த்தனம் முதலியவைக ளால் சிறப்பிக்கச்செய்தார். அதன்பின் இரதாரோகணமும் நடந்து பத்து நாள் உற்சவமும் முடிந்தது. கடைசிநாள் தீர்த்தாடனத்துக்காக பிர்ம்மா ஆதிகும்பேசுவரருடன் பஞ்சமூர்த்திகளையும் தத்தம் வாகனங்களிலேற்றி சகல தேவர்களாலும், ருஷிகளாலும் சூழப்பட்டு மகாமக தீர்த்தத்தை நோக் கிச் சென்றார்.

இத்தருணத்தில் பரதகண்டத்திலுள்ள நதிகளில் முக்கியமான, கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, கோதாவரி, மகாநதி, பயோஷ்னி, (பாலாறு) காவேரி, ஸரயூ முதலியவைகள் கன்னிகை ஸ்வரூபமாக 9 பேரும் பரமசிவ னிடம்சென்று, "பார்வதிரமணு!" சகல ஜனங்களும் "எங்களிடம்வந்து ஸ்நா நஞ்செய்து பாபத்தைப்போக்கி பரிசுத்தர்களாகிறார்கள். அப்பாபங்களை நாங் களேற்றுவிடுவதால் அதை போக்கிக்கொள்ள எங்களுக்கு ஒருவகை சொல்ல வேண்டுமென்று" கேட்க, கைலாயபதி, நவநதிகளாகிய கன்னியர்களைப் பார்த்து, கும்பகோணத்தில் பிர்ம்மாவால் நடத்தப்படுகிற மகாமக உற்சவத் தை தரிசித்து கன்னியாதீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்தால் நீங்கள் பரிசுத்தர்க ளாவீர்களென்றும், இதோ நான் விசுவநாதர் என்றபெயருடன் பிரமதகணங் களுடன் போகிறேன், நீங்களும் வாருங்களென்று திருவாய்மலர்ந்தருளினார். அதைக்கேட்ட நவகன்னியர்களும் பரந்தாமனுடன் புறப்பட்டு மகாமகக் குளம்போய்ச் சேர்ந்தார்கள். இவர்களைக்கண்ட பிரமனும் தேவர்களும் பர மாநந்தமடைந்தார்கள். மகாமகக் குளத்துக்குக் கீழ்கரையில் கிழக்குமுக மாக வீற்றிருந்த (கடபலேசுவரர்) ஈசுவரன் வருகையையறிந்து மேற்குமுக மாகத் திரும்பினார். அபிமுகேசுவரர் அம்பிகையோடு தீர்த்தமுகமாகத் திரு ம்பினார். நவகன்னியர்கள் இவர்கள் இப்படித்திரும்பின காரணமென்னவெ ன்று ஈசுவரனைக்கேட்க, பகவான், சத், சித், ஆநந்தம் இம்மூன்றும்சேர்ந்த சின்மயாநந்த சுவரூபமாகிய எங்களுக்கு யாதொரு பேதமுமில்லை. ஜகத்ரக்ஷ ணார்த்தம் பலநாமங்களோடு அங்கங்கே நாம் விளங்குகிறோமென்று நவகன் னியர் சந்தேகத்தை நீக்கினார்.

விசுவநாதர் வருகையையறிந்து மற்ற ஸ்தலங்களிலுள்ள (சிவ, விஷ்ணு) மூர்த்தங்களையும் தேவர்கள் வாகனங்களில் ஏற்றிக்கொண்டு மகாமக தீர்த் தத்துக்கு வந்தார்கள். எல்லாரும் மகாமகக்குளத்தைச் சுற்றிவந்தார்கள். கன் னியாதீர்த்தத்துக்கு வடகரையில்வரும்போது விசுவநாதர் நவகன்னியருடன் இவ்விடம்நின்று லிங்காகிருதியாகினார். நவகன்னியரும் தங்கள் அம்சங்களில் பாதியை தத்தம் நதியிலும் பாதிஅம்சத்தை கன்னியாதீர்த்தத்திலுமாய் நின்று

விட்டார்கள். சதாகாலமும் நவநதிகளாகிய கன்னிகைகள் மகாமக தீர்த்தத்தில் தங்கிவிட்டதால் அது எல்லாதீர்த்தங்களைக்காட்டிலும் அனேக ஆயிரமடங்கு விசேஷமாயிற்று. இந்நவகன்னியர்களால்தான் "கன்னியா தீர்த்தமென்றும் மகாமக தீர்த்தத்துக்கு பெயருண்டாயிற்று. பிறகு பிர்ம்மா தேவகணங்களோடு மங்களாம்பிகை சமேத ஆதிகும்பேசுவரருக்கும், சுப்பிரமணியர் முதலிய பஞ்சமூர்த்திகளுக்கும், இன்னும் மற்ற சிவ, விஷ்ணு மூர்த்தங்களுக்கும், தம்கையாலேயே விதிப்படி அபிஷேகஞ்செய்து தீர்த்தாடனஞ்செய்வித்து தானும் தேவர்களுடனும் மற்றஜனங்களுடனும் மத்தியானம் விருஷபலக்கினத்தில் ஸ்நானஞ்செய்து, விதிப்படி தானங்களையுஞ்செய்தார். பிறகு சகலமூர்த்தங்களையும் அலங்கரித்து சகல மரியாதையுடனும், வேதகோஷத்தோடும் ஊர்சுற்றிவந்து தத்தம் க்ஷேத்திரங்களில் கொண்டுபோய்சேர்த்தார். பிறகு நித்யபூஜை நிவேத்தியங்களுக்கு ஏற்பாடுசெய்துவிட்டு பிர்ம்மா பகவானின் அனுஞைபெற்று சகலதேவர்களுடன் பிரம்மலோகம் போய்ச்சேர்ந்தார். ஒவ்வொரு வருஷ மகஉத்ஸவத்தையும் பிர்ம்மாவே நேரில்வந்து உற்சவத்தை நடத்துவதாக ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

கும்பகோண க்ஷேத்திரத்திலுள்ள முக்கிய வாலயங்கள்.

(1) அரையோசனை விஸ்தாரமுள்ள இத்தலத்துள் கன்னியா தீர்த்தக்கரையில் வடபக்கத்தில் ஒன்பதுகன்னியர்களோடு விசுவநாதநும்.

(2) கீழ்கரையில் மேல்திசையை நோக்கித் தீர்த்தாபிமுகமாய் அபிழகேசநும்.

(3) மேல்கரையில் கிழக்குமுகமாய்க் கௌதமநாதநும்.

(4) இக்கன்னியாதீர்த்தத்திற்கு வாயுமூலையில், வில்வவநத்தில் பாதாள இலிங்கேசர் என்ற நாகேசுவரநும்.

(5) இந்நாகேசுவரருக்கு வாயுமூலையில் சோமேசநும்.

(6) இவருக்கு வாயுமூலையில் ஹேமரிஷிக்குத் திருமகளாகவந்த திருவை விவாகம்செய்யவந்து அராவணையிற் பள்ளிகொள்ளு மாராவமுதனும்.

(7) இவர்க்கு நேர்மேற்கில் குடமூக்கிற்றோன்றிய கும்பலிங்கேசநும்.

(8) கும்பஇலிங்கேசர்கோயில் மதிலுக்குத் தென்மேற்றிசையில், மாலதிவனத்தில், தூமகேதுமாமுனிவர் வேண்டுகோளுக்கிரங்கிக் காசியினின்றும் எழுந்தருளிய ஆதிவிசுவேசநும்.

(9) கும்பஇலிங்கேசருக்கு வடக்கில் காவேரியின் தென்கரையில் எழுந்தருளிய ஆதிவராகப்பெருமாளும்.

(10) வராகருக்கு வடமேற்கில் காசியபருக்கு தரிசனங்கொடுக்க எழுந்தருளிய இலக்ஷ்மீ நாராயணப்பெருமாளும்.

(11) காவேரிக்குவடபக்கத்தில் மதங்கர்க்கு காக்ஷிதந்த மதங்காபீஷ்ட வரதராஜனும்.

(12) வரதனுக்குத்தென்பால் காவேரிக்குத் தென்கரையில் சூரியனுக்கருளிய சக்கிரபாணியாகிய நரசிம்மனும்.

(இக்கோவிலுக்குச் சமீபத்தில் எந்தப் பேய்பிடித்தவர்வந்தாலும் உடனே அப்பேயாடுமென்று புராணங்கூறுகிறபடியே இப்பொழுதும்நடக்கிறது.)

இச்சக்கிரபாணிக்கு நேர்கிழக்கில் பாணபுரீசனும் கோயில்கொண்டு அர்ச்சாவிக்கிரகங்களில் ஸாந்நித்தியமாகவிருக்கின்றார்கள்.

(இவையன்றி இப்புராணத்துட் கூறப்படாத காளஹஸ்தீசுவரர், இராமஸ்வாமி, வரதர், சாரநாராயணர், வேதநாராயணர் முதலிய பலதேவாலயங்களும் இருக்கின்றன.)

கும்பகோணக்ஷேத்திரத்தைச்சுற்றி ஒருகுரோசத்திலுள்ள பஞ்சக்ஷேத்திரங்களாவன:—(1) மத்தியார்ச்சுனம், (2) திருநாகேசுவரம், (3) உருத்திராக்ஷவனம், (4) சுவாமிமலை, (5) பாடலவனம்.

1. மத்தியார்ச்சுன ஸ்தலமகிமை.

கும்பகோணத்திற்கு கிழக்கே இரண்டு குரோசதூரத்தில் விபண்டகர் என்கிற முனி 24 சதுர்யுகங்கள் பக்திசிரத்தையாய் அர்த்தநாரீசுவரரைக் காணவேண்டுமென்னும் ஆசையோடு தபசுசெய்துகொண்டிருந்தார். ஈசனும் அவர்தவத்திற்கிரங்கி ஆநந்தத்தையுடையராய் விருஷபாரூடராய் பிருகத்குசாம்பிகா சமேதராய்ச் சகலபரிவாரங்களுடனும் அவருக்குப் பிரசன்னமாகி அவர் இஷ்டத்தைப் பூர்த்திசெய்தனர். தைமாசம் பூசநட்சத்திரம் பௌர்ணமிதிதி மத்தியாணம் அபிஜித இலக்கினத்தில் அவருக்கு பிரத்தியட்சமாய் அவர் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து அவரால் பூசிக்கப்பட்டு அவ்விடத்திலேயே மகாலிங்கம் எனப் பெயர்பெற்று உகந்திருந்தனர். இந்த இடத்திலேயே காசியப இருஷியானவர் 12 வருஷம் பாலகிருஷ்ணனைக் காணவேண்டித் தவம்புரிந்து அவனைப்பிரார்த்திக்க ரமாபதி அவர் தவத்திற்கிரங்கி மனம்பூரித்து அர்ச்சுனம் என்று பெயருடைய மருதமரத்தினடியில் அவருக்கு பிரசன்னமானார். பிரசன்னமானஹரியைக்கண்ட காசியபர் ஆநந்தத்தினாற் பரவசமடைந்து பயித்தியங்கொண்டவனைப்போலத் துதித்துப் புகழ்ந்து கூத்தாடித் தோத்தரித்து அங்கேயே எழுந்தருளி உலகத்தாருக்கு அனுக்கிரகம்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வண்ணமே ஹரிஹரன் என்னும் இருவரும் உலகத்திற்கு உய்வுண்டாகும்வண்ணம் ஓர்மருதமரத்தின் இடைதோன்றினர். ஆனபடியால் அவ்வூருக்குத் திருவிடைமருதூர் என்றும்

மத்தியார்ச்சுனம் என்றும் பெயருண்டாயிற்று. (அர்ச்சுநம்=மருதமரம்) தை மாதம் பௌர்ணமி அபிஜித் இலக்கினத்தில் இந்தத்தலத்திலுள்ள காவேரியில் **கலியாணதீர்த்தத்தில்** ; ஸ்நாநம்செய்பவர் பிரமஹத்தியாதி பாதகங்களும் நீங்கி முக்தியடைவார்கள்.

மேஷத்தில் சூரியன் பிரவேசிக்குங்காலத்திலே (சித்திரைமாதப்பிறப்பிலே) மகாலிங்கத்தின் சந்நிதியிலுள்ள **காருண்ணியாமிருத** தீர்த்தத்திலும், ஈசாந்நியதிக்கிலுள்ள **காருண்ணியாமிருத** தீர்த்தத்திலும்; உரோமசனுக்கு ஞானம்கொடுத்ததும் கருநிறகாக்கையுடலை பொன்னிறமாக்கியதும் வாயு திக்கிலுள்ளதுமாகிய தீர்த்தத்தில் வைகாசிமாதத்திலும் ஸ்நாநம்செய்பவர்கள் எவ்வித பாதகத்தினின்றும் முக்தர்களாகி நற்கதியடைவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இத்தலம் கும்பகோணத்தைச்சேர்ந்த பஞ்சக்குரோச க்ஷேத்திரங்களிலொன்று. இத்தலத்திலுள்ள மூன்றுதீர்த்தங்களிலும் மூழ்கினோர் மோட்சத்தையடைவார்.

2. திருநாகேசுவர ஸ்தலம்.

கும்பகோணத்திற்கு அக்கினிமூலையில் ஒருகுரோசத்தில் **திருநாகேசுவரம்** என்னோர் ஸ்தலமுளது. அதில் ஆதிசேஷன் நூறுவருடம் தவம்செய்து நினைத்த பலனெல்லாமடைந்துபிறகு பதினாயிரம்வருஷம் தவம்புரிந்து **நாகவாவியென** ஓர் தடாகமியற்றி, அத்தடாகக்கரையில் எழுந்தருளியிருந்த பரமசிவனுக்கு **நாகநாதனென** பெயர்வைத்து, அவ்வூரின் தடாகத்தில்மூழ்கி நாகநாதனை தரிசித்தவர்க்கு சகலபாபமும் போகவேண்டுமென்றும், சிவசாயுச்சியபதம் தரவேண்டுமென்றும் பிரார்த்தித்து, அவ்வாறே வரம்பெற்ற நாகேசனாகிய ஆதிசேடனால் பூசித்த தலமாதலால் நாகேசுவரமெனப் பெயர் வாய்ந்துளது. இத்தலத்தில் கார்த்திகை சோமவாரம் ஆதித்தியன் பூசித்து மூழ்கி பெரும்பேறுபெற்றான். ஆதலால் அத்தீர்த்தத்திற்கு **ஆதித்திய தீர்த்தமென** பெயருளது. இத்தீர்த்தத்தில் கார்த்திகை ஆதித்தியவாரம்மூழ்கி நாகேசுவரனை பூசிக்கவேண்டும். தருமதேவதை அர்ச்சிராடி பேர்பெற்றதால் **தருமதீர்த்தமென்றும்** பெயர் உளது.

வாசுகி கார்த்திகை சோமவாரம்வந்து மூழ்கி முதல்யாமத்தில் நாகேசுவரரையும், இரண்டாம்யாமத்து சமிவநேசரையும், மூன்றாம்யாமத்து புன்னாகவனேசரையும் பூசித்து நாலாம்யாமத்தில் பாதலம்புகுந்து, இம்மூவரையும் நினைத்துத்துதித்து முக்திபெற்றான். ஆகையால் இத்தலத்திற்கு நாகேசுவரமென பெயருண்டாயிற்று என்றும் கூறுவர்.

திருநாகேசுவரம் என்னும்தலத்திற்கு தென்புறத்தில் அதிகசமீபத்தில் ஆகாசநகரமென்று பெயரையுடைய மூன்று உலகங்களிலும் பிரசித்திபெற்ற துளஸீவனத்தில் மார்க்கண்டேய மகரிஷியானவர் தனக்கு ஒரு பெண்மகவு வேண்டி மகாவிஷ்ணுவின் மார்பைத தனக்கு இடமாகக்கொண்ட கமலலோ

சனையாகிய இலக்ஷ்மியைக்குறித்து துதித்து ஆயிரவருஷம் நியமவிரதத்தோடு உவர்ப்பு முதலிய உருசிகளையும் கீரைமுதலிய பதார்த்தங்களையும் தள்ளிஉண்டு பகவத்தரிசனமே முக்கியமாகக்கொண்டு தவம்செய்தனர். அவருடைய தவத்துக்கு இரங்கி உலகமாதாவாகிய விஷ்ணுபத்னியும் ஓர் இளங்குழந்தையாய் அத்துளசீவனத்தின் ஒரு துளசிச்செடியினடியில் எழுந்தருள அக்குழந்தையைக்கண்ட மார்க்கண்டேயர் ஆனந்தபரவசனாய்த் தரித்திரன் கண்ட நிதிக்குவியலைப்போலக்கண்டு எடுத்துவந்து வளர்த்து வருநாளில் அப்பெண்ணின் ரூபலாவன்னியத்தைக்கண்டு "இப்பெண்ணுக்குத் தகுதியான புருஷன் எங்குளனோ பிரமாதிதேவர்களும் இவள் கட்டழகுக்கு ஒப்பாகார்கள். ஆதலால் இவளுக்குப் பதிவைகுண்ட பதியேயென்பதற்குச் சந்தேகமேயில்லை" என நிச்சயித்துக்கொண்டிருக்குநாளில் ஒருநாள் விஷ்ணுவே கிழப்பிராமணவேஷம்பூண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டு மார்க்கண்டேயரிடம்வந்தார். அவரைக்கண்டவுடன் மார்க்கண்டேயரும் எழுந்து எதிர்சென்று அர்க்கியபாத்திய ஆசமனியம்கொடுத்து அவர்பாதத்தைச் செவ்வையாய் அலம்பித்துடைத்துப் "பிராமணோத்தமா! தங்களுக்கென்ன விருப்பமோ அவற்றைக்கேட்கவேண்டும், மாத்தியான்னகாலம்வீணாகப்போகிறது" என்று கேட்டார். அதற்கு அந்தக் கிழப்பிராமணன் "ஓய் மகாரிஷியே நீர் நிரம்பநல்லவரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கோ சந்ததிகிடையாது; சம்சாரத்திலோ விருப்பமுள்ளவனாய் இருக்கிறேன்; உம்முடைய கன்னிகையை எனக்குக் கொடுக்கவேண்டும்; கிழவனாகிய எனக்கு உதவிசெய்வதற்கு வேறொருவரும் இல்லை; இப்பெண்ணால் எனக்கு மிக்க உபயோகமுண்டாகும்;" என்று வேண்டிய கிழப்பிராமணனையும் தனதுபெண்ணின் இளமைப்பருவத்தையும் யோசித்து, மனம்வருந்தித் தனது பெண்ணிடம்சேர்ந்து, "என் கண்மணியே! உன்னை இந்தக்கிழவனுக்குத் தானம்செய்வதால் நான் பெரும்பயனை அடைவேன்; இல்லாவிட்டால் அதிதியாகிவந்த இக்கிழவன் எனது புண்ணியங்களையெல்லாம் கொள்ளைகொண்டுபோய்விடுவான், இது உனக்குத் தெரிந்ததுதான், நான்செய்யும் காரியம் யாதொன்றும் தோன்றாமல் விழிக்கிறேன்" என்று கூறிய மார்க்கண்டேயரைநோக்கி, உலகமாதாவாகிய கமலை ஒன்றுமறியாத சாதாரணப் பெண்ணைப்போல் "என் ஐய! நானோ பிரௌடையாகாதயௌவனை (சிறுபெண்), வீட்டில் என்னை வேண்டிவந்திருப்பவரோ கிழவராயும், கோபத்தால் சிவந்தகண்களையுடையவராயும் இருக்கிறார். வீட்டுக்காரியங்களில் ஏதாவது கொஞ்சம்தவறினால் உடனே என்னை வைது அடிப்பார்; அதினால் நான் கோபித்துக்கொண்டு ஆறு, குளம், கிணறு, முதலியவைகளில் எங்கேயாவதுவிழுந்து இறந்துவிடுவேன்; நான் இறந்ததைக் கேள்வியுற்று நீரும் பிராணனைவிடும்படி நேரிடும். தன்பெண்ணை ஓரிடத்தில் விவாகம்செய்து கொடுப்பதாயிருந்தால் செவ்வையாக விசாரித்துக் கொடுக்கவேண்டுமாகையால், நீர் அந்தப்பிராமணனை உமக்கு உறவினர் எங்கேயிருக்கிறார்கள்? உம்வீடு எங்கே? என்று கேட்பதுடன், என்

பெண்சிறுமி, வீட்டுக்காரியங்களொன்றும் தெரியாதவளென்று சொல்லி அதற்கவர் என்ன மறுமொழி கொடுக்கின்றாரோ அப்படியேசெய்யுங்க" ளென்று கூறினள். இதை மறைவிலிருந்துகேட்ட கிழவனுகி யாசகத்திற்கு வந்த கமலக்கண்ணன் அம்மார்க்கண்டேயரை நோக்கி, "ஏ முனீந்திரா! எனக்கு உற்றார் இல்லை, பெற்றார் இல்லை, ஊர் இல்லை, வீடு இல்லை, எல்லாம் நீயே; எனக்குக் காசு பணம் கிடையாது, சம்சாரவாழ்க்கையில்மட்டும் விருப்பம் இருக்கிறது, எல்லாங் கருடாருடன் கருணையால் சீக்கிரம் கைகூடும்" என்றனன். இதைக்கேட்ட மார்க்கண்டேயன் சம்மதித்து வீட்டுக்குவந்து நடந்ததையெல்லாம் தன்பெண்ணுக்குச் சொல்ல, அப்பெண் "தாத! நீரென் செய்வீர் எனது பாக்கியப்படியே எல்லாம் நடக்கும் நான் ஏகாந்நாதனுகிய நாராயணனையே குறித்திருந்தேன், நீர் விதிப்படி காரியத்தைச் செய்யுமெனவும்" மார்க்கண்டேயர் மகாவிஷ்ணுவைத் தியானித்தார். உடனே கிழவராயிருந்த பகவான் தன்னுருவைக்காட்டி அவர்செய்யும் கன்னிகாதானத்தை தீர்த்தத்துடனேற்று, "ஏ மார்க்கண்டேய! உமது இஃடப்படியே நான் இங்கேயே இருக்கின்றேன். உமது பெண் இளந்தையாய் யிருப்பதால் வீட்டுக் காரியங்கள் தெரியாதிருக்குமென்றீரே அப்பெண் எப்படிச்செய்தாலும் நான் பொறுத்திருப்பேன்" என்றார். மார்க்கண்டேயர் ஆனந்தக்கடலில் ஆழ்ந்து ஆநந்தபாஷ்பம் கண்ணினின்றும் தாரை தாரையாய்ச்சொரிய உடம்பு புளகிக்க வாயாரவாழ்த்தித் தோத்தரித்து "என்ஆண்டவனே! என்மகள் எனக்கு உப்பில்லாப்பண்டங்கள் விருதத்திற்காகச் சேகரித்தவளாதலால் அவட்கு அதுதான்தெரியும். நீர் அதை உகந்துகொண்டு உப்பிலியப்பனென இத்தலத்திலேயே எழுந்தருளி இருக்கவேண்டு" மெனப் பிரார்த்திக்க, அவ்வாறே வீற்றிருக்கின்றார்.

இவ்வூருக்குத் திருவிண்ணகரமெனவும் உப்பிலியப்பன் கோயிலெனவும் பெயர்வழங்குகின்றது.

3. உருத்திராட்சவன மகிமை.

கும்பகோணத்திற்குத் தென்மேற்குமூலையில் அரைக்குரோசத்தில் உருத்திராட்சவனம் ஒன்றுளது. அது பரமசிவனுல் ஸ்தாபிக்கப்பட்டது. முப்பத்துமுக்கோடி தேவதைகளும் இலைகளாகவும் இருஷிகளும் கந்தருவர்களும் பெருங்கிளைகளாகவுங் கின்னரர்கள் சிறுகிளைகளாகவும், விசுவேதேவர்களும் சாத்தியர்களும் வசுக்கள் எண்மரும் மருத்துக்களும் அவ்விருக்ஷத்திலுள்ள பக்ஷிகளாகவும், ஆணிவேர் பிரமனுகவும், பன்னிரண்டு சூரியர்களும் சுற்றுவேர்களாகவும், தேவஸ்திரீகள் மரத்தின் பட்டையாகவும் வந்துசேர்ந்து எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். உலகத்திற்கு மங்களத்தை உண்டாக்குகிற சங்கரன் அந்தமரத்தடியில் வசித்துக்கொண்டிருக்கிறார். முனிவர்களால் இடப்பட்டசாபத்தால் மிகுந்த தாபமுற்ற இயமன் அத்தலத்தையடைந்து சிவனது சூலத்தால் செய்யப்பட்ட தீர்த்தத்தைப் புதுப்பித்து

அதற்குத் தன்பெயரிட்டு இயமதீர்த்தம் என்று வழங்கும்படிசெய்து, தேவர்களைவருவித்து ஆவணிமாதம் அசுவதி நட்சத்திரத்தில் உத்ஸவாரம்பம்செய்வித்து ஒன்பதுநாள் உற்சவம்நடத்தி கடைநாளாகிய அமாதிதி மகநட்சத்திரத்தில் இயமதீர்த்தத்தில் தீர்த்தமளித்து அத்தீர்த்தத்தில் பதினாயிரம்வருஷம் தவமியற்றித் தன்சாபம் தவிர்ந்து அநேகவரங்களைப்பெற்று விசுவகருமாவினால் பட்டணம் நிருமாணம் செய்வித்து முக்திபெற்றான்.

சூரசேனனென்றவொருவன் ஓர் பிராமணனைக்கொன்றதோஷத்தினால் பீடிக்கப்பட்டு எல்லாவிடங்களிலும் சென்றும் நீங்காத பிரமஹத்தி, இத்தலத்திற்றங்கி ஸ்நாநம் தரிசனம் முதலியவைகளைச்செய்து ஏராளமான அன்னதானஞ்செய்ததால் நீங்கி முக்தனானான்.

எக்கியனென்னும் ஒரு சாதுப்பிராமணன் முன்ஜன்மத்திய தீவினையால் முயலகநோயை (அபஸ்மாரவியாதி, சித்தப்பிரமை) அடைந்து இத்தலத்தில் செய்த அன்னதானத்தால் அந்நோய்தவிர்ந்து சவுக்கியமடைந்தான்.

சுபுண்ணியன் என்னும் ஓர்பிராமணன் தனது குருபத்நியின் கற்பைக் கெடுத்த பெரும்பாதகத்தை அத்தலத்தில் அன்னதானஞ்செய்து தொலைத்தான்.

தினகரனாகிய **சூரியன்** சாத்திரங்களால் விலக்கப்பட்ட கள்ளையருந்தியதாலுண்டான பாதகத்தை அந்தத்தலத்தில் தான்செய்த அன்னதானத்தால் தொலைத்தான்.

இந்திரனது **ஐராவதம்** துர்வாச இருஷிசாபத்தால் இழந்த தனது வெண்மைநிறத்தை இத்தலத்தில் இந்த இயமதீர்த்தத்தில் மூழ்கிச் சாபம்நீங்கியதாற்பெற்றது.

இவ்வாறு ஐராவதம் பூசித்தலால் ஐராவதநகரமென்று பெயர்பெற்றதன்றியும் அவ்விலிங்கத்திற்கும் **ஐராவதேசுவர**னென்றும் பெயருண்டாயிற்று.

தாரனென்னும் ஓர் அசுரன் தேவர்களைஜயித்து, சாவு இல்லாமலிருக்க வேண்டுமென்று விரும்பி, ஐராவதீசுவரனைப் பூசித்து வரம்பெற்றனன். அவனுடைய நூறுமனைவிகளும் அவரைப்பூசித்து நினைத்தவரங்களைப்பெற்று சிவலோகம் அடைந்தார்கள். தான்பூசித்தலால் இத்தலத்திற்கு **தாரேசுவரம்** எனப் பெயருண்டாயிற்று. (இது தாராசத்திரம்.)

அவன்மகன் மேகதாரனென்பவன் வைகாசிமாதத்தில் ஐராவதேசுவரனுக்கு உற்சவம்செய்து, அவனடிபணிந்து இன்னும் அத்தலத்தைவிட்டு நீங்காமலே இருக்கின்றான். இத்தலத்தில அன்னதானஞ்செய்து பெரும்பாதகங்கள் தொலைந்திருப்பதை அறிந்து, பிற்காலத்து அரசரும் அவ்விடத்து அன்னசத்திரம் ஏற்படுத்த இன்னும் இவ்வன்னதானம் நடந்தேறிக்கொண்டு வருகிறது.

4. சுவாமிமலை ஸ்தலம்.

கும்பகோணத்தின் வாயுமூலையில் ஒரு குரோசதூரத்தில் சுவாமிமலை யென்று ஓர் ஸ்தலமுளது. அம்மலையின்படிகள் பிரபவாதிவருஷ தேவதைகளாம். அம்மலையின் நாற்புறமும் இருது தேவதைகள் இருக்கின்றார்கள். அம்மலை யேறுவோர் சுவாமியைத் தியானித்து வருஷதேவர்களைத் துதித்துப் படிக்குப்படி தேங்காயுடைத்து மலைமீதுள்ள சுவாமியை வணங்கிப் பின்பு கீழுள்ள இலிங்கத்தைப் பூசிப்பதால் நினைத்தபயனை அடைவார்கள். கார்த்திகைமாதம் பௌர்ணமியில் அபிஷேகஞ்செய்வித்துப் பூசித்துவணங்குகிறவர்களும் சித்திரைமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியில் அங்கப்பிரதட்சணம் செய்பவரும், வைகாசிமாதம் பௌர்ணமியிலும் தைமாதம் பூசத்திலும் குமார தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து குமரனைப் பூசித்தவரும் நினைத்தபயனையெல்லாம் அடைவர். கேகய நாட்டரசன் சிவத்துரோகம் செய்ததால் தீராத வாதநோயடைந்து ஜாபாலியின் வார்த்தையால் தைப்பூசத்தில் நீராடிக் குமரனுக்குப் பால்திருமஞ்சனஞ் செய்வித்து, அவரைப்பூசித்து வணங்கியதால் அந்நோய்தீர்ந்து, அத்தலத்தை திருப்பணிமுதலியவைகளால் சிறப்பித்துச் சுவாமிக்கும் மிகுந்த ஆபரணங்கள் செய்வித்தான். அப்புண்ணியத்தால் அவன் கார்த்தவீரியன் என்னும் புத்திரனையடைந்தனன். இங்கு அங்கப்பிரதக்ஷணம்செய்வது விசேஷம்.

5. பாடலவன க்ஷேத்திரம்.

கும்பகோணத்தின் ஈசான்னியபாகத்தில் பாடலவனம் என்னும் ஓர்தலமுண்டு. அத்தலத்தில் சிவன் அழகிய உருவத்துடன் சான்னித்தியமாயிருப்பதால் தேவர்களெல்லாரும் அவரை ஸ்தோத்திரஞ்செய்து துதிக்க வீற்றிருக்கின்றனர். இத்தலத்தில் அகஸ்யமுனிவர்சொற்படி சுவர்ணரோமனென்பவன் பரமனை யருச்சித்துப் பெருமையடைந்தான். சித்திரைமாதம் பௌர்ணமியில் வாலகில்லியர் பூசித்து, சாயுச்சியமடைந்தனர். சூரசேனன் என்ற ஓர் அரசனும், குபேரனும் பூசித்துப் பெருமையடைந்து குபேரன் சிவனுக்குத் தோழனானான். வங்கதேசாதிபதி சோமகேது என்பவன் அகஸ்யமுனிவர் சொற்படி பரமனை அருச்சித்து ஸ்வர்ணரோமனென்னும் மைந்தனைப்பெற்றான். இத்தலத்தில் பிரமதீர்த்தமென்று ஒரு புண்ணியதீர்த்தமிருக்கின்றது. தீர்த்தத்திற்குத் தென்பால் புன்னைகவனம் ஒன்றுளது. அப்புன்னைகவனத்தில் ஸ்ரீபூமிநீலா ஸமேதனாய் காலவஇருஷிக்கு வரமளித்த வேங்கிடேசப்பெருமாள் ஒருவர் எழுந்தருளியிருக்கின்றனர். இவரை ஒருக்கால் தரிசனம்செய்பவர் இந்தப் பஞ்சக்குரோச க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைசெய்வதாலுண்டாகும் பலனனைத்தும் ஒருங்கேயடைவார்கள். கும்பகோணயாத்திரையை மேற்கொண்டு செய்கிறவர்களுக்கு இப்பஞ்சக்குரோச க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைசெய்வதே முக்கியமாகும். சிவன் விஷ்ணு முதலியோர்களுக்கு அத்தியந்தம் பிரியஸ்தானங்களாகிய இந்த க்ஷேத்திரயாத்திரையால் இஷ்டமான

பலன்களெல்லாம் அடையலாம். இவற்றை ஒருதரம் தரிசிப்பதாலும், நினைப்பதாலும், உச்சரிப்பதாலும், இவற்றில் வாசம்செய்வதாலும் மறுஜன்மம் இல்லாதவராய் முக்தியடைகிறார்கள்.

இவ்வைந்து க்ஷேத்திரங்களும் கும்பகோண க்ஷேத்திரத்திற்கு அங்க க்ஷேத்திரம் எனப்படும். இவற்றைத்தவிரப் பதின்மூன்று க்ஷேத்திரங்கள் பிரத்தியங்க க்ஷேத்திரங்களாம். இவற்றைப் பின்வரும் சுலோகத்தாலறிக.

"மத்தியார்ச்சுனம் சம்பககாநநஞ்ச சிவாக்ஷகாம் தாரகுஹாசலௌச,
ஸ்ரீபாடலீகாநந முத்தமோத்தமம் குரோசம்விது: பஞ்சகமேததேவ.'

"மத்தியார்ச்சுநேச திரிபுராதிப பைரவேச நாகேச ரக்தகதளீச்சுவரகண்ணுவநாதான், சுதாகடேசத்துவய பஞ்சவர்ணபுரீச சக்தீச யமேசுவராச்ச, ஹேரம்ப ஷட்வக்த்ர திநேசநாத சாக்ஷீச கோடீசுவர பாடலீசான், நமாமி பானுதிபதிஞ்சசந்ததம் ருணத்திரயச் சேதநஹேது பூதான்."

இந்தச்சுலோகத்துட் கூறிய பதினெண் க்ஷேத்திரங்களுள் பதின்மூன்று க்ஷேத்திரங்கள் பிரத்தியங்க க்ஷேத்திரங்களென்று சொல்லப்படும். ஆனால் இக்கும்பகோண யாத்திரைசெய்வோர் முதலில் அங்கக்ஷேத்திரங்களாகிய ஐந்தையும்மட்டும் வலமாகச்சுற்றிலும் ஒருதரம் யாத்திரைசெய்து பிறகு பதினெண் ஸ்தலங்களையும் இரண்டாந்தரமாக யாத்திரைசெய்துகொண்டு வரவேண்டுமென்று புராணத்துட் கூறப்பட்டுளது.

"பஞ்சக்குரோசந்துப் பிரதமம் துவிதீயம் துவிநவஸ்தலம்
பிரதமாவரணஸ்யாஸ்ய யாத்திராம் க்ருத்வா ஸுபக்திபி:
துவிதீயாவரணஞ் சைவ வ்ரஜேச்சைவ தத: பரம்"

அதன்பின்பு கும்பகோணத்தலத்துக்குள்சென்று மகாமகவிரதத்தை விதிப்படிசெய்து, மகாமக தீர்த்தத்தில் நீராடித் தானங்களைச்செய்து பிறகு அத்தலத்திலுள்ள சைவ, வைஷ்ணவ ஆலயங்களுக்குச்சென்று மூர்த்திகளைப் பூஜைசெய்விக்கவேண்டும்.

தீர்த்தங்கள்.

இவ்வுலகத்தில் புண்ணிய தீர்த்தங்களாய் விளங்குகின்றவை கணக்கில்லாதனவாய் இருப்பினும் அவற்றுள் முக்கியமானவை, கங்கை, யமுனை, சரசுவதி, கோதாவரி, நருமதை, சிந்து, காவேரி, வேகவதி, சரயு என்னும் ஒன்பது நதிகளேயென அநேக இதிகாசபுராணாதிகளில் கூறப்பட்டன. அவற்றுள் மூன்று உலகினும் செல்கின்ற காரணத்தால் திரிபதகையென்றும், சந்ஹு மகாரிஷியின் யாகத்தை யழிக்க அவர் உண்டு பகீரதன் வேண்டுகோளுக் கிரங்கிப் பிறகு காதால் விடுத்தலால் பாகீரதியென்றும், பெயருடையதாகிக் காசியிலோடுகின்ற கங்கையினும் மேலான காவேரி, சையமலைதொடங்கிச் சமுத்திரம்வரையில் ஓடுகின்றதாயினும், இதில் மூன்றிடங்கள் விசேஷமானவை.

அவை, திருவரங்கம், கும்பகோணம் காவேரிசங்கமமாகும் இடம், என்றும், இம்மூன்றிலும் சங்கமுகத்தினும், திருவரங்கமும் அதினும் கும்பகோணம் விசேஷமானதென்றும் முன்கூறியுள்ளது.

> "திருஷ்ஸ்தா ஸ்ரேஷ்டஸாதேவிதுர்லபாஹி கலௌயுகே
> ஸ்ரீரங்கே கும்பகோணேச காவேர்யா: ஸங்கமேததா,
> தத்ராபிதுர்லபாப் ப்ரோக்தா கும்பகோணே முனீச்சுவர

என்று கூறியிருப்பதுடன் காவேரிநீரிற் ஸ்ரேய்ந்துபடிந்தகாற்று எந்ததேயத்தில் செல்லுகின்றதோ அத்தேசத்துள்ளார் யாவரும் முக்தியடைகிறார்கள்; ஆகையால் அக்காவேரி தீரத்திலேயே வசிப்பவர்களுக்கு என்னபாதகந்தானுண்டாகும்? ஒரு பாதகமும உண்டாகவேமாட்டாது என்றும், "காவேரி தோயமாச்ருத்தியவாதோயத்ர ப்ரவர்த்ததே தத்தேச வாஸிநாம் முக்தி: கிமு தத்தீரவாஸிநாம்" என்றும், இன்னும் பலவாருகவும், பிரமாண்டம், பிரமகைவர்த்தம், ஆக்கினேயம் சேஷதருமம் முதலிய நூல்கள் கூறுகின்றன. இதுவுமன்றி,

> அந்யக்ஷேத்திரேக்ரதம் பாபம் புண்ணியக்ஷேத்ரேவிநச்யதி
> புண்ணியக்ஷேத்திரேக்ரதம் பாபம் வாராணஸ்யாம் விநச்யதி
> வாராணஸ்யாம் க்ரதம்பாபம் கும்கோணே விநச்யதி
> கும்பகோணேக்ரதம் பாபம் கும்பகோணே விநச்யதி

சாதாரணமாய் எல்லா இடங்களிலிருந்தும்செய்யும் பாவங்கள் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு வந்தால் தீர்ந்துவிடும், புண்ணிய க்ஷேத்திரங்களிலிருந்து செய்யும் பாபம் காசியில் தீரும், காசியிலிருந்து செய்யும் பாபம் கும்பகோணத்திற் றீருமென்றும், கும்பகோணத்திலிருந்து செய்யும்பாபம் கும்பகோணத்திலேயே தீருமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளுக்கெல்லாங் காரணம் இக்காவேரிநதியே.

இக்காவேரிநதி அல்லாமல் வேறு பலதீர்த்தங்கள் இங்கு இருக்கின்றன. அவைகள் ஒன்றைவிட ஒன்று அதிகமேன்மையுடையதாகவே இருக்கின்றன. அவைகளைப்பற்றிக் கும்பகோண தலபுராணத்தில் விரிவாகக் கூறியிருப்பினும், சிறிதளவுஇதில் கூறப்படுகின்றது.

முதலில் பரமனது திருவுளப்படி அமுதம் தங்குவதற்குப் பூமியிடங்கொடுத்ததாலாகிய அமுதவாவிகள் இரண்டும் இவையன்றிக் காவேரிநதியும் ஒன்றிருக்கின்றதென்று முன் சொல்லப்பட்டிருக்கின்றது. மகாமக தீர்த்தத்தில் முன்சொன்ன ஒன்பது தீர்த்ததேவதைகளும் தங்கள் தங்கள் பெயரால் ஒவ்வொரு தீர்த்தம் உண்டாக்கி அவற்றில் நீராடுவோர்க்குக் கணக்கில்லாப் புண்ணியத்தையும் கொடுக்கிறார்கள். இந்திராதி திக்குபாலகர்களும் தங்கள் தங்கள் திசையில் தங்கள் தங்கள் பெயரால் ஒவ்வொரு தீர்த்தமும்

பிரமன் வடக்கு திக்கில் தன்பெயரால் ஒரு தீர்த்தமும் உண்டாக்கி பிரமஹத்தி முதலிய மகாபாதகங்களையெல்லாம் போக்குகிறார்கள். அத்தீர்த்தங்கள் இருக்கும்முறை அடியில் கூறப்படுகிறது.

மகாமக தீர்த்தத்திலுள்ள தீர்த்தங்களின் ஸ்தானங்கள்.



மத்தியில் கன்னியாதீர்த்தமும் இதற்குக் கிழக்கில் இந்திரதீர்த்தமும், தென்கிழக்கில், அக்கினிதீர்த்தமும், தெற்கில், இயமதீர்த்தமும், தென்மேற்கில், நிருதிதீர்த்தமும், மேற்கில் வருண தீர்த்தமும், வடமேற்கில் வாயுதீர்த்தமும், இதற்குக்கிழக்கில் பிரமதீர்த்தமும், அதற்குக்கிழக்கில் குபேரதீர்த்தமும், வடகிழக்கில் ஈசானியதீர்த்தமும் இருக்கின்றன. இவை யன்றி இந்திர தீர்த்தத்திற்கும், அக்கினிதீர்த்தத்திற்கும் இடையில் கோதாவரியும், அக்கினி

க்கும் இயமனுக்கும் இடையில் காவேரியும் இயமனுக்கும் நிருதிக்கும் இடையில் கன்னியாகுமரியும் நிருதிக்கும் வருணனுக்கும் இடையில் வேகவதி என்கிற பாலாறும், வருணனுக்கும் வாயுவுக்கும் இடையில் சரயுவும், வாயுவுக்கும் பிரமதீர்த்தத்துக்கும் இடையில் கங்கையும், பிரமதீர்த்தத்திற்கும் குபேரதீர்த்தத்திற்கும் இடையில் யமுனையும், குபேரதீர்த்தத்திற்கும் ஈசான்னிய தீர்த்தத்திற்கும் இடையில் நருமதையும், தீர்த்தரூபிகளாய் நின்று நீர் ஆடுவோர் எண்ணியபடியெல்லாம் வரமளித்துக்கொண்டு எப்பொழுதும் சான்னித்தியமாயிருக்கிறார்கள். இவை தவிற கன்னியாதீர்த்தத்தைச்சுற்றி 66 கோடி தீர்த்தங்களும் உள்ளன.

இத்தீர்த்தம் ஒவ்வொன்றிலும் ஆடுவோர்களுக்கு உண்டாகும் பயனெல்லாம் ஒருங்கே தரக்கூடியதாகிய, மகாமகதீர்த்தம் புருடர்களுக்கும், விசேஷமாகப் பெண்களுக்கும், நினைத்த பயனெல்லாம் கொடுக்கத்தக்கது. பெண்கள் தாங்கள் * காகவந்தியாகவேனும், கதளீவந்தியாகவேனும், மிருதவந்தியாகவாயினும் இருந்து, மக்கட்பேற்றை விரும்பி தங்கள் மலட்டுக்குணம்நீங்க எண்ணுவார்களாகில், அம்மகளிர் பக்திச்சிரத்தை யுடையவர்களாய் சில கன்னிகைகளுடன் கன்னியாதீர்த்தம் சென்று, தாம்நீராடி ஒன்பது கன்னிகைகளுக்கு நீராட்டிச் சந்தனம், மஞ்சள், குங்குமம் முதலியவைகளால் அக்கன்னிகைகளைப் பூஜித்து, பாயஸங்கொடுத்து, நல்ல உண்டியளித்து தனித்தனியே ஒன்பதின்மருக்கும் தட்சணையுடன் தாம்பூலம்கொடுத்து, மூன்றுதரம் நமஸ்காரம்செய்யவேண்டும். பிறகு அவர்களிடம் விடைபெற்றுக்கன்னியாதீர்த்த மடைந்து, ஒன்பது சுமங்கலிகளுக்கு எண்ணெயிட்டு முழுக்காட்டி மஞ்சள், குங்குமம், சந்தனம், புஷ்பம் முதலியவைகள் கொடுத்து உபசரித்துத் தட்சணைகொடுத்து ஏதேனும் பழங்கள் அவர்களுக்கு மனத்திருப்தி யுண்டாக்கும்படி யளித்துத் தாமும் எண்ணெயிட்டு முழுகிப் பாயஸம்மட்டுமுண்டு, நவகன்னியர் கோயிலுக்குட்சென்று, நூறுமகாதீபம்வைத்து தனித்தனி ஒன்பது கன்னிகைகளுக்கும், ஒன்பது ஒன்பது தெங்காய் உடைத்துச்சமர்ப்பித்து, அக்கன்னியர்களுக்குத் தங்களால் இயன்றமட்டும் உற்சவம் செய்யவேண்டியது. பிறகு தம் தம்சொந்த வீட்டிற்குவந்து, தரையில்படுத்து உறங்கவேண்டியது. இவ்வாறு நான்கு வெள்ளிக்கிழமைகளிலாவது அல்லது நான்கு செவ்வாய்க்கிழமைகளிலாவது, கார்த்திகை சோமவாரங்களிலாவது, ஆவணிமாதத்தில் அல்லது புரட்டாசியிலாவது, வரும் வளர்பிறை நவராத்திரியிலாவது, தநுர்

---

* வந்தி=மலடி; காகவந்தி=காகம் குயிலினது முட்டையையும் குஞ்சையும் தன்குஞ்சுபோலவளர்ப்பதுபோலத் தான்மக்களைப் பெறாளாகிக் குழந்தையாசையால் பிறர்குழந்தையை வளர்ப்பவள்; கதளிவந்தி=வாழை ஒரே தார்போடுவதுபோல ஒரேகுழந்தையைப் பெறுபவள். மிருதவந்தி=எத்தனை பெற்றாலும் ஒரு குழந்தையேனும் உயிரோடிராமல் இறந்துபோகும் குழந்தைகளை யுடையாள்.

மாதத்திலாவது அல்லது நித்தியமாவது பூஜைசெய்தால் மக்கட்பேறு உண்டாகுமென்பதற் கையமேயில்லை. தேசாந்தரத்திற்குப் போயிருந்தாலும், தீபாந்தரத்திலிருந்தாலும், சுக்கிராமத்திலிருந்தாலும் அல்லது பட்டணத்திலிருந்தாலும், இம்மாதிரி ஒன்பது கன்னியாவிக்கிரகங்களைச்செய்து, அவைகட்குப் பூஜைசெய்து, முன்சொன்ன விதமாகச் சுமங்கலிகளைப் பூசைசெய்தால் மக்கட்பேறுண்டாகுமென்பது நிச்சயம்.

நெடுநாள் பருவமடையாமல் இருக்கிறபெண்கள் முன் சொன்னபடி பூசைசெய்தால் பக்குவத்தையடைந்து, புருஷனைச்சேர்ந்து நல்லபிள்ளைகளைப்பெற்றுத் தன்கணவன், மாமன், மாமி, நாத்திமுதலியவர்களுக்கு அன்புடையவள் ஆவாள். (இது இப்பொழுதும் நடந்துக்கொண்டு வருகிறது, இதற்கு மாமகப்பெண்களுக்குப் படைத்தல் என்றுபெயர்) கணவனை விரோதியாகிய பெண் இப்படிப் பூசைசெய்தால் கணவன் விரோதம் நீங்கி அவனைச்சேர்வாள்.

ஆடவர்களோ அல்லது ஸ்திரிகளோ எவ்விதத்தீராத நோயுடையவர்களானாலும் இத்தீர்த்தத்தில் நீராடி நவகன்னிகைகளுக்கு விதிப்படி பூசைசெய்தால் ரோகம் தீர்ந்து ஆரோக்கியமுடையவராய், அறிவையும் பக்தியையும் எங்கேபோனாலும் ஜயத்தையும் அடைகிறார்கள். இளமைப்பருவத்தில் கணவனை இழந்தகைம்பெண், இதில் நீராடி நவகன்னிகைகளுக்குவிதிப்படி பூசைசெய்வாளாகில் எல்லாப்பாவங்களும் நீங்கி மறுஜன்மத்தில் தன்கணவனுடன் செவ்வையாகவாழ்வாள்.

இத்தீர்த்தம் சகல புருஷார்த்தங்களைக்கொடுக்கும்; எல்லா யாகபலனையும், எல்லாத்தீர்த்தங்களிலும் படிந்தபலனையும், தரும். எல்லாநோயையும் நீக்கத்தகுந்தது. இதை ஒருதரம் பிரதட்சணம்செய்தால் மேருவைச்சுற்றிப் பூமியை நூறுதரம் பிரதட்சணம்செய்த பலனையும், ஒருதரம் நமஸ்காரம் செய்தால் கேசவனையும், சிவனையும் நூறுதரம் நமஸ்காரம்செய்த பலனையும் அடைவார்கள்.

ஒருபுருஷன் மக்கட்பேற்றைவிரும்பினால், மாசிமாதத்தில் ஓர்நாளில் ஐந்துதரம் ஸ்நானம்செய்து ஒவ்வொருதடவைக்கும் உலர்ந்ததுனி உடுத்திக்கொண்டு விபூதிஅல்லதுநாமம்தரித்து, ஸ்நானாங்கமாக மூன்றுதரம் அர்க்கியம்கொடுத்து நல்லபழங்களைப் பிராமணர்களுக்குத் தானம்செய்து, பிறகும் முன்சொன்னபடி நீராடுவானானால் நல்லபுத்திரனை யடைவான். இது உண்மை.

எவன் இத்தீர்த்தத்தில் நியமவிதிப்படி நீராடுகிறானோ அவன் தனது ஏழுகுலங்களையும் பரிசுத்தமாக்கிக்கொள்ளுகிறான்; ஏழுகுலங்களாவன:— தன்குலம், 2 தன்பெண்ணைக்கொண்டவன்குலம் 3 தாயின் தகப்பன்குலம், 4 சிறியதாயின் குலம், 5 உடன்பிறந்தாள்குலம், 6 தந்தையொடு பிறந்தவள்

குலம் 7 தன்மாமன்குலம், ஆக எழு. (சுலோகம்) பிதுருமாதாமஹாச்சைவ ஜாமாதா பகினீத்திரயம், சுவசுரேணயுதா:ஸப்தகோத்திராஸ்து பரிகீர்த்திதா: (பகினி=உடன்பிறந்தாள்) மூன்றுபகினியென்பது—தன்னுடன்பிறந்தாள்தாயுடன்பிறந்தாள் தகப்பனுடன்பிறந்தவள்,எனமூவர்.

ஸ்நாநம்செய்யும் நியமவிரதம்எப்படியெனில், பிரமசாரி-கிரகஸ்தன் வாநப்பிரஸ்தன், சந்நியாசி என்கிற நான்கு ஆசிரமத்தாரில் யாவராயினும் முதல்நாள்) தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்து, பிராமணர்களைக்கொண்டு புண்ணியாகவாசநம் செய்வித்து, அந்த தீர்த்தத்தால் தன்னைப்புரோக்ஷணம் செய்து சுத்தியாக்கிக்கொண்டு, அதில்சிறிது நீர் உட்கொண்டு, பஞ்சகவ்வியம்சேர்த்து உண்டு, பிறகு சில அந்தணர்களுக்கு அறுசுவை யொடுகூடிய அன்னம், பாயஸம், பக்ஷணங்கள் முதலியவைகளை வேண்டிய அளவு உண்பித்து, தட்சிணை தாம்பூலம், நூதனவஸ்திரம் முதலியவைகொடுத்து, சந்தநம் புஷ்பம் முதலியவைகளால் செவ்வையாகப் பூசித்து வணங்கி அவரிடத்தில் அநுக்கிஞையைபெற்றுக் குருவினிடம்சேர்ந்து அவரையும் இவ்வாறுபூஜித்து வணங்கி அவரிடத்தும் உத்தரவு பெற்று. அதைச் சிரங்கொண்டு—கிரஹஸ்தனுயின், புத்திரமித்திர களத்திரவாகனாதிகளிடத்தில் அதிகப்பற்றில்லாதவனுய் க்ஷேத்திரம், தீர்த்தம், மூர்த்தி இவைகளின் வைபவங்களைச் செவ்வையாய்த் தெரிந்தவரிடத்தில்கேட்டு, உப்பு, புளி உரப்பு முதலிய உருசிகளையும், தாம்பூலம் க்ஷௌரம் பெண்போகம் முதலியவைகளையும், நகம்கிள்ளல் கெட்டவருடன் சேர்ந்து அவருடன் பேசுதல் உருசியான பட்சணம் பழையசாதம் சூத்திரர் ஸ்திரீ நாய் இவர் உண்ட மீதிஅன்னம் முதலியவைகளை நீக்கி, ஒருநாளைக்கு ஒருதரமே உண்டு தரையிற்படுத்து உறங்கி, மறு காலையில் மகாமக தீர்த்தம்சென்று ஸ்நாநம் செய்து பிராமணர்களைவணங்கி, தங்கள் வழக்கப்படி ஜபங்களைச்செய்து நித்தியகருமங்களாகிய அநுஷ்டாநங்களை முடித்து அவ்விடத்திலுள்ள ஆலயங்களில் தெய்வத்தைவணங்கி பிராதஸ்நாநமும் நித்யகர்மமும் செய்யவேண்டியது. நடுப்பகலிலும் இவ்வாறு நீராடி தேவதர்ப்பணங்களையும் தீர்த்தத்தில் செய்து தேவயக்கியம், பூதயக்கியமுதலிய பலி ஹோமங்களைச் செய்து பிராமணர்களுக்கு அன்னமிட்டு, தானும் ஓரேதரம் ஹவிஸ் உண்டு, அன்று இரவும் தரையில் படுத்து, நித்திரைசெய்து எழுந்து, மூன்றும் நாள் காலையிலும் தீர்த்தக்கரை சென்று, ஸ்நாநம் செய்து, தீர்த்தக்கரையிலுள்ள தேவதைகளையும், தீர்த்த தேவதைகளையும் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து, பூஜித்து, உபசரித்து, அவர்கள் அநுக்கிஞையைபெற்று, நவகன்னியர்கள் இருக்குமாலயத்திற்குச்சென்று அவர்களை விதிப்படி பூஜித்து அவ்விடத்துள்ள அரசமரத்தை வலம்வந்து, தீர்த்ததேவதைகளை நமஸ்காரம் செய்து விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு, நல்லபழங்கள், பொன், வெள்ளி முதலிய பொருள்களை கைநிரம்பக்கொண்டு குளத்தில் இட்டு, நீராட வேண்டியது. சக்தியிருக்குமாகில், இரண்டு சுளகு (முறம்) களில் இரண்டு இரவிக்கைத் துண்டுகள்வைத்து அதன்மீது சந்தனம், மஞ்சள், குங்குமம்

புஷ்பம், பாக்கு வெற்றிலை; பொன், வெள்ளி முதலியநாணயங்கள் வைத்து தீர்த்தமத்தியில் போட்டு நீராடலாம். நீராடியபின் ஸ்நாநாங்கமான தருப்பணங்களைச்செய்து, உலர்ந்த உடையுடுத்து, புண்டிரங்களைத்தரித்து, தங்கள் தங்கள் அநுஷ்டானப்படி ஜபம்செய்து நவகன்னியர் சன்னதிக்கு வந்து அவ்விடத்திலுள்ள அரசவிருக்ஷத்தை பிரதக்ஷணம் செய்து, அம்மரத்து நிழலிலிருந்து, ஒன்பது கன்னிகைகளுக்குத் தனித்தனி முன்சொன்னபடி இவ்விரண்டு முறங்களில் பதார்த்தங்கள் நிறைத்து அவர்களைச்செவ்வையாகப் பூசித்து, தக்ஷிணை, தாம்பூலம், பாயஸம் முதலியவைகளை வாயனங்கொடுத்து, அவர்களை உண்ணச்செய்ய வேண்டியது. பிறகு பிராமணர்களைச்சாப்பிடச்செய்து, கும்பேசுவரர் சார்ங்கபாணி, சக்கரபாணி முதலியோர் ஆலயத்துக்குச்சென்று, அவர்களை பிரதட்சணநமஸ்காரம்செய்து அர்ச்சனை செய்வித்து வீடுசேர்ந்து அன்றைக்கும் ஒருதரம் புசித்துத் தரையிலுறங்க வேண்டியது.

நான்காம்நாள் காலையில் எழுந்து பிதுர்தேவதைகளை உத்தேசித்து பக்தியோடு சங்கல்பம் செய்து தலைமட்டும் க்ஷௌரம் செய்துகொண்டு முழுகிப் புண்டிரம்தரித்து சக்திக்குத்தக்கபடி பொன்தானஞ் செய்து பால்பழமுண்டு அன்றைய தினம் அன்னம் புசியாமலிருந்து, ஐந்தாநாள் பிதுர் தேவதைகளுக்குப்பிண்டம் கொடுத்துச்சிராத்தம் செய்யவேண்டியது. மகாமக தீர்த்த ஸ்நாந அங்கமாகச் செய்யவேண்டிய சிராத்தம் தீர்த்தச் சிராத்தம் தவிர வேறு அன்னச் சிராத்தமல்ல; இவ்வாறு நான்குநாள் ஸ்நாந விரதத்தையும் ஐந்தாம்நாள் அதற்கு அங்கமாக பிதுர்தேவதைகளுக்குப் பிரீதியாகத் தீர்த்தச் சிராத்தத்தையும் செய்து வீடுசேர்ந்து பிராமண போஜனம் செய்வித்துத்தானும் இஷ்டமித்திரபந்து வர்க்கங்களோடு உண்டு விரதசமாப்திசெய்கிறவன் இகத்தில் புத்திரமித்திர களத்திரர்களுடன் ஐசுவரிய விருத்தியடைந்து ஈசுவர பக்தியையும் ஞானவைராக்கியத்தையும் அடைந்து பரத்தில் நிரதிசய இன்பவீடாகிய கைவல்லியத்தையும் அடைகிறான்.

ஸ்நாநத்திற்குப்பின் தானம்செய்யும்முறை.

பதினாறு பிராமணர்களைத் தனித்தனி பதினாறு ஆஸனத்தில் உட்காரச்செய்து அவர்களை அர்க்கியபாத்திய ஆசமனாதிகளால் உபசரித்து சந்தனம் புஷ்பம் முதலியவைகளால் பூஜித்து பதினாறுவகைப் பழம் தனித்தனி தானம்செய்து பிறகு தனது சக்திக்குத் தக்கபடி பசு கன்னிகை பொன் குடை வஸ்திரம் பூணூல் குதிரை பணிப்பெண் எருது பால் அறுசுவை யன்னம் பாயசம் தானியம் கந்தம் பூமி முத்து முதலிய நவரத்தினம் தேன் உப்பு இலவங்கம் இவைகளைத் தானம்செய்து நூதன வஸ்திரத்தால் பதினாறுபேர்களையும் போர்த்து தூபதீபம் கொடுத்து உபசரிக்கவேண்டும்.

குரு பகவானானவர் சிம்மராசியை யடைந்து சந்திரனுடன்கூடி சூரியன் கும்பத்தில்வருங்கால், பதினான்கு உலகங்களிலும் தேவர்களால்

நிருமிக்கப்பட்டதும் சகல பாபங்களையும் போக்கடிக்கக்கூடியதுமான எல்லா தீர்த்தங்களும் இக்கன்னியா தீர்த்தத்தைவந்து சேருகின்றன. ஆகையால் அந்த மகாமகவருஷத்தில் எந்த தீர்த்தத்தில் ஆடினாலும் சரியானபலன் கிடைக்காது; அந்த தீர்த்தங்களெல்லாங் கொடுக்கக்கூடிய சகலபலங்களையும் ஒருங்கே கொடுக்கக்கூடியது இத்தீர்த்தமாகையால், எல்லா தீர்த்தங்களிலும் இது மேன்மைபெற்றுளது. "அந்நிய க்ஷேத்திரஸ்த தீர்த்தாநி சதுர்த்தசஜகத்ஸ்வபி--வர்ந்தியமாநாநி தீர்த்தாநி தேவ காதாநியாநிச - தாநிஸர்வாணி சயாந்தி கந்யாதீர்த்தம் சுபாஸ்பதம்-தத்ர தத்ரச ஸம்ஸ்தாநம் மஹாமாக திநே புரே-நாப்நுவந்திபலம்மர்த்யா: தஸ்மாத் அத்ரைவ மஜ்ஜயேத், ஸமஸ்த தீர்த்த ஸம்ஸ்தாநம்பலம் - அத்ரைவ நாரத! அந்யக்ஷேத்ரேஷு யத்புண்ணியம் க்ரதம் யந்மநுஜைச்வரை: - பலம் நலப்யதே தேந தஸ்மாத் அத்ரைவ தத்பலம்" வேறு எந்த க்ஷேத்திரத்தில்செய்த தான தருமங்களும் பலனடையா. அப்பலன் எல்லாம் இங்கேகிடைக்கும். இப்பலனை யடைவதற்காக பிரமன் முதலியதேவதைகள் எல்லோரும் தங்கள் தங்கள் இடங்களைவிட்டுவிட்டு ஒருவருஷம் முந்தியே இக்கும்பகோணத்தை அடைந்து ஒரு அம்சமாக இருக்கின்றார்கள். தீர்த்தகன்னிகைகளை இத்தலத்திற்கு இட்டுக்கொண்டுவருவதற்காக பிரமன் முதலிய தேவர்கள் பரமசந்தோஷத்தோடு சென்று அழைத்துக்கொண்டுவருகிறார்கள். எல்லாத்தேவதைகளும் மகாமக ஸ்நாநத்தில் பதிந்தசித்தத்தோடு அதில் மிகுந்த ஆசையுள்ளவர்களாய் இருப்பதால் அவர் சித்தம் வேறொன்றிலும் பிரவேசிப்பதில்லை. இதைக்கொண்டே எல்லா தேவதைகளும் தங்கள் எல்லா எண்ணங்களையும் விட்டுவிட்டு மகாமக ஸ்நாநத்திலேயே முழுநோக்காக வருகிறபடியால் சுபகாரியங்களுக்கு யாதொரு பலனில்லையென்றும் சவுளம் உபநயனம் விவாகம் முதலிய கல்யாணக் கிரியைகளும் கோதானம் பூதானம் முதலிய தானங்களும் கிணறு குளம் சோலை மண்டபம் வீடு முதலியவைகள் உண்டாக்கலும், யாத்திரையும் கூடாதென்றும் விலக்கியிருக்கிறார்கள். "சூடாகர்ம விவாஹ மௌஞ்சிவநிதா: கௌதாநி காக்யம்க்ரதம், கூபாராம தடாக மண்டப க்ரஹாரம் யாத்ராதிகம் வர்ஜயேத், மாகாப்தேபூதலேஸ்மின் முகஜமுகநரா: ஏசரந்தி விரதாதீன் தேவதாம்ஸர் வம்விநஷ்டம் பவதிகலுமுநேதீக்ஷயா வர்த்திதவ்யம்."

என்று கும்பகோண க்ஷேத்திரபுராணத்தில் கூறியிருப்பதுடன் ஹேமாத்திரியென்னும் கிரந்தத்தில் குருசுக்கிரன் இவர்கள் அஸ்தமன காலத்தில் விரதங்களை ஆரம்பித்தலும் முடித்தலும் கூடாதென்று கார்க்கியரும் (சுலோகம் - அஸ்தகேச குரௌசுக்ரே பால்யேவ்ருத்தே மலிமலுசே, உத்யாபநமு பாரம்பம் வ்ரதாநா நைவகாரயேத்.)

விருத்தமனுவும் பிரகஸ்பதியும், லல்லரும், குரு மகரமாகிய நீசத்திலாவது வக்கிரனாகவாவது அதிசாரத்திலாவது பாலியனாகவாவது விருத்தனாகவாவது அஸ்தமித்தாவது இருக்கும் காலத்திலும் சிம்ம இராசியிலிருக்கும் காலத்திலும் ஒருகாரியமும் செய்யக்கூடாதென்று சொல்லியிருப்பதுமன்றி

தேவீபுராணத்திலும் வஸிஷ்டஸ்மிருதியிலும் விஷ்ணுஸ்மிருதியிலும் காலவிதானத்திலும் காலாமிருதம் (55 சுலோகத்திலும், குருசிம்மத்தில் இருக்கிற காலம் சுபகாரியங்களுக்கு ஆகாதென்றுசொல்லி இத்தோஷம் விந்தியபருவதத்திற்கு தெற்கில் இல்லையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தீர்த்த ஸ்நானமகிமையினால் அகலும் பாதகம்.

மகாமக உத்ஸவத்தின் கடைசிநாளில் அவபிருதஸ்நானம் செய்வதற்காக எல்லாத்தீர்த்த தேவதைகளும் ஒருமித்து வந்துசேருகிறார்கள். அங்கு உள்ள தேவர்களெல்லாம் அவர்களுடன் கலக்கிறார்கள். இக்காலத்தில் இந்நீராடுவதால் ஒருவராலும் போக்கப்படாத சகலபாபங்களும் நாசத்தை யடைகின்றன. மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் செய்யப்பட்ட சகலபாபங்களும், பிராமணனைக்கொன்ற தோஷமும், கட்குடித்தல், பிறர்பொன்திருடல், ஆசிரியன் மனையாளைக் கற்பழித்தல் முதலிய பாதகங்களும், இப்பாதகங்களைச் செய்தவருடன்சேர்ந்த தோஷமும், மாதா, பிதா, குரு, சிவன், விஷ்ணு இவர்களுக்குத் துரோகம் செய்தபாவமும், கெட்டதானம் வாங்குதல், கெட்டவர், துர்ப்புத்தியுடையார், விசுவாசமில்லாதார் இவர்களுடன்சேர்தல் முதலியவைகளால் உண்டாகும் பாதகமும், எல்லாச்சாதியார்களிடத்தும் தானம் வாங்குகிறவன் பாபமும், இதிகாசம், புராணம், க்ஷேத்திரம் மூர்த்திதீர்த்தம் முதலியவைகளை நிந்திக்கிறவர்களுடைய பாவமும், அரசமரத்தை வெட்டியவனும், மறுமாதரைப் புணரும் எண்ணமுடையவனும், சிவசொத்தைத் திருடுபவனும், சிவதருமத்தைக் கெடுத்தவனும், சிவஸ்தலங்களுக்கு அபகாரம்செய்தவனும், துளசிமணியைத் திருடினவனும் கிணற்றைத் தூர்த்தவனும், தகப்பன் தருமத்திற்காக வைத்தசொத்தை விற்றவனும், எள்ளு, வஸ்திரம் இவைகளை விற்றவனும், செக்காட்டுபவனும், செக்குத்தானம் வாங்குகிறவனும், எண்ணெய் விற்றவனும் எள்ளுத்தானம் வாங்கினவனும், பசு, கள்ளு இவற்றைவிற்பவனும், விபூதி உருத்திராக்ஷம் திருடுபவனும், சிவபூஜைக்குக் கெடுதி பண்ணுபவனும், சாளக்கிராமம் திருடுகிறவனும், சாளக்கிராமத்தை விற்கிறவனும், தைலம், மதுமுதலியவைகளைத் திருடுபவனும், வில்வமரத்தை வெட்டுபவனும், துளசியை விற்பவனும், அவிரி ஊமத்தை தூர்த்தூரபுஷ்பமுதலியவைகளை விற்பவனும், நெல்லிமரத்தை வெட்டுகிறவனும், சந்தனம் கர்ப்பூரங்களை விற்பவனும், பசு திரவியம் நிலம்முதலியவைகளை அபகரிப்பவனும், கன்னிகையைப் பணம்வாங்கிக்கொண்டு தானம்செய்பவனும், பெண்கொடுத்துப் பெண்வாங்குபவனும், பெண்களின் நகைகளைத்திருடுபவனும், கன்னிகைகளுக்குக் கல்லியாணம் செய்வித்து வைப்பதற்காகத் தரகுவாங்கி சீவிப்பவனும், கன்னிகைகளுக்கு நகைபோடுகிறேன் என்றுசொல்லிப் பணம்வாங்கிக்கொண்டு நகைபோடாது மோசம்செய்பவனும், பொய்க்கன்னிகையை விவாகம் செய்விப்பவனும், ஒரு தருமத்தை ஒருவன் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே அதை தூஷிப்பவனும், புருஷனுக்கும் பெண்சாதிக்கும் இடையில் பே

ரிய விரோதத்தை உண்டாக்குபவனும், தகப்பனுக்கும் மகனுக்கும் பெரிய விரோதத்தை யுண்டுபண்ணுகிறவனும், தகப்பனிடத்தில் பெரியவிரோதத்தையுடையவனும், பிள்ளையினிடத்தில் பெரிய விரோதத்தையுடைய தகப்பனும், தகப்பனுக்குச் செய்யவேண்டிய சிராத்தத்தை விட்டவனும், சிசுவைக் கொன்றவனும் கருப்பத்தை அழித்த மகாபாபியும், மாட்டுத்தொழுவத்தில் நெருப்பிட்டவனும், வீரனைமோசஞ்செய்து கொன்றவனும், விஷ்ணு கைங்கரியத்தைக் கெடுத்தவனும், விஷ்ணுவையும் விஷ்ணு வைபவத்தையும் பழிப்பவனும், விஷ்ணுநாமத்தைச் சொல்லாதிருப்பவனும், விஷ்ணுக்ஷேத்திரங்களை அழிப்பவனும், இடுகொட்டிலுள்ள பொருளைத் திருடுபவனும், தனது ஆசாரியனைத் தூஷிப்பவனும், தனது கோத்திரத்திற்பிறந்த கன்னிகையைக் கொள்பவனும், எல்லா இடங்களிலும் உண்பவனும், கெட்டவர்கள் அன்னத்தைப் புசிப்பவனும், தீட்டுக்காரர்சமைத்த சாதத்தை உண்பவனும், யாகத்தைக்கெடுப்பவனும், தீக்ஷிதன் பெண்டிரைப் போகிப்பவனும், தூஷிப்பவன் சந்நியாசி இவர்கள் அன்னத்தால் சீவிப்பவனும், வட்டிக்குவட்டி வாங்குபவனும், பொய்சாட்சிசொல்லுபவனும், கோவில்கட்டி பூஜைசெய்விக்காமலிருப்பவனும், இக்கும்பகோணத்தில் மகாமகத்தில் கன்னியாதீர்த்தத்தில் ஒருக்கால் முழுகுவதினாலேயே தங்கள் பாபங்களினின்றும் நீங்கி நற்கதியடைகிறார்களென்பதற்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

மாசிமாதத்தில் மகாமகதீர்த்தத்தில் பிதுர்களுக்கு கருப்பு எள்ளால் திலதர்ப்பணம் செய்பவர் கோடிகயாசிராத்தம்செய்த பலனையடைவார்கள். அன்றியும் தன்னைச்சேர்ந்த ஏழுகோத்திரங்களையும் நூறுகுலத்திலுள்ளாரையும் பாதகத்தினின்றும் கரைசேர்க்கிறார்கள். இரணியசிராத்தமும் விருஷபோத்சர்ஜனமும் செய்கிறவர் தன்வம்சத்தையும் தன்னைச்சேர்ந்த நூறுவம்சங்களையும் பாதகத்தினின்றும் கரைசேர்த்து ஒருகோடி சிராத்தம் கங்கைக்கரையில் கயாக்ஷேத்திரத்தில் செய்த பலனையடைகிறார்கள்.

இத்தீர்த்தத்தில் மாசிமாதம் மகத்திலும் சித்திரை மாதத்திலும் கார்த்திகை சோமவாரத்தில் அமாவாசையை பௌர்ணிமை சூரிய சந்திரக் கிரகணத்திலும் உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலத்திலும் வியதீபாதத்திலும், விஷுபுண்ணியகாலத்திலும் மாதப்பிறப்புகளிலும் தேய்பிறை அஷ்டமியிலும் சிவராத்திரியிலும் சுக்கிரவாரத்திலும் கபிலசஷ்டியிலும் ஸ்நானம்செய்து பிதுர்தர்ப்பணம் செய்யவேண்டியது.

பராசரஸ்மிருதி மாதவீய வியாக்கியானத்தில் முதல் அத்தியாயம் காமியஸ்நாந பிரகரணத்தில் பாலனானாலும் தருணனானாலும் கிழவனானாலும்; புருஷனானாலும் ஸ்திரீயானாலும் அலியானாலும் பரம உத்தமமான மகாமகதீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்தவரானால் இவ்வினைத்தபலனை யடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்நாநஞ்செய்து முக்தியடைந்தவர்கள்.

1. அஸ்தியின் சரித்திரம்.

சவுராஷ்டிரதேசத்தில் பிராமணகுலத்தில் சௌநகவம்சத்தில் சகல சாத்திரங்களையும் செவ்வையாக ஓதி உணர்ந்த வேங்கடாசாரியர் என்னும் பெயரையுடைய ஒருபிராமணன் இருந்தார். அவருக்கு சுசீலன் என்றொருபிள்ளையுண்டு. அப்பிள்ளை மாதா பிதா பந்துக்கள் முதலியவர்களால் கொண்டாடப்பட்டவனாய் தக்ககாலத்தில் உபநயனஞ்செய்யப்பட்டு தகப்பனால் மந்திரோபதேசத்தை அடைந்து ஒருகன்னிகையையும் விவாகம் செய்யப்பெற்றான். இதுவுமன்றி தகப்பனால் எல்லா ஆகமங்களையும் பதினெண்புராணங்களையும் பதினெட்டு உபபுராணங்களையும முப்பத்தாறுஸ்மிருதிகளையும் சிக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் சோதிடம் கல்பம் என்னும் ஆறு அங்கங்களோடு கூடியநான்கு வேதங்களையும் செவ்வையாக ஓதிவைக்கப் பெற்று நன் மார்க்கத்திலும் நடத்தப்பட்டான். உலகத்தில் அவனுக்குச் சமானமானவர் வித்துவான்களுள் ஒருவரும் இல்லை. அரசர்களுக்கு எக்கியம் தானம் இவைகளை செய்விப்பவனும் அவைகளைப்பற்றி விரிவாய் எடுத்துச்சொல்லக் கூடியவனும் இவனொருவனே. தானும் எக்கியயாகாதிகளைச்செய்து அநேகருக்கு வேதாந்த உபதேசஞ்செய்வித்துத் தகப்பனிலும் பதின்மடங்கு அதிகஞானமுள்ளவனாயிருந்தான். இவ்வாறு இருக்குங்நாளில் ஒருநாள் அவன் தகப்பன் காலகதியால் லோகாந்திரம் சென்றான். தகப்பனிறந்ததும் அவன் தாய் தன் புருஷனுடன் உடன் கட்டையேற முயன்றாள். கிராமத்தி லுள்ளாரும் அவள் பிள்ளையும் பந்துக்களும் அரசனும் தடுக்கும்பொழுது அவர்களுக்குள் தன்மகனுக்கு அடியில் வருமாறுசொல்லத் தொடங்கினாள். குழந்தாய் உடன் கட்டையேறுவதால் உண்டாகும் புண்ணியம் சுவர்க்கத்தையும் முக்தியையும் கொடுக்கத்தகுந்தது. 'குலமகட்குத்தெய்வங் கொழுநனேமன்ற புதல்வர்க்குத் தந்தையும் தாயும்' எனஸ்திரிகளுக்கு கணவனே தெய்வமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

குருவும் எஜமானும் சிநேகனும் பந்துவும் மாதா பிதாவும் ஸுகிருதம் எல்லாம் கணவனே; சிவன், நாராயணன்முதலிய தேவர்களும் அவனே; நியமவிருதம் புண்ணியம் முதலியவை கணவனுக்குச் செய்யும் தொண்டினும் வேறில்லை. கணவனுக்குச்செய்யும் வேலையே தருமம். பிரும்மவிஷ்ணு சிவ இந்திராதி தேவர்களும்முனிகள் ஸித்தர் கந்தருவர் நாகர் யக்ஷர்கின்னரர் முதலியவர்களும் கணவனிடத்தில் அன்புள்ள ஸ்திரீகளுக்கு தாமும் அன்புள்ளவரா யிருக்கின்றனர். கணவனிடத்தில் கோபமுடைய ஸ்திரீக்கு அவர்கள் ரவுரவாதி நரகங்களை உடனே கொடுக்கின்றார்கள். ஸ்திரீகள் கணவனிருக்கும் பொழுது நல்ல மங்கல முடையவர்களாகவும் இறந்தபொழுது அமங்கலத்தையுடைய விதவைகளாகவும் ஆகிறார்கள். விதவைகளைக்கண்டால் எல்லாக் காரியங்களும் நாசமடைகின்றனவென்றும் ஸுமங்கிலியைக்

கண்டால் எல்லாக்காரியங்களும் கைகூடுகின்றனவென்றும் சகுன சாஸ்திரத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றன. விதவையானவள் எவ்விதமான நிந்தைக்கும் உட்பட்டவளாகி உலகத்தாரால் தள்ளப்பட்டவளாகிறாள். கணவனிழந்த ஸ்திரீக்கு நூறுபிள்ளைக ளிருந்தாலும் அவர்களாலும் தாய் தகப்பன் பந்துக்கள் முதலியவர்களாலும் என்னபயன். "தாயோடறுசுவைபோம் - தந்தையொடு கல்விபோம் - சேயோடு தான்பெற்ற செல்வம்போம் - ஆயவாழ்வு - உற்றாருடன்போம், உடன்பிறப்பாற் றோள்வலிபோம் - பொற்றாலியோ டெவையும்போம்." என்றபடியே அன்புள்ள கணவனொருவனிருந்தால் அவள் எல்லாப்பலனையும் பூர்ணமாய் அடைகிறாள். கணவனை யிழந்தால் எவற்றையும் இழக்கிறாள். கணவனுக்கு அன்பு செய்கிற பெண்டிரும் தகப்பன் சொற்படி நடக்கிற பிள்ளையும் குருவின் கருத்தின்படிசெய்கிற மாணாக்கனும் இராஜ்யத்தை ரட்சிப்பதற்காக உயுத்த முயற்சியோடு கூடிய அரசனும் இவ்வுலகத்தில் எல்லா ஐசுவரியங்களையுமடைந்து பிறகு ஸாயுஜ்ய பதவியும் அடைகிறார்கள். கணவனுடன் அநுகமனம்செய்கிற ஸ்திரீ உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் ஹிதத்தைச் செய்கிறாள். பகவான் பிரசன்னமாகி இஷ்டமான பலன்களையெல்லாம் அவளுக்கு கொடுக்கிறார். புருஷனைத் தவிர அன்னியர்களை இச்சியாதவளாயும், கணவன்சொற்படி நடப்பதைத் தவிர வேறு தானதருமங்களையும், தீர்த்த ஸ்நாநங்களையும், க்ஷேத்திர தரிசனங்களையும்விட்டு கணவன் சொற்படியே தவறாது நடப்பவளாயுமிருப்பவள் உடன் கட்டை யேறுவாளானால் உலகத்திற்கும் அனாது பந்துஜன வர்க்கங்களுக்கும் 18 விதமான மகா தர்மங்களை யுண்டாக்கி கிராமத்திற்கும் இராஜ்யத்திற்கும் விருத்தியைத் தருகிறாள்.

பந்துக்களிடத்தில் விரோத முள்ளவளாயும் கணவன் சொல்லுக்குப் பதில்சொல்லி அவன் கருத்துக்கு விரோதமாய் நடப்பவளாயும் தன் வீட்டிலுள்ள சொத்துக்களை ஒருவருக்குந்தெரியாமல் விற்பவளாயும் மந்திரம் யந்திரம் முதலியவைகளை அனுஷ்டிப்பவளாயும் புருஷனைவிட்டுவிட்டு புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச்சென்று புண்ணியதீர்த்தங்களில் நீராடுபவளாயும் இவைபோலொத்த வேறுபாவங்களை செய்பவளாயுமுள்ள அசதியானவள் அநுகமனம் செய்வாளானால் இராஜாவுக்கும் இராஜ்யத்திற்கும் பசுபுத்திரன் முதலியவர்களுக்கும் நாசமுண்டாகும். ஆதலால் எல்லாவற்றையும் கற்றுணர்ந்த கண்மணியே! உத்தமஸ்திரீகள் தன்கணவனை விட்டுப்பிரியார்.

ஆதலால் நான் அனுகமனஞ் செய்வதை தடுக்கலாமா, என்னுயிர் நாயகனிறந்தும் யான் இருத்தலின் பயனென்ன? ஈன்றதாய் அடைகின்ற நற்கதியைப் புத்திரர்கள் விலக்குவாரோ? என்று தன்மகனைத் தேற்றித் தன்பதிக்கு பிராணன் நெஞ்சில் துடிக்கும்பொழுது தன்கணவன் தேவசிருஷ்டியையுடையவனா யிருப்பதையறிந்து ஸ்நாநஞ்செய்து மூன்றுதரம் நீரருந்தி (ஆசமனம்) மஞ்சள், பூ, சந்தனம், முதலியவைகள்பூசி பூச்சூடி இஷ்டதேவதையையும் குருவையும் நமஸ்காரஞ்செய்து மஞ்சள் குங்குமம் புஷ்பம் முதலி

யவைகளை கையிலாவது துணியிலாவது ஏந்தி தண்ணீர்விட்டு தனது பிராணனை தன்கணவன் கையில்சேர்ப்பதாக அவற்றை கணவன்கையில் ஊற்றிவிட்டு, கணவன் பாதத்தைத்தவிர வேறுபொருளைச் சிந்தியாமல் சிந்தையிலேறி தன்பர்த்தாவுடன் சுவர்க்கத்திற்குச்சென்று தேவர்களால் பூஜிக்கப்பட்டாள். புத்திரனாகிய சத்தியசீலன் தன் மாதா பிதா இருவருக்கும் சாமகிரியைகளைச்செய்து மகாசிரத்தையுடனும் தீக்ஷையுடனும் வருஷமுடிவுவரையில் உள்ள சிராத்தம் தானம் முதலியவைகளைச் செய்துமுடித்தார்.

பிறகு தன் தகப்பனைப்போல் நித்தியகரும அனுஷ்டானங்களைச் செய்துகொண்டு யக்கிய ஹோமாதி கிருதுக்களையும் விடாதவனாகித் தனது சிஷர்களுக்கும் வேத வேதாங்கங்களையும் வேதாந்தங்களையும் உபதேசித்துக்கொண்டு அறுசுவை உண்டியும் பட்சணங்களையும் பிராமணர்களுக்கு திருப்தியாக உண்பித்து தனது பிதா மரித்ததினம் வருங்கால் வேத சாஸ்திரங்களையும் இதிகாச புராணங்களையும் அறிந்த பிராமணர்களுக்கு பூர்ணமான தக்ஷிணையும் வஸ்திரம் ஆபரணம் முதலியவைகளையும், சுத்தஜலம் நிறைந்த குடங்களையும் பாற்பசுவையும் நிரம்பக்கொடுத்து தேசாந்திரிகளுக்கும் அனாதிகளுக்கும் அன்னமளித்து வேண்டியவைகளையுதவி காலை மாலை நடுப்பகல் என்னும் முக்காலங்களிலும் சிவன் விஷ்ணு முதலியவர்களுடைய கதைகளைப் படித்துங் கேட்டு நல்ல புண்ணியகாலங்களில் கோதானம் முதலிய தானங்களை விடாது செய்துக்கொண்டுவரும் ஸத்தியசீலனுக்கு வாய்த்த மனைவியோ, அஸதியாயும் மூர்க்கையாயும் கடிந்த முகத்தோடும் கொடிய வார்த்தையோடும் கூடினவளாயும் தன் பதியை அடிக்கடி நிந்தித்துப் பேசுபவளாயும் தன் மாமியினது நல்ல செயல்களை செவ்வையாக அறிந்தவளானாலும் ஞானமில்லாதவளாய் தன் கணவன் வெளியேபோய் வருமுன்னே முன்ஜன்மத்து ஊழ்வினையால் மிகுந்திருக்கின்ற மோகமுடையவளாதலால் அன்னியபுருஷர்களைச் சேர்ந்து சுகிப்பவளாயும், கணவன் வருங்காலத்தில் பாயில் படுப்பவளாயும், தன் கணவன் புசிக்க வருங்காலத்தில் அவனுக்கு ஆதரவுடன் அன்னமளியாதவளாயும், குற்றமற்ற இனிய சொற்கள் பல சொல்லினும் அதைச் சரியென்று கொள்ளாதவளாயும், நற்காரியங்களையெல்லாம் வெறுத்துக் கெட்ட கருமங்களையே செய்து நடப்பவளாயும், தன் கருமங்களாலேயே தனக்கு சண்டியென்னும் பெயரையுடையவளாகவுமிருந்தாள். ஸத்தியசீலன் அவளுக்குத் தக்கபடி சிலகாலமிருந்து தன் பத்தினியின் கெட்டநடத்தையினாலுண்டாகும் மனோவிசாரத்தால் நீங்காத துக்கமுடையவனாகி ஊணுறக்கமின்றி உடல்மெலிந்து இரத்தங்குறைந்து பித்தம் அதிகரித்து பித்தபாண்டுவென்னும் வியாதியினால் இறந்தான். உடனே அவனை இயமதூதர்கள் பாசத்தால் பிணித்து இழுத்து அஸதியின் சங்கமதோஷத்திற்காக நரகத்தில் தள்ளினார்கள். அநேகநாள் இந்நரகத்தின் கஷ்டங்களை அனுபவித்துப் பிறகு வேதமோதியிருந்த பெருமையால் இயமனால் பூசிக்கப்பட்டுப் புண்ணியலோகத்தை யடைந்து பிறகு காதி ராஜாவுக்குப் பிள்ளையாய்ப்பிறந்து கௌசிக

ராஜனெனவும் விசுவாமித்திரன் எனவும் பெயர்பெற்றுக் கணக்கில்லாத் தவஞ்செய்து வசிஷ்டர் வாக்கினால் பிரமரிஷியெனவும் பட்டம்பெற்றுச் சுகமடைந்தனன். பிறகு, துர்த்தையாகிய சண்டியும் தன்மாமி, கணவன் இறந்த காலத்தில் கணவன் இழந்த கைம்பெண்ணின் நிலைமையைக்குறித்துப் "பதியிழந்த ஸ்திரீ உயிரோடிருப்பதால் பயனில்லையென்றும் அதிகமான பந்துக்களையும் புத்திரனையும் உடைத்தாயிருந்தாலும் பதியிழந்தஸ்திரீக்குச் சந்தனம் புஷ்பம் மஞ்சள் குங்குமம் வஸ்திரம் ஆபரணம் உயர்ந்தபடுக்கை உத்தியானவனம் இவைகளால் அவளுக்கு யாதொருபயனில்லையென்றும் தந்தியில்லாத வீணையும் சகடையில்லாத இரதமும் எப்படிப் பயனடையாவோ அவைபோலக் கணவனில்லாத ஸ்திரீ யாதொரு சவுக்கியத்தையும் யடையாளென்றும் ஸ்திரீகளுக்குத் தன்பர்த்தாவுக்கு ஸமானமானநாதனும் சுகிருத்தும் பந்துவும் கிடையாதென்றும், மங்கலம் இழப்பதைப்போன்றதுக்கம் வேறில்லவேயில்லை, ஆதலால் நான் என் பர்த்தாவினுடன் அனுகமனம்செய்வேன்" என்றும் சொல்லிய வார்த்தையை முற்றும்மறந்து தான் கணவனையிழந்ததற்கு மனமகிழ்ந்து நல்லுடை உடுத்திப் பல்பணிபூண்டு தெருவெல்லாம் சஞ்சரிப்பவளாயினாள். இவள் கோலத்தைக்கண்டு காமுகராகிய மன்னவரிற் பலரும் வைசியரிற்பலரும் சூத்திரரிற்பலரும் அவளைக்கலந்து இன்பம் நுகர்ந்தார்கள். இச்சண்டி இவ்வாறு கெட்டநடத்தையுடையவளாவதற்குக் காரணம் யாதெனில் வேதவேதாங்கபாரகனாயும் ஷட்கரும நிரதனாயுமுள்ள சாகல்லியனென்னும் பிராமணோத்தமன் மழையும்காற்று மிகுந்திருந்த தன்தகப்பன் சிராத்ததினத்தில் ஒருபிராமணனைவரித்து அவனுக்கு நிரம்ப உண்டியளிக்க அப்பிராமணன் சிராத்தத்தில் உண்ட பொருளனைத்தையும் கக்கிவிட்டதினால் சிராத்தம் நஷ்டமாய்விட்டது. அத்திதியை மறுநாட்செய்யச் சிறிதும்சக்தியற்றவனாய் சாகல்யன்சும்மாவிருக்க அதைக்கண்டுபிதிருதேவதைகள் உன்னுடையகுலமும் நீயும் நசிக்கக்கடவாயென்று சாபம் இட்டார்கள். அச்சாபத்தால் அவர்வீடு தீப்பிடித்தது. உடனே அவரும் அவர்மனைவியும் அவர்களுக்கு உண்டாயிருந்த பெண்குழந்தையை யெடுத்துக்கொண்டு தேசாந்தரம் சென்றார்கள். வழியில் இடிவீழ்ச்சியால் அம்மூத்தோர் இருவருமிறக்க அக்குழந்தை தனியே அழுதுகொண்டிருந்தது. அதை சௌராஷ்டிரதேசம் காம்பில்லிய பட்டணத்தில் உள்ள பெண்டு இல்லாத ஓர் பிராமணன் எடுத்துத் தன்தாரபந்துக்களுடைய குழந்தையென்று சொல்லித் தன் பெண்ணினும் பதின்மடங்காக வளர்த்துவந்தான். இவ்வாறு வளர்த்துவருநாளில் வெங்கிடாசாரியார் என்னும் பிராமணன் அப்பெண்ணை விசாரித்துத் தன்பிள்ளையாகிய ஸத்தியசீலனுக்குக் கல்லியாணம் செய்துவைத்தார். பிதுருசாபத்தால் இவள் இவ்வாறுநடக்க இடமுண்டாயிற்று.

இவள்கணவனை இழந்தபிறகும் பலருடனும் காம இன்பம் அனுபவித்துக்கொண்டு வருங்காலத்தில் ஒருநாள்ஒருகொடிய விஷப்பாம்புதீண்ட இறந்தாள். இறந்தபின்பு இயமபடர்கள் இவளைக்கட்டி யிழுத்துக்கொண்டு

போய் நரகத்தில்தள்ள மூன்றுமனுவந்தரம் நரகத்தில் மிருந்த கஷ்டங்களை யனுபவித்து அதுவும் பற்றாதவளாய்க், கோதாவரிதீரத்தில் ஓர்பிரம்மாலயத்தில் பணிசெய்துகொண்டிருப்பவளாகிய சுப்பிரமணியென்னும் ஸ்த்ரீவயிற்றில் ஓர் வைசியனுக்கு பெண்ணாய் பிறந்துநாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பட்டுப்பருவ மடைந்தகாலத்தில் யோசனைதூரம் நாறும் புழுமலிந்த புண்ணுடையவளாயும் மூத்திரகிருச்சிரமென்னும் தீராதவியாதியை உடையவளாயும் எந்தப்புருஷன் அவளைச்சேருகிறானோ அவனுக்கும் அவ்வியாதிதொடர்வதால் எல்லாராலும் சீ சீ எனஇகழத் தக்கவளாயும் ஆயினள். இவ்வியாதிக்குக் காரணம் பூர்வ ஜன்மத்தில் தன் கணவனுக்கு அடங்காமல் அவனை யிகழ்ந்ததேயாகும். இவ்விதமாக வருந்திக்கொண்டு வருநாளில் ஒரு நாள் முன்ஜென்மத்தில்தான் சத்தியசீலன்பூஜைசெய்யும் பொழுது பூசைக்குத்தீபம் ஸமர்ப்பிக்கத் தீபங்கொண்டு வந்த புண்ணியத்தால் கோதாவரிதீரத்திலிருந்து கும்பகோணத்தில் மகாமக உற்சவம்நடப்பதை கேள்வியுற்று அவ்வுத்ஸவக்கடைநாளிலம்மகாமகதீர்த்தத்தில் நீராடுவதின் பொருட்டுச் செல்லும் பலபிராமணக் கூட்டத்தின் சேர்க்கையை உற்றாள். அவள் எந்தவைத்தியராலும் தீர்க்கமுடியாத தீராதநோயுற்றவளாய் இருப்பதை அவர்களுக்கு அறிவிக்க அவர்கள் பெண்ணே! நீஎங்களுடன்வந்து கும்பகோணத்திலுள்ள மகா மகக்குளத்தில் முழுகுவாயானால் நீ எல்லா நோயினின்றும் நீங்குபரிசுத்தசரீரத்தை யுடையவளாவாய்' என்றுசொன்னார்கள். அவளும் கருமவசத்தால் பாபம்நீங்கும்காலம் வந்துவிட்டதால் அவர் சொல்லுக் கிணங்கிக் கும்பகோணஞ்சென்று மகாமகதீர்த்தத்திலும் ஹேம தீர்த்தத்திலும்காவேரியிலும்விதிப்படிநீராடி தீர்த்த தேவதைகளை வணங்கி அத்தீர்த்தங்களை வலம்வந்து அத்தலத்திலுள்ள பன்னிரு தேவாலயங்களிலும் சுற்றிலுமுள்ள பதினெண் க்ஷேத்திரங்களிலுமுள்ள சிவவிஷ்ணு மூர்த்திகளைத் தரிசித்துக் காலாந்தரத்தில் முக்தியடைந்தாள்.

2. மகாமக ஸ்நானத்தினால் ஆறுபிள்ளைகளையடைந்த கதை.

முன்காலத்தில் ஹேஹயன் என்று ஒரு அரசன்உண்டு. அவன் மிகவும் சாந்தனாகவும், ஆசிரியர்களால் நல்வழிப்படுத்தப்பட்டவனாகவும், எல்லோருக்கும் பிரியனாகவும், பொறாமை யற்றவனாகவும், நீதியுற்றவனாகவும் திரவிய சம்பந்நனாகவும் விஷ்ணு பக்தியுள்ளவனாகவும், தருமத்தையே செய்பவனாகவும், எப்பொழுதும் பகவத்கதைகளையே கேட்க ஆவலுற்றவனாயும், விஷ்ணுவையே பூசிப்பவனாகவும், விஷ்ணு பக்தர்களிடத்தில் நீங்காத பக்தி யுடையவனாயும், ஓயாமல் விஷ்ணு நாமங்களைச் சொல்பவனாயும், இருந்தான். இவன் மனைவியோவென்றால் சேதிதேசாதிபதியின் மகள்; நல்லசுப இலக்ஷணங்களோடு கூடிய அவயவங்களுடையாள்; கணவனிடத்தில் பக்தியுள்ளவள்; கணவனுக்கே தொண்டுசெய்யும் வேலையுள்ளாள்; கணவன்சொற்படிநடப்பவள்; கணவனைத் தவிர வேறுதெய்வத்தைக் கனவிலுமறியாதவள். கணவன் ஆயுள்விருத்தியாவதற்குச் சண்டிகாதேவியைப்பூசிப்பவள்; தன் கணவன்

பொருள்விருத்தியையும் இராச்சியாபி விருத்தியையும், சத்துருநாசத்தையும் வேண்டிச்சூரியனைப் பூசிப்பவள்; கணவனிடத்திலும், தெய்வத்தினிடத்திலும், பிராமணர்களிடத்திலும் மிகுந்த அன்புள்ளவள்; சதாசாரத்திலும் தருமமார்க்கத்திலும் நடப்பவள்.

இவ்விருவரும் மதனனும், இரதியும்போலவும், விஷ்ணுவும் இலக்குமியும்போலவும், வசிஷ்டரும் அருந்ததியும்போலவும் ஒற்றுமையுடையவர்களாய், வாழ்ந்துவந்தார்கள். இவர்களுக்கு வம்சவிருத்திக்கு உரிய மக்கட்பேறில்லை.

ஒருநாள் இவ்விருவரும், நவமணிகளால் இழைக்கப்பெற்றதும், கோடி சூரியன் உதயமானதுபோன்ற காந்தியுடையதும், தனதுசிகரங்களால் ஆகாயத்தையளாவியதுமான உப்பரிகையில், இரத்தினமண்டபத்தில், அன்னத்தூவியாற்செய்த மஞ்சத்தில் சயனித்துக்கொண்டு, அவ்வரண்மனைக்குவெளிப்புறத்தில் நடக்கின்றவைகளை வேடிக்கையாகப்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவ்வரண்மனையினடியிற் குடியிருந்த ஒருசூத்திரனுக்கு நெடுநாள் பிள்ளையில்லாமல், பிறகு, தெய்வகிருபையால் அவனுக்கு ஓர்குழந்தைபிறந்தது. அக்குழந்தை அழகில்லா உடலும், மூக்கும், ஒருகாதும், ஒருகண்ணுமற்றதாயும், செம்மட்டமயிரும், சிவந்தகண்ணும், கோணற்பல்லும், கிழிந்த உதடும், ஆறுவிரல்களையுடையகைகளும், கோணலாகிவளைந்து விரலற்றகால்களும் உடையதாகி இருந்தது.

இக்குழந்தை மூன்றுவயதுவளர்ந்தபிறகு, ஒருநாள் பக்கங்களிலுள்ள வேறுசிறுகுழந்தைகளோடு சேர்ந்து, இராஜவீதியில் அரசன்மாளிகையோரத்தில் விளையாடச்சென்றது.

வெளியேசிலகாரியங்களுக்காக அடுத்த கிராமத்திற்குச் சென்றிருந்த அச்சூத்திரன், வீடுவந்துசேர்ந்ததும், தன்புத்திரனைக் காணாமையால், தன்மனையாளைநோக்கி பெண்ணே! என்னுடைய உயிருக்குயிரான என் பிள்ளை எங்கே அவனைவிட்டுப் பிரிந்து அரைநிமிஷமும் நான் உயிரோடிரேனே, போனவிடம்சொல்வாய் என்று கேட்டனன்.

அதற்கு அவன்மனைவி, ஐயா! 'நான் வீட்டில் காரியத்தின்மேல் நோக்கமாய் இருந்தமையால் எங்கேபோனானென்பது எனக்குத்தெரியாது. ஆனாலும், எங்கேபோயிருப்பான் இங்குதான் இத்தெருவில் எங்கேயாவது விளையாடிக்கொண்டிருப்பான்' என்று மறுமொழிசொன்னாள். அம்மொழியைக் கேட்டுமிகவுங்கோபங்கொண்டு, 'சீச்சீ ! உன்னுடைய ஜன்மம் பயனற்றது; உனக்கு ஆனவயது கொஞ்சமேனும் பிரயோஜனமில்லாமல் போயிற்று; உன்வீட்டுக் காரியங்களைக் குப்பையில்தள்ளு;' என்று அவளைவைது அடித்துத், தான் வீதியிலே தேடத்தொடங்கினான். அவன் பத்தினியும் அவனைப்பின்தொடர்ந்தாள். வெளியேகிளம்பி 'என்பிள்ளையைக்கண்டீர்களா? என்பிள்ளையைக்'கண

டார்களா? என்றுஎதிர்ப்பட்டவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டே வீடு வீடாக நுழைந்து கண்டகண்ட இடங்களெல்லாம் தேடியும், அகப்படாமல், சாலை மூலையெல்லாம் அழுதுகொண்டேதிரிந்தும், கோயில் எல்லாம் நுழைந்தும், காணாதவனாய்த், தன்பெண்சாதியைவைது, பல்லைக் கடகட வென்று கடித்து அவளை அடிக்கச்சென்றான்; அவளும்பயந்து அழுதுகொண்டே தேடிக்கொண்டு வந்தாள்; மறுபடியும், அவளைப்பார்த்து வைதுகொண்டே 'அடா குழந்தாய்! என் குலவிளக்கே-நீ என்னைப்பிரிந்து எங்குசென்றாயடா, என்றுகதறிக் கையைப்பிசைந்துகொண்டே அரண்மனையுட்பிரவேசித்தான். அப்பொழுது தனது அன்புடைய மனையாளோடும் உப்பரிகையின்மேல் இரத்தினமண்டபத்தில், நவமணிகளா லிழைக்கப்பட்டதாகிய சுவர்ணபரியங்கத்தில் சயனித்துக்கொண்டிருக்கும் ஹேஹயராஜாவானவன் "அடேகுழந்தாய், அடேகுழந்தாய்." என்று புலம்பிக்கொண்டு தன்பெண்சாதியோடும் அரண்மனைக்கு வருபவனை உற்று நோக்கி உடனே தன்மனையாளைப்பார்த்து "என் அன்னமே! இச்சூத்திரனையும் இவனது மனைவியையும்பார்? அவளோ மிக்க வயதுசென்றவளாயும், குரூபியாயும், நரை, திரை முதலியவைகளால் மூடப்பட்ட பெருங்கிழவியாயும், மிகக் கரியநிறமும், விகார ரூபமும் உடையவளாயும் இருக்கிறாள். இவளுக்குக் குழந்தை எப்படி யுண்டாயிற்று? நல்லது-இவர்கள்குழந்தை நமது அரண்மனைக்கு எப்படி வந்தது.? அழுதுகொண்டு இவர்கள் இங்கே எங்கேபோகிறார்கள்பார்.? அழுதுக்கொண்டு போகிறவர்களை அரசன் (பார்த்து) 'ஏன் அழுகிறீர்கள், உங்களுக்கு உண்டான தீமையாது,?' என்று விசாரித்து அவர்களைத் தேற்றானாயின் அவர்கள் கண்ணினின் றொழுகும்நீர் மிக்கக் கெடுதலையுண்டாக்கு மென்பதற்குச் சந்தேகமேயில்லை. அந்த அரசனுடைய வயதும் குறைந்துவிடும் என்பது அரசநீதி. என்பதை நீயறியாயோ! என்று இவ்விதமாகப் பேசிக்கொண்டிருக்கையில் அச்சூத்திரன் அங்குசேர்ந்து அந்த உப்பரிகையின்கீழ், பலசிறார்களுடன் விளையாடிக்கொண்டிருக்கும் தனது புத்திரனைக்கண்டு மிக்க சந்தோஷமுடையவனாய் ஏ குழந்தாய்! என்று கதறிக் குழந்தையை எடுத்து மார்புறத் தழுவிப், பிள்ளையைக் கண்டதாலுண்டாகிய ஆநந்தக்கண்ணீரால் அக்குழந்தையை மஞ்சனமாட்டி அடிக்கடி உச்சிமோந்து செவ்வையாய்க் கட்டிக்கொண்டான். பிறகு தனது கைகளால் அக்குழந்தையைச் செவ்வையாய்த் தடவி உடம்பிலுள்ள தூசியெல்லாந்துடைத்து அப்பாநானுடலெடுத்தபயன் இப்பொழுதுதானடைந்தேன்; எனதுகுலமும் இப்பொழுது நற்குலமாயிற்று. இப்பொழுதுதான் எனது பிதருதேவதைகள் திருப்தியடைந்து, எனது விரதங்களெல்லாம் பலித்துஎனக்கு மங்களமுண்டாயிற்று, உன்னை நான் இப்பொழுது காணாவிடின் இறந்துவிடுவேன் என்பது திண்ணம்; நீதான் எனது ஆயுள் அப்பா. தேவரமுது உண்டவர்கள் எவ்வளவு சந்தோஷிப்பார்களோ அவ்வளவு சந்தோஷம் இப்பொழுதுதான் உண்டாகின்றதப்பா. என்று சொல்லிக்கொண்டு தன்பிள்ளையைத் தோளிற்றூக்கிக்கொண்டு தன் பெண்சாதி

யும் தானுமாய்த் தன்வீட்டுக்குள் நுழையும்பொழுது "பிள்ளையில்லாதவனுடைய குலமும் அவனது தனமும் அவனது விருதமும் வீடும் பூமியும் கீர்த்தியும் நல்ல வஸ்திர பூஷணாதிகளும் பயன் இல்லாமற்போய்விடும்" என்று தன்பெண்சாதியினிடம் சொல்லிக்கொண்டே நுழைந்தான்.

தன்மனைவியோடு மாளிகையில் உப்பரிகையின்மீதிருந்து இம்மொழியைக் கேள்வியுற்ற அரசன் மிகுந்தகவலையுடன் மனையாளைநோக்கி 'எனது உயிருக்குயிரான இன்னமுதே' எனது மனது தீயிலிட்டமெழுகுபோலும் வெண்ணெய்போலும் தவிக்கின்றது. பிள்ளையில்லாக் குறையாலும் இச்சூத்திரன் மொழியாலும் நான் வருத்தப்படுகிறேன். எனக்கு இராச்சியத்திலும் உன்சேர்க்கையிலும் வேடிக்கையிலும் பரிகாசமொழியிலும் பீதாம்பரம் முதலிய உடையிலும் உனது அன்னம்போன்ற நடையிலும் இரத்தினங்களிழைத்த அணியிலும் மனம் நாடவில்லை.

இதற்கு முந்தியே இப்பிள்ளையில்லாக் குறையால் நான் மனம்வருந்தியதுண்டு. இப்பொழுது இச்சூத்திரன்மொழி என்மனதை நிரம்பவருத்துகின்றது. நான் உயிரோடிருந்தால் என்ன, செத்தாலென்ன! இரண்டும்சரிதான். எனது அழகிய அரண்மனை, மிகுந்தசெல்வம், நாடு நகரம் வஸ்திரபூஷணம் இவைகளால் எனக்கென்ன பயன்? நமது முன்னோர்களுக்கு வம்சவிருத்திக்குச் சந்ததிகளிருந்தன; இப்பொழுது நமக்கோ அது இல்லை. பிள்ளையில்லாதவனுடைய கதியை முன்னமே நான் சாஸ்திரங்களால் செவ்வையாய் அறிந்திருந்தபோதிலும் இப்பொழுதும் இச்சூத்திரனாலும் நினைப்பூட்டப்பட்டேன். பிதுருதேவதைகள் பிள்ளையில்லாத தன்வம்சத்தினைக்கண்டால் மிகவும் வருந்துகிறார்கள் என்றும் பிள்ளையில்லாப் பெரும்பாவிக்கு சுவர்க்கத்திலும் நல்லவழியில்லையே என்றும் பிள்ளையில்லாதவனுடையமுகத்தைப்பார்த்தால் உடனே அப்பாவம்நீங்கச் சூரியனைப்பார்க்கவேண்டுமென்றும் இதுவுமன்றி பிள்ளையில்லாதவனைத் தொட்டாலும் அவனுடன்பேசினாலும் அநேகதோஷங்களுண்டாகின்றனவென்றும் எல்லாக்காரியங்களிலும் அவன் நிந்திக்கப்பட்டவனாகிறான் என்றும், சிராத்தத்தில் அவனை அன்னமிடவரித்தால் பிதுருதேவதைகள் நிராசையையுடையவர்களாகிறார்கள், என்றும் சாஸ்திரம் கூறுகின்றதே.

நான் முன் ஜன்மங்களில் என்னபெரும்பாதகங்களைச் செய்தேனோ, ஸகலத்திற்கு மீசர்களாகிய ரமாபதிக்கும் உமாபதிக்கும் ஏதாவது தீங்குசெய்தேனோ, வழியில்நிழல் தருவதற்காக வைக்கப்பட்ட தோட்டங்களை யழித்தேனோ, கோவில்களை இடித்தேனோ, குளம் கிணறுகளைத் தூர்த்தேனோ, பால் வைத்துக்கொண்டு பசித்தகுழந்தைக்கு இல்லையென்றேனோ, நல்லபால்தானம்செய்யாமல்நானேகுடித்தேனோ, நல்லசோலைகளையும் நந்தவனங்களையுமழித்தேனோ, துளசி வில்வம் முதலியவைகளை வெட்டியொழித்தேனோ, விஷ்ணுதருமம் சிவதருமம் என்னால் கெடுக்கப்பட்டனவோ, கோவில்களிலுள்ள தீபங்களை அணைத்தேனோ, அன்னியர்கள் குழந்தைகளைக் கோபத்

நீராலும் பொறுமையாலும் அடித்தேனோ, பிறர்வைத்திருந்த மதுரமான பழங்களைத் திருடினேனோ; மரஞ்செடிகளை பின்பு அவற்றின் கன்றுகள் உண்டாகாமற் போகும்படிவெட்டினேனோ, பாம்பின்முட்டைகளை உடைத்தேனோ, பாம்பைத்தான் அடித்தேனோ, கல்நாகத்தை உடைத்தேனோ, அல்லது அவைகளால் ஏதாவதுகட்டிடம்கட்டினேனோ, பொன்னாலும் வெள்ளியாலுமுள்ளநாகத்தைத்தான் திருடினேனோ, இப்படிச்சந்ததி இல்லாமற் போகும்படியான பாதகம் என்னசெய்தேனென்று தெரியவில்லையே, என் பாவமகல, நான்எங்கேபோவேன், என்னகாரியம்செய்வேன், எப்படிஎனக்குப் பிள்ளையுண்டாகும், பிள்ளை இல்லாதவனை தேவர்களும், பிதிரர்களும் மனிதர்களும் நிந்திப்பார்களே: இந்நிந்தனையை நான் எப்படித்தவிர்ப்பேன். நாலாம் வருணத்தில் பிறந்த ஓர் சூத்திரன், மிக்ககுரூபியாய் ஒரு காதும் கண்ணும் நாசியு மற்றபிள்ளையைக்கண்டு என்னசந்தோஷத்துடன் என்னென்ன சொன்னான் பார்த்துக்கொண்டிருந்தாயா? இந்தஎளியன் மிகக்குரூபியினிடத்தில் இவ்வளவு அன்புள்ளவனாயிருப்பதை யோசித்தால், சக்கரவர்த்தியாக விருந்து அரசாளத்தக்க மக்கள் இல்லாத என் துக்கம் ஆறக்கூடியதாயிருக்குமா? என்னருமைக் கண்மணியே! அவரவர்கள் வயிற்றிலுதித்தபிள்ளையைக் கொண்டே ஹரியானவர் அவரவர்களுக்குச் சகலசந்தோஷத்தையும் உண்டாக்குகிறார். புத்என்னும் நரகத்தினின்றும் காப்பாற்றப்படுவதால்அல்லவோ புத்திரனென்று பெயருண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் மனிதர்களுக்குச் சவுக்கியத்தையுண்டாகக் கூடிய பொருள், பதினான்குலகத்திலும் பிள்ளையைவிட வேறில்லை. பெரிய இராச்சியமும், தனமும், இரத்தினங்களும் இரத்தினாபரணங்களும், வீடும், கிராமங்களும் நான்கு விதச் சேனைகளும், எனக்கு எதற்காகவேண்டும் என்று தன்பெண்சாதியோடு குறைகூறலும், அவளும் துக்கத்தையுடையவளானாள். அவர்கள்படுக்கை அன்று இருவர்க்கும் முள்ளாகவே இருந்தது. அதுமுதல் அவர்கள் சரீரம் கோடைகாலத்துக் குளம் வற்றுவதுபோல இளைக்க வாரம்பித்தது. இராச்சியத்தில் நியாயாந்நியாயவிசாரணை சரியாக நடந்தேறவில்லை. ஜனங்களெல்லாம் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கும்பொழுது, முக்காலங்களும் உணரும் சாகல்லியமகரிஷி, யாகம்செய்வதற்காகத் தனம்வேண்டி, இவ்வரசனை எதிர்பார்த்துக்கொண்டு, அரண்மனைக்குவந்தார். வந்தவரை அரசன் கண்டு எழுந்து, சென்று எதிர்கொண்டு, அழைத்துவந்து இரத்தினபீடத்தில் உட்காரவைத்து, அர்க்கியபாத்தியாசமனீயமளித்து, ஹே-மகாரிஷே! தங்கள் இந்நகரம் தேடிவந்தது யான்செய்த தவமோ, என் முன்னோர்செய்தவமோ, இந்நாடுசெய்தவமோ, நாட்டார் செய்தவமோ, யார்செய்தவமோ, அறியேன், தங்கள் வரவு எனக்கு நல்வரவாயிற்று, என்று உபசரித்தான். உடனே சாகல்லியருஷி "மகாராஜனே! உன்னுடைய புத்திர மித்திர களத்திராதிகளான பந்துவர்க்கங்களும், தேசமும், மந்திரிபிரதானிகளும், சேனைகளும், சவுக்கியமா? நான் சரசுவதி நதிக்கரையில் மிக்கதிரவியம் செலவழியக்கூடிய ஒரு

யாகம் செய்ய ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் மூன்றுநாள் தான் காலம் இருக்கின்றது. அக்காலத்திற்குள் நான்மூன்றுகோடி பொன்னுடன் அச்சரசுவதி நதிக்கரைக்குப்போகவேண்டும். வீணாகக்காலதாமதம் செய்யலாகாது. உன்னண்டைவந்தால் வேணுமென்றபடி தனம் கிடைக்கும் என்று உத்தேசித்துவந்தேன்" எனக்கேட்டனன். அரசன்வணங்கி நின்று, முனிச்சிரேஷ்ட! தங்கள்வார்த்தை பரிகாசவார்த்தை போலிருக்கின்றது. அப்படி இல்லையாயின் பாவியான என்முன்புவந்தபடியால் தங்களுக்கு முக்காலமும் உணரும் வல்லமை குறைந்திருக்கவேண்டும் என்றுகூற, இருஷி, "அரசே! எனதுஉக்தி பரிகாசமன்று; அரசனிடத்திலும், சந்திரனிடத்திலும், சூரியனிடத்திலும், பருவதத்தினிடத்திலும், ஜலத்திலும், ஆகாசமார்க்கத்திலும் ஹரிவசிக்கிறார். ஆகையால் உன்னுடைய சந்நிதானத்தில் என்புத்தி ஒருக்காலும் குறையாது, யோசிக்காமல் ஏதாவது சொல்லியிருக்கலாம் என்று ஆசமனம்செய்து, ஒரு முகூர்த்தம் தியானத்திலிருந்து, பிறகு, அரசனைநோக்கி பார்த்திப! உனது முன்ஜன்ம பாபத்தால் பிள்ளைஉண்டாவதற்குத் தடையுண்டாயிருக்கிறது. ஆதலால், உன்மனையில் பிள்ளையில்லை; இதற்குநீ கவலைப்படவேண்டாம். உனக்கு ஸர்வேச்சுவரன் கிருபையால் ஆறுபுத்தரர்கள் உண்டாகப்போகிறார்கள்; அவர்கள் சூரியசந்திரர்கள் உள்ளவரையிலும் கீர்த்தியுடையவர்களாயிருப்பார்கள்" என்றுகூறினர். அரசன் ஆனந்தத்தினாலே கண்ணினின்றும் நீர்ததும்ப என்ஆண்டவனே! உங்களைத்தவிர எனக்கு வேறுகதியில்லை, உங்களாற்றான் எனக்குபுத்திரன் உண்டாகாதிருக்கும் பாபம்நீங்கவேண்டும், எனக்கு என்னகாரணத்தினாலே புத்திரன் உண்டாவதற்குத் தடைஉண்டாயிற்று? அதைச் செவ்வையாய் அடியேனுக்குச்சொல்லியருளவேண்டும். உன்னுடைய பிள்ளைமுதலானவர்கள் சவுக்கியமா?'' என்றுகேட்டீர்கள்! எனது குலம் விளங்க எனக்குப் பிள்ளையில்லையே! எனக்கு பிள்ளையில்லாமற்போகும்படி முன் ஜன்மத்தில் என்ன பாபங்களைச் செய்தேனோ? என்னகொடுமைகள் செய்தேனோ எனக்குத் தோன்றவில்லையே. அவற்றை அடியேனுக்குச் சொல்லி அப்பாதகத்தை நான் போக்கிக்கொள்ளும்வகையை உபதேசித்தருளவேண்டுமென்று அவரைத் தண்டனிட்டான்.

அப்பொழுது அம்முனிபுங்கவன் ஏ-மகீபதே! நீ புத்திரவானாய்ச், சவுக்கியமாய், சந்தோஷத்தையுடையவனாய் இருப்பதைப்பார்க்க மிகவும் ஆவலுற்றவனாயிருக்கின்றேன். ஆதலால் நீ முன்ஜன்மங்களிற் செய்த பாதங்களைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. ஒவ்வொருவரையும் முன் ஏழுஜன்மங்களிற் செய்த பாதகம் பின்னேழு ஜன்மங்கள் வரையில் தொடரும். நீ இந்த ஜன்மத்திற்கு முந்தினஜன்மத்தில் ஒருபெரிய வைசியன்; மிக்க செல்வவான், தயையில்லாதவன், மிக்க கிருபணன்; ஒருவர்க்கும் ஒருபைசாவும் கொடாத உலோபி, பந்துக்களிடத்தும் குருவினிடத்தும் தெய்வத்தினிடத்தும் அன்பில்லாதவன், கொஞ்சமேனும் பச்சாதாபம் இல்லாதவன். இக்குணங்களால் பரிபூரணனாய் இருக்கும்பொழுது ஒருநாள் உன்கடையில்

நல்லஉருசியுள்ள பக்குவமான வாழைப்பழம் முதலிய பழங்கள் நிரம்ப வைக்கப்பட்டிருந்ததை ஒரு பூனை ஆசையோடு மோந்துகொண்டிருக்கும்பொழுது கோபத்தோடு பல்லைக்கடகடவென்று கடித்துக்கொண்டு உன்பெண்சாதி கொண்டுவந்துகொடுத்த கழியால் நீ அதை அடித்துக்கொன்றாய். அதைக்கண்ட அக்கடையிலுள்ளார் எல்லாரும் கண்ணை இரு கரங்களாலும் மூடிக்கொண்டு ஹரி-ஹரி-சிவ-சிவாவென்று ஈசுவர நாமங்களை உச்சரித்து மிக்க பயமடைந்தார்கள்.

நீ அப்பொழுது அக்கொலையால் பச்சாத்தாபம் அடையாமலும், அப்பாபத்தைப்போக்கிக்கொள்ள நினையாமலும், யாதொருமுயற்சியும் செய்யாதிருந்ததோஷத்தால், அற்ப ஆயுசுவுடையவனானாய். நீ ஏழு ஜன்மத்திற்கு முன் ஸ்ரீசைலமென்னும் மலையில் திவ்வியமான இரத்தின மண்டபம் ஒன்று கட்டிவைத்தாய்; அந்தப் புண்ணியவசத்தால் அரசனானாய். ஆயினும், இப்பாதகத்தை நிவர்த்தித்துக்கொள்ள காலம் வந்து விட்டது. உன்பாதகங்கள் தொலைந்தனவென்றுநினை. இப்பொழுது இன்னும் மாதம் ஆறில் மகாமகஉற்சவம் கும்பகோணத்தில் நடக்கப்போகிறது; அந்த உற்சவத்தின் கடைசிநாளில் மகாமக தீர்த்தத்தில் முழுகினால் சகலமான பாதகங்களினின்றும் நீங்கிப்பரிசுத்தனாவாய். நானும் எனது யாகத்தைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு கும்பகோணம் வந்து சேருவேன். நீமகாமகத்திற்கு முன் ஆறுமாதம் முதல் நியமத்தோடு கூடியவனாய் இருந்து கன்னியாதீர்த்தத்தில் நீராடுவதாக ஸங்கல்பம் செய்துக்கொண்டு கும்பகோணத்திற்குச் சென்று மகாமக உற்சவத்துக்குக் கொடியேறுகிற தினத்திற்கு முதல்நாள் அங்குரார்ப்பணம்செய்யும்பொழுது அக்கன்னியா தீர்த்தத்தில் நீராடி ஒன்பது கன்னிகைகளையும் பூசித்து வணங்கி அரசினடியில் உட்கார்ந்து கோமேதகத்தினால் கழுத்தும் வெள்ளியினால் மீசைரோமமும் இந்திரநீலத்தினால் உடல் முழுவதும்புள்ளியும், பல இரத்தினங்களிழைத்ததாய் வாலும் வைரத்தினால் தாடையும் பத்மராகத்தால் நாசியும் மரகதத்தால் காதும் புஷ்பராகத்தினால் பின்தட்டும் நவமணிகளால் வயிறும் செய்யப்பட்டதாக ஓர் பூனையைச் செய்து அதன்கழுத்தில் ஏழு பொற்சலங்கைகட்டி ஏழுசாணில் ஒருபொன்கோல்செய்து பூனைமேல் சாத்தி மகாகால பூஜைசெய்து அதால் இயமனை திருப்தி செய்துவைத்துப் பின்பு நவகன்னியர்களைவணங்கி பூஜித்து மகாகால பூஜைசெய்து கன்னிகைகளையும் பூஜைசெய்து பிறகு பிராமணனைப் பூஜைசெய்து செகப்புச்சந்தனம் பூசி இரத்தினதட்சணையும் நீலவர்ணமான இரண்டுவஸ்திரமும் நீல இரத்தினமும் வைத்து ஒரு பிராமணனைப்பூசித்து அப்பிராமணனிடத்தில் இக்காலதண்டத்தையும் பூனையையும் கொடுத்து கன்னியா தீர்த்தத்தில் விதிப்படிஸ்நாநம்செய்த தானஞ்செய்யவேண்டும். புத்திரப்பேறு உண்டாகும்படி ஒரு பொன் தட்டில் நல்ல மாதுளம்பழம் வைத்து தட்சணையுடன் பீதாம்பரத்தினால் மூடி, வேதமோதி உணர்ந்த பிராமணனுக்குக் கொடுத்து, அவன் ஆசிபெறவேண்டும். க்ஷேத்திரவாசிகளாகிய வேதசாஸ்திர முணர்ந்தவருக்கு

பாத்திரம் முதலிய பலவும் கொடுக்கவேண்டும், பிராமணர்களுக்கு பூர்த்தியாக அன்னம்போட்டு, மகாமகஸ்நானவிருதத்தை கிரமப்படி முடித்தால் என் சொற்படியே, நீ ஆறுபிள்ளைகளையும் பெறுவாய் என்று சொல்லிவிட்டு மூன்றுகோடி பொன்னைப் பெற்றுக்கொண்டு சாகல்லியமுனி யாகத்திற்குச்சென்றார். அரசனும், நியமத்தோடு தனது பத்தினியுடன் சகலபரிவாரங்களையும் அழைத்துக்கொண்டு கும்பகோணஞ்சென்று சாகல்லியர் உபதேசப்படி விரதத்தை ஆரம்பித்து ஸ்நானஞ்செய்யப் புறப்படுகையில் சாகல்லியரிஷி யாகத்தை முடித்துவிட்டு கும்பகோணம்வந்து அரசனுக்கு மகாமகதீர்த்த ஸ்நானத்தை விதிப்படி செய்வித்து பஞ்சக்குரோச யாத்திரையும் அஷ்டாதச ஸ்தலயாத்திரையும் செய்வித்து கோயில்களுக்கு உத்ஸவத்தை செய்துமுடித்து, நியம விருதத்தோடு தீர்த்தஸ்நானம் செய்து மூர்த்திதரிசனமும் விடாது செய்துகொண்டு பன்னிரண்டுமாசம் அவ்வூரிலேயே கிருதவீரியன் வசித்துக்கொண்டிருக்கும்பொழுதே அவன்மனைவி சோபநாங்கி ஆயிரம்கரங்களோடு கூடிய கார்த்தவீரியனைப்பெற்றனள். காமாங்கி காமன் என்பவனையும், மோகநாங்கி சுகர்ப்பனென்பவனையும் சித்திராங்கி காமக்கியன் என்பவனையும், சித்திரரூபி சுகரமுகன் என்பவனையும் பெற்றனள். இதையறிந்த கிருதவீரியன் சாகல்லியர் முதலிய ரிஷிகளுக்குவேண்டிய பொன்கொடுத்தான். அப்பதியிலுள்ள தேவாலயங்களுக்கும் செம்பொன்னும் பலமணிகளிழைத்த அணிகளும், பட்டாடையும்கொடுத்து இன்னும் ஓர்வருஷம் அவ்விடத்திலிருந்து பிறகு எல்லோருடனும் தம் ஊர் சென்று சுகமே வசித்தான்.

3.—சுதர்மாபாபரகிதனுகி புத்திரனை அடைந்தது.

தென்னாட்டில் தாம்பிரபர்ணி தீரத்தில் ஓர் ஊரில் கவுண்டின்னிய கோத்திரத்தில் பிறந்து சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களைச் செவ்வையாக ஓதி உணர்ந்து யாகாதி கிருதுக்களை செய்துகொண்டுவந்த சுதன்மன் என்னும் பிராமணனுக்கு தேவசர்மாஎன்று ஓர் குமாரன் இருந்தான்; அவன் அடிவைத்த இடத்தில் நல்லபயிர்கள் உண்டாக்கி நல்லதனம் சேரும். ஆகையால் அவன் மிக்கதனாட்டியனாக இருந்தான். அவனுடைய பாலியத்தில் அவன் பிதாமரித்ததால், அவன்தாயும் தன்புருஷனுடன் உடன்கட்டையேறி மரித்தாள். சுதன்மாவானவன் பயிர்செய் தொழிலால் ஜீவனம் செய்துகொண்டு தன் பத்தினியோடு அமானுஷியமானபோகங்களை அனுபவித்துக்கொண்டுவாழ்கையில் முன்ஜன்மத்தில்செய்த பாபவசத்தால் அவள் இறக்க, இரண்டாந்தரம் ஓர் பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு அவளுடனும் சுகமனுபுங் காலையில் அவளுமிறக்க, மூன்றாந்தரம் விவாகம் செய்து கொண்டான். அவளுமப்படியே இறக்க இவன்மிக்க தனவான் ஆனதால் நாலாவது தடவையும் ஐந்தாந்தடவையும் விவாகம்செய்து கொள்ள அவளும் இறந்ததையும், கவனியாது, ஆறாந்தடவையாக விசித்திராங்கி என்னும் அருந்ததிக்குச் சமானமான கற்புடையபெண் ஒருத்தியை விவாகம் செய்துகொண்டு

சுகமாக இருக்கும்நாளில், அழகில் மன்மதனைப்பழிக்கும்படியான ஓர் பிள்ளை பிறந்து, மூன்றுமாதம் வளர்ந்து பிறகு இறந்தது. இவ்வாறே அவள் வயிற்றில் பதினெட்டு பிள்ளைகளும் ஒருபெண்ணும் பிறந்து இவர்கள்செய்த பாபவசத்தால் இறந்தன. இம்மாதிரியாகப் பிள்ளைகள் பிறந்து இறந்துபோகும் தோஷத்தை நிவர்த்திசெய்ய, சுதன்மன் அநேக சாந்திஹோமங்களும், ஸேதுஸ்நான முதலியவைகளும், இருபதுதரம் செய்தான். நாகபிரதிட்டைசெய்து பக்தியோடு நாகராஜபலியும் கொடுத்தான். தாம்பிரபர்ணி தீரத்திலுள்ள அநேகம் கோவில்களில் அநேக தருமங்களைச்செய்துவைத்தான். தாம்பிரபர்ணிநதியில் விதிப்படி ஸ்நானம்பண்ணி இராமாயணம் பாரதம், பாகவதம் ஸ்காந்தம் ஹாலாஸ்ய முதலிய புராணங்களை பக்திச்சிரத்தையுடன் படிக்கக்கேட்டுத்தானும் படித்தான். அநேகம்பிராமணர்களைப் பூஜைசெய்தான். சைவவைஷ்ணவ விருதங்களில் அநேக விருதங்களை விதிப்படி அநுசரித்தான். அவன் பூர்வஜன்ம புண்ணியத்தால் அவன் பயிர்ச்செலவெல்லாம் நல்ல பலனைத் தந்ததாதலால் குபேரனுக்குச்சமானமானசெல்வத்தோடு கூடியிருந்தான். ஆயினும் ஜன்மாந்திரதோஷத்தால் வம்சவிருத்திக்குப் பிள்ளையில்லாதிருந்தமையைநோக்கி. அடியில்வருமாறு புலம்பலுற்றான். நான் கொஞ்சகாலம் பெண்டிழந்தவனாய்விட்டேன்; இது உலகத்தாரால் நிந்திக்கத் தக்கது தானே. பிள்ளையில்லாதவனாகிய எனது ஜன்மமும் எனது விருதமும் எனது தருமமும் வீண். என்னுடைய தானியங்களால் என்னபயன்? என்று மனமிரங்கி எல்லாவற்றிலும் வெறுப்புடையவனாய், எனக்கோ வயது ஐம்பத்தைந்து ஆய்விட்டது, இதுவரையில் கிழத்தனமடைந்த எனக்கு யாதொரு பிள்ளையும் உயிரோடுபிழைத்திருக்கவில்லை. இனி எனக்கு என்வீடும் நிலமும் தனமும் தானியமும், என்னபயனைத் தரப்போகின்றன. நான்புத்திராபேக்ஷையால் என்னுடைய பத்தினியோடும் க்ஷேத்ரயாத்திரைசெய்ய அநேக வனங்களிலும், மலைகளிலும் சஞ்சரித்துக்கொண்டு பூமியைப்பிரதட்சணம் செய்கிறேன் என்று சகல சவுக்கியங்களையும்விட்டு, ஒரேதாமுண்டு தரையிற்படுக்கும் விருதத்தைக்கைக்கொண்டு தன்பொருள்களைத் தன்னுடைய மித்திரனாகிய மித்திரசர்மாவினிடம் ஒப்புவித்து "நான் யாத்திரையினின்றும் திரும்பிவருகிறவரையில், நீயே எல்லாவற்றையும் அநுபவித்துக்கொண்டிருப்பாய், நான் பிள்ளையில்லாமல் திரும்புவேனானால், எல்லாம் உன்னுடைய சொத்துக்கள் தான், இதற்கு ரமாகாந்தனாகிய பரமபதியும், உமாகாந்தனாகிய பரமசிவனும், தாம்பிரபரணிநதியும், இராப்பகலும், கிரக தேவதைகளும் சாட்சியாகவிருக்கிறார்கள். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை." என்றுசொல்லி, எல்லாப்பொருளையும் அவனிடத்தில் ஒப்புவித்துவிட்டுத் தானும் தன் மனையாளுடனாக யாத்திரைக்குச் சென்று நாடு நகரங்களைக்கடந்து, அறுபத்தைந்து நாட்கள் சென்றபிறகு, பூர்வஜன்மத்தின் கருமவசத்தால், கலசத்திற்பிறந்த அகத்தியருடைய சீடர்களுள் ஒருவரான மூக்காலங்களையும் உணரும் குசிகன் என்னும் ரிஷியை வழியில் கண்டு அவரைவணங்கி நின்று இருவரும்

தங்கள் தங்களுடைய விருத்தாந்தங்களைச் செவ்வையாக அவரிடத்திற் சொன்னார்கள். அம்முனி புங்கவர், ஓய் விப்ரோத்தம! நீபலபெண்டிரை இழந்ததையும், பலபிள்ளைகளை இழந்ததையும், நான்செவ்வையாய் அறிவேன். நீ முன்ஜன்மங்களிற் செய்தபாதகத்தால் இவை உண்டானவையே யல்லாமல் வேறல்ல. அவற்றைச் சொல்லுவேன் கேட்பாயாக. நீ இதற்குமுன் ஜன்மத்தில் வேதபுரிஎன்னும் பட்டணத்தில் பிறந்த ஓர்பிராமணன். வேதசாஸ்திரங்களை நன்றாக அறிந்தவன். நீதியின்படி நடப்பவன். நீ இருந்தகிராமத்தில் ஒரு நாள் ஓர் கண்ணன் திருக்கோயில், பெருமழையால் இடிந்துவிட்டது. அதையாசகமெடுத்து நீ கட்டுவித்தாய், அந்தப்புண்ணிய வசத்தால், புண்ணியக்ஷேத்திரத்தில் பிறந்து பெரிய சம்பன்னனானாய். நீ செய்தபுண்ணிய பலத்தைச் சொன்னேன். நீ களத்திரமற்றவனாய் ஆனதற்குக் காரணம் சொல்லுவேன்கேள். அதற்கு முன்ஜன்மத்தில், நீ குண்டின புரமெனும் பட்டணத்தில் ஓர் பிராமணனாய்ப் பிறந்திருந்தாய். அப்பொழுது அதிசுந்திரிகளாகிய பத்துப்பெண்கள் உனக்கு பிறந்தார்கள். ஒன்பது பெண்களை ஒருபெண்ணுக்கு ஐந்நூறு ஐந்நூறு பொன் வீதம் வாங்கிக்கொண்டு, நரைத்தகிழவர்களுக்குவிவாகம்செய்துகொடுத்தாய். அப்பெண்கள் நல்லயுவதியர்கள் ஆகையால் அவர்கள் மிக்க துன்பமடைந்து தக்க கணவன் இல்லாது வருந்தியதோடு சில நாட்களுள் தங்கள் புருஷர்களை இழந்தார்கள். புருஷனை இழந்த துக்கத்தால் ஒருபெண், தாமிரபர்ணியில் வீழ்ந்து தன் உயிர்விடுத்தாள்; மற்றவர்களோ விஷம்கொண்டு தங்கள் பிராணனைத் துறந்தார்கள். இப்பாதகத்தால் நீ பெண்டிழந்தவனானாய்.

இதுவுமன்றிக் கடைசிப்பெண்ணை, "கன்னிகாதானம் செய்கிறேன்; அப்பெண்ணுக்கு நகைபோடவேண்டியதற்காக கொஞ்சம் திரவியம் கொடுத்தால் அப்பெண் யுவதியாய் கணவன்வீட்டுக்கு வரும்காலத்தில் அப்பெண்ணை எல்லாவிதமான பூஷணங்களுடனும் அனுப்பிவிடுவேன்" என்று சொல்லி அணிகலத்திற்காகவென்று அதிகதிரவியம் பெற்றுக்கொண்டு பெண்ணைக் கன்னிகாதானம் செய்தாய். ஆதலாலொரு மனையாளுனக்கிருக்கின்றாள். அப்பெண்ணின் கணவனை மோசம் செய்து, அத்திரவியத்தை உனது சொந்தஜனங்களோடு சந்தோஷமாய்ச் செலவழித்து, அப்பெண்ணை ஒரு அணிகலனுமின்றி கணவன்வீட்டுக்கு அனுப்பினாய். அந்த தோஷத்தால் புத்திரர்களை இழந்தாய். இதுவுமன்றி தாம்பிரபர்ணி தீரத்திலுள்ள விஷ்ணுவாலயத்தைச்சேர்ந்த நந்தவனத்திலுள்ள பழத்தையெல்லாம் திருடி உண்டாய். அத்தோஷத்தாலும் உனக்கு பிள்ளைகள் பிறந்து பிறந்து இறந்தன. ஆயினும் இப்பாதகங்களைப் போக்குவதற்குத் தக்க வழிஉண்டு. அதாவது கும்பகோணத்தில் கன்னியாதீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் அநேகபாதகங்கள் தீருமென்று நான் எனது ஆசிரியராகிய கும்பமுனியால் சொல்லப்பட்டிருக்கிறேன். அந்த தீர்த்தத்தில் நீராடும்காலம் ஸிம்மலக்கினத்தில் குருவும் சந்திரனும் சேர்ந்து கும்பலக்கினத்தில் சூரியன் சேரும் காலமாகையால், அக்கா

ஸம் சமீபத்தில் வருகிறது. அப்பொழுது குடந்தைக்குச் சென்று அத்தீர்த்த
த்தில் நீராடி மகாமக விருதத்தை யனுசரித்து பஞ்சக்குரோச யாத்திரை
செய்து விருதசமாபனம் செய்வாயாகில் நல்ல புத்திரனையடைவாய்; நான்
முன்ஜன்மத்தில் இரும்பு திருடியதால், கருங்குட்டநோய்கொண்டு வருந்து
கிறேன்; இதைத் தீர்த்துக்கொள்ளக் குடந்தையை யடையவேண்டுமென்று
ஆசிரியர் அகத்தியர் கூறியிருப்பதால் நானும் வருகின்றேன். கும்பகோண
த்திற்குச் செல்வாயாக என்னும், அவ்விருவரும் கும்பகோணம்சென்று நீராடி
ஒரு ஆண்டு அங்குத்தங்கி பிறகு தன்னூருக்குச் சென்று நண்பனிடமிரு
ந்த தன்சொத்துக்களைப் பெற்றுக்கொண்டு நல்ல ஆயுளுள்ள புத்திரர்களை
யடைந்து சுகமேயிருந்தனர். குசிகனும் குட்டந்தீர்ந்து நல்ல சரீரத்தையடை
ந்து விஜயாஸன மென்னும் நகரடைந்து சுகமாக வாழ்ந்திருந்தான்.

4.—வீரவர்மா சத்புத்திரனையடைந்த கதை.

முற்காலத்தில் கலிங்கதேசத்தில் வீரவர்மா என்ற ஓர்அரசனிருந்தான்.
அவன் மகாதர்மிஷ்டனும், சுத்தவீரனுமிருந்தான். இந்த வீரவர்மாவுக்
கு சுமதி யென்று பெயருடைய ஓர்மனைவி உண்டு. அவள் நற்குண நற்செ
ய்கையையுடையவளாயும், இருந்தாள். இவ்விருவரும், மதனும் இரதியும்
போலும், உமையும் இறையும் போலும், இறையளவும், பிரியாதிருந்து இன்
பம்நுகர்ந்துவருங்கால் இவர்களுக்கு ஓர் பிள்ளைபிறந்தது;அப்பிள்ளை ஒற்றைக்
கண்ணையுடையதும், மயிரற்றதும், அலியாயும், மிகவும் குள்ளமாயும், எல்லா
ராலும் இகழக்கூடியதாயும் கைகால் முதலியவை கோணலாய் அமைந்து
செவியுணர்ச்சி யில்லாதிருப்பதால் பேச அறியாத ஊமையாயும் எழுந்திரு
ந்து நடக்க முடியாததாயும் இருந்தது. இதைக்கண்டு மிகவும் மனம்வருந்
தித் தாய் தந்தையர் இருவரும், பெரியோர்களின் வாக்கியப்படி அநேகதான
தருமங்களைச்செய்து விரதங்களை அனுஷ்டித்து வரும்போழுது, பிறகும் அவ்
விதமாகவே ஓர் குழந்தை பிறந்தது. இதையும் கண்டு தங்களுள் அடங்கா
த்துக்கத்தையுடையவர்களாகித் தாய்தந்தையர் இருவரும், ஐயோ முந்திய
ஜன்மத்தில் இப்படிக் குரூபிகளாகிய புத்திரர்களைப் பெறுவதற்கு என்னபெ
ரும் பாவங்களைச் செய்தோமோ, அப்பாபங்களைத் தொலைக்க எங்குச் செல்
வோம், எவ்விரதத்தை அனுஷ்டிப்போம், என்ன தானதருமங்களைச் செய்
வோம், எப்படி நமக்கு நல்ல இலட்சணமுள்ள பிள்ளை எப்பொழுது உண்டா
குமென்று பரிதபித்துக்கொண்டிருக்கையில் அவர்கள் வம்சகுருவாகிய சா
ண்டில்லியர் தற்செலாய் அவ்விடம் எழுந்தருளினர். இம்முனிவர் முக்காலங்
களையும் நன்கு உணரும் திறமையுடையர். மிக்க அறிவுடையவர். இவ்வர
சனுக்குக்குலகுருவாய் இருப்பவர். ஆதலால் இவரைக் கண்டவுடன் தன்
மனைவியோ டெழுந்து எதிர் கொண்டு வணங்கி அழைத்துவந்து நல்ல ஆச
னத்தில் எழுந்தருளப்பண்ணி, அர்க்கிய, பாத்திய ஆசமனாதி பதினாறு வித
மான உபசாரங்களால் தெய்வத்தைப்போல எண்ணிப் பூசித்து, (*நமஸ்கா

ரம் மூன்றுவகை,) சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து எழுந்து, இரண்டு கரங்களையும் சிரத்தில் குவித்து நின்று, இருகண்களாலும் ஆநந்தக்கண்ணீரைத் தாரைதாரையாகவிடுத்து, "என் ஆண்டவனே! நாங்கள் முன்ஜன்மங்களில் செய்திருந்த நல்வினையாலே தங்களைக்காணப் பெற்றோம்; ஆதலால் நாங்கல் தந்யராயும், தங்கள் அநுக்கிரகத்தைப்பெற யோக்கியர்களாயும் ஆகின்றோம். எங்கள் மனதாகிய வண்டுகள்தங்கள் திருவடித்தாமரைகளினின்றும் நீங்காமல் அங்கேயே குடிகொண்டன. எங்களுக்குச் சமானமானவர்கள் இவ்வுலகத்தில் ஒருவரும் இல்லை. தங்களுடைய கிருபாகடாட்சவீக்ஷணத்திற்குப் பாத்திரராகவிருக்கின்றோம். ஏ குரோ! குருவின் தரிசனத்தினால் எவ்விதமான புண்ணியம் உண்டாகின்றனவோ அவற்றிற்குச்சரியான புண்ணியம் உலகத்திலுண்டோ; குருதரிசனம் கிடைக்கின்றநாளே நன்னாளாகும்; கடவுளுக்கும் குருவிற்கும் வித்தியாசம் யாதெனில் கடவுள் அசையாத அர்ச்சாரூபத்தையுடையவர், குருவோ இடத்திற்கிடம் செல்லும் தன்மையையுடையவராம். ஆதலால் எங்கள்குலதெய்வமாகிய தாங்கள் எங்கள்மனத்திலுள்ள நீங்காக்குறையை நீக்கியருளவேண்டும். உலகத்திலுள்ள நல்லார் பொல்லார் எல்லாராலும் நிந்திக்கத்தக்க குரூபியாயும் அங்கஈனனுமான பிள்ளை எங்களுககுண்டாயிருக்கிறது. அது எப்பாதகத்தாலே தெரியவில்லை, எங்களுக்கு நல்ல இலக்ஷணங்களையுடைய பிள்ளைபிறக்க அநுக்கிரகம் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தனர். இதற்குச் செவிசாய்த்த குரு சிறிதுநேரம் தியானத்திலிருந்து கண்விழித்துக் கருணைபெருக அரசனைநோக்கி ஏ நரேந்திரா! உனக்கு அங்கவீனமானபுதல்வன் உண்டாவதற்குக் காரணம் நீ முந்திய பிறப்பில் செய்ததீவினையே. நீ முன் பிறப்பில் அதிகபலவானான ஓர் அரசன். பிரமன் பாகுவில் பிறந்த க்ஷத்திரிய வம்சத்தேன். பலம் அதிகமாயிருக்கிற மமதையாலே நீ வீட்டு வாயிற்படிக்குப் படிக் கட்டு கட்டுவதற்காக சிலையில் அடித்து பிரதிஷ்டைபண்ணிய நாகங்களை உடைத்து அவற்றைக்கொண்டே படிக்கட்டுகளை க்கட்டினாய். அரண்மனைப் பார்ப்பாரெல்லாரும் அதைத் தீச்செயலென மிகுந்த சிரமத்தோடு உனக்குத் தெரிவித்து மறுக்க, நீ அதை மிகுந்தவருத்தத்தோடு ஒப்புக்கொண்டு, வேறுகற்களால் படியைக்கட்டியதுமன்றி, நாகங்கள் சிலையிற்செய்து அவற்றைப் பிரதிட்டையும் செய்தாய். அப்படிச்செய்தும் அவைகளை உடைத்ததோஷத்தால் உனக்குக் குரூபியாகியபிள்ளை பிறந்தது. இனி உனக்கு நல்லபிள்ளையுண்டாவதற்கும் தக்கவழியிருக்கிறது. அதைச்சொல்வேன் செவ்வையாய்க்கேள். இந்த க்ஷேத்திரத்திற்கு நேர் தெற்கே கும்பகோணம் என்றொரு உத்தமமான தலமுளது. அதில் மகாதீர்த்தமென்றொரு தீர்த்தமுளது. அதில் 12 வருஷத்திற்கொருமுறை குரு சிம்ம இராசியிலும் சூரியன் கும்பவிராசியிலும் நிற்கச்சந்திரன் குருவுடன் சேருங்காலமாகிய மகாமக தினத்தில் நீராடுகிறவர் தங்கள் தங்கள் இஷ்டத்தையெல்லாம் அடைகிறார்களாகையால்; அந்த மகாமகம் உங்களுடைய நல்வினையால் சமீபத்தில் வரு

றெபடியால் நீங்கள் இருவரும் அவ்விடம் சேர்ந்து அந்நீராடி தானதருமஞ் செய்து உங்களுக்கு எல்லாராலும் புகழத்தக்க நல்லபிள்ளையுண்டாவதற்குச் சந்தேகமேயில்லை. நீங்கள்போய்த் தடாகத்தில் நீராடி அரசமரம் வலம்வந்து, அந்நிழலிலிருந்து அடியில்வருமாறு தானம்செய்யவேண்டியது. அவையா வையெனில், அரசமரத்தின் அடியில் இருந்து பிராமணர்களைச் செவ்வையாகப்பூஜித்து (1) கல்பகவிருக்ஷதானமும், (2) சர்க்கரைசேர்த்துப்பிடித்த எள்ளுருண்டை பதினொன்றும், (3) வெண்ணெயால்செய்த இலிங்கதானமும், விதிப்படி செய்யவேண்டியவைகளாம், என்று சொல்லிய குருவின் வாசகமாகிய அமுதத்தைச் செவியாரப்பருகி மிக்க ஆனந்தக்கடலில் ஆழ்ந்து, அவரை வணங்கி வழிபட்டு அவரையனுப்பியபிறகு, தான் தனது பெண்சாதியோடும் பரிவாரங்களோடும் கும்பகோணக்ஷேத்திரத்திற்கு மகாமக வுற்சவத்திற்குச் சென்று உத்தானசாயியாய் எழுந்தருளியிரானின்ற ஆராவமுதனுக்கும், கும்பலிங்கேசருக்கும் உத்ஸவம்நடப்பித்து கடைநாளில் தீர்த்தங்களில் அவபிருதஸ்நாநமும் செய்தனன். பிறகு மகாதீர்த்தத்தில் மகாமகத்திற்காக நீராடிப் புண்டிரம்தரித்து, நல்லுடையுடுத்து அரசமரத்தினடிக்குவந்து பிராமணர்களைப்பூசித்து வணங்கிக் கற்பகவிருட்சதானமும், இரத்தினத்தை இடையிற் புதைத்த வெண்ணெயால்செய்த இலிங்கம் தானமும் பிராமணர்களுக்கு செய்து வெல்லம்சேர்த்து எள்ளை உருண்டையாகப்பிடித்து அதில் பதினொன்றைப் பிராமணர்களுக்குகொடுத்து, நிரம்ப அன்னதானம்செய்தான். பிறகு சாரங்கபாணிக்கும், கும்பஇலிங்கேசருக்கும் அர்ச்சனை செய்வித்து, அத்தலத்திலேயே க்ஷேத்திரவாசம் செய்துகொண்டிருக்கையில் அவன் மனைவி கருப்பமுற்று அதிகசுந்தரமான ஓர் ஆண்மகவைப்பெற்றனள். பிறகு சிறிதுநாட்கள் சென்றபின், தன் பரிவாரங்களுடன் தனது தேசத்திற்குத் திரும்பிச்சென்று சிலகாலம் அரசுபுரிந்து பிறகு தன்மகனை அரசனுக்கி அவனுக்கு முடிசூட்டி, இராச்சியத்தை அவனிடத்திலொப்புவித்துத் தான்மனைவியுடன் குடந்தைசென்று, சக்கிரபாணி சந்நிதியையும், கும்பேசர் ஆலயத்தையும் திருப்பணி செய்வித்துப் புதுப்பித்து, பொற்றாமரை, மகாமகதீர்த்தம் இரண்டிற்கும் படிக்கட்டுவித்து அவற்றைச்சுற்றிலும் வீடுகள் அமைப்பித்துப் பிராமணர்களுக்குத் தானம்செய்து அங்கேயே சவுக்கியமாகத் தனது வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருந்தான். ஆகையால் நல்லபிள்ளையைப் பெறவிரும்புவோர் இந்நீராடுவது முக்கியம்.

5. ஞானவான் பெற்றோர் மரணத்தாலுண்டான பாபம்நீங்கியகதை.

கூர்மயாகம். (கூர்மம்=ஆமை.)

கண்ணுவ மகாரிஷியின் வம்சத்தில் தோன்றியவராயும் நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்ஸ்மிருதி முதலியவைகளை ஓதி யக்கியயாகாதிகளையெல்லாம் நன்றாகத்தெரிந்து செய்பவராயும், நிறைந்த செல்வத்தையுடையவராயும், பெரியவித்துவானாயும், தெய்வம், பிராமணர்கள் முதலியவர்களிடத்

தில் அன்பும் அபிமானமும் வணக்கமும் உடையவராயும், அஷ்டாக்ஷரம் எனும் மந்திரத்தை இஷ்டமுடன் ஜபிக்கும் நாவையுடையவராயும், யக்ஞசீலர் என்னும் நாமத்தை யுடையவராயும் ஓர் அந்தணர் இருந்தனர். இப்பிராமணருக்குச் சீலவதியென்றோர் இல்லறக் கிழத்தியுள்ள். அவள் தனது கணவனை மகாவிஷ்ணுவென்றே நினைத்து அவனைத்தவிர வேறொருவரையும் கனவிலும்நினையாமல், அவன் பாதாரவிந்தத்தையே எப்பொழுதும் தியானம் செய்துகொண்டு அவனுக்கே எப்பொழுதும் தொண்டுசெய்பவள்.

இவ்விருவரும் இல்லறதருமத்தை வழுவாமல் நடாத்திவருங்காலையில் யக்ஞசீலனுக்கு எண்பதாவதுவயதில், சீலவதி கருவுற்று ஓர் ஆண்குழந்தையைப் பெற்றனள். அக்குழந்தைக்கு ஞானவான் என பெயர்வைத்து வளர்த்துவந்தார்கள். இந்தஞானவான் தன்தகப்பனிடத்திலிருந்து எல்லாக்கலைகளையும் ஓதியுணர்ந்து எல்லாராலும் கொண்டாடத்தக்க கீர்த்தியுடையவனாய், குரோதமற்றவனாய், உலகத்தார் எல்லாராலும் பூசிக்கப்பட்டவனாய் "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்" என்றபடி உலகத்தார் எப்படி நடக்கின்றாரோ அப்படியே ஏற்கின்றவைகளைத் தழுவிநடக்கும் தன்மையையுடையவனாய்த், தகப்பனிடத்தில் அதிக அன்பும் மரியாதையுமுடையவனாய், தகப்பன்சொல்லை யெப்பொழுதும் அனுசரிப்பவனாய், நற்செய்கைகளே தனக்கு அணியாகப்பூண்டு எப்பொழுதும் தேவபூஜைசெய்யும் சித்தமுடையவனாய் இருந்தான். இருக்கும்நாளில் யக்ஞங்களுக்கெல்லாம் முதன்மைபெற்றதும் எல்லா யக்ஞங்களினாலும் அடையக்கூடிய பயனைத் தரக்கூடியதும், பக்தி, ஞானம், வைராக்யம் முதலியவைகளை விருத்தி பண்ணக்கூடியதும் சகலபாபங்களையும்போக்கி முத்தியைத் தரக்கூடியதுமாய் உள்ள கூர்மயக்ஞமென்னும் ஓர் யாகம் உண்டு. அது உலகத்திற்கு மிகவும் சுத்தியை கொடுக்கக்கூடியதும் கீர்த்தியையும், புண்ணியத்தையும் உண்டாக்கக்கூடியதும், விஷ்ணுவைப் பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கக்கூடியதுமான ஓர்யாகம். அந்தக் கூர்மயாகத்தைத் தொடங்குவதற்கு நிச்சயித்த காலமுதல் யக்ஞ பசுவான கூர்மம் (ஆமை) கொண்டுவரப்படுகிறவரையில் அன்னமில்லாமல் உபவாசமிருக்கவேண்டியதென்பது யாகங்களின் இலக்ஷணங்களை அறிந்தவர் கொள்கையாம். யக்ஞசீலனானவர் இவ்விதமான ஒரு கூர்மயாகத்தை உத்தேசித்து சங்கல்பம்செய்துகொண்டு விதிப்படி முதல் நாள் அநேகம் பிராமணர்களுடன் யாகசாலைக்குப்போய் தனது மனைவியோடு யாகசாலையின் மேடையிலேறி அம்மேடையிலுள்ள ஸ்தம்பத்தைச் சேர்ந்து நின்று ஆகாரத்தையும் சுகசௌக்கியங்களையும் துறந்து நின்று தனது குமாரனாகிய ஞானவானைநோக்கி "ஏ குழந்தாய்! கல்விக்களஞ்சியமே, என் அருமை இளவரசே, சமுத்திரத்திற்குச்சென்று மூன்றுநாள் உபவாசமிருந்து "ஏத்கூர்மம்" என்கிற கூர்ம மந்திரத்தைச் சொல்லி சமுத்திர ராஜனை பிரார்த்தித்தாயானால் சமுத்திரராஜன் மூன்றாம்நாள் சாயங்காலம் ஒரு ஆமையைக் கொடுப்பார். அந்த ஆமையை ஜலத்தோடுகொண்டுவந்து "மமகூர்

மம்"என்கிற மந்திரத்தினால் என்னிடத்தில் கொடுத்தால் அந்த கூர்மத்தோடு யாகசாலையை பிரதட்சணஞ்செய்து யாகசாலைக்குள்சென்றால் கூர்ம யாகமானது ஆரம்பஞ்செய்யப்படும். இந்த யாகத்தின் ஆரம்பத்திற்குப் பிறகு அதற்கு ஏதாவது இடையூறு நேர்ந்தாலும் சாஸ்திரத்தில் சொல்லிய விதிகளுக்குக் கொஞ்சம் குறைந்தாவது அதிகப்பட்டாவது மாறுபட்டாலும் யாகம்செய்கிற கர்த்தாவுக்கு உடனே நாசம் உண்டாகும். 'நீ வருவதற்கு எத்தனைகாலம் செல்லுகிறதோ அதுவரையில்நானும் என்மனைவியும் அன்னம் இல்லாமல் உபவாசத்தோடேயே காத்துக்கொண்டிருப்போம். எங்களுக்கு எப்பொழுதாவது ஆகாரத்தில் விருப்பமுண்டானால் உடனே எங்களுக்குச் சாவு உண்டாகும் என்பது நிச்சயம். ஆகையால் குழந்தாய் ஆமையைக்கொண்டுவரப்போகிற நீ அதிக விரைவுடன் வந்துசேரவேண்டியது" எனக் கூறினர்.

இவ்வாறுசொல்லிய தனதுபிதாவின் வார்த்தையைச் சிரசாகவகித்துத் தனது பிதாமாதாக்களையும், மற்றுமுள்ள பிராமணர்களையும் சிரங்குவித்த கரத்தோடு பிரதக்ஷணம் நமஸ்காரம்செய்து வணங்கின்று அவர்களிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு சமுத்திரத்தைநோக்கி வேகமாய்ச்சென்று சமுத்திர இராஜனாகிய வருணனைப் பூஜித்து வணங்கி யாகத்திற்காக ஆமையைத் தரவேண்டுமென்று மந்திரம்சொல்லி அடியில்வருமாறு ஞானவான் சமுத்திர இராஜனைப் பிரார்த்தித்தான்.

"கிழக்குமுகமாய் ஓடுகின்ற நதிகளுக்கும், மேற்குமுகமாய்ச் செல்கின்ற நதங்களுக்கும் தலைவனே! எனது பிதாவின் யக்கியத்துக்கு அவசியம் வேண்டியிருக்கிற ஆமையை உடனே எனக்குக் கொடுக்கவேண்டும் ஐயா, எனது பிதா வயதுசென்ற கிழவர், நரை திரையால்மெலிந்த உடலையுடையவர்; யாகசாலைக்குச்சென்று கூர்மம்வருகிறதை எதிர்பார்த்துக்கொண்டு ஊண் உறக்கம் இல்லாமல் இருக்கிறார். ஆமை கிடைப்பதற்குக் காலதாமதம் உண்டானால், அவருக்கும் அவர்செய்வதாக உத்தேசித்திருக்கிற யாகத்திற்கும், தீமையுண்டாகும். ஆதலால் யாகம் நிறைவேறும்படியான ஆமையைக் கொடுக்கவேண்டுமெனச் "சமுத்திரராஜனைபிரார்த்தித்துக்கொண்டுநின்றான். இவ்வாறு இரண்டுநாட்கள் கழிந்தன. மூன்றாம்நாள்மாலையில், ஞானசீலனுடைய மனதைப் பரிசோதிப்பதற்காகவும், அவன் முந்தியபிறப்பில் செய்தபாபத்திற்கு உள்ளாக்கவேண்டியதற்காகவும்; இப்பூலோகத்திலுள்ள தீர்த்தங்களுக்கெல்லாம் மேன்மைபெற்ற க்ஷேத்திரத்தையும் எல்லோருந் தெரிந்துகொள்ளும்படி செய்யவும், சமுத்திரராஜன் ஞானவானுக்குத்தோன்றாமல் மறைந்திருந்தனன். கடற்கரையில் மிகுந்த கவலையோடு காத்துக்கொண்டிருந்த ஞானவானுக்கு எதிரில் சமுத்திரத்தினின்றும் மிக்க அழகும் எல்லாரையும் மோகிக்கச்செய்யும் அவயவங்களும், புன்சிரிப்போடுகூடிய முகத்தையும் உடைய மிகவும் சௌந்தரியவதியுமான ஒரு கன்னிகை வீணாகானஞ்செய்து கொண்டு ஆமையின்பொருட்டுக் காத்துக்கொண்டிருக்கும் ஞானவானுக்கு

முன்னேவந்துஉட்கார்ந்தாள். உட்கார்ந்து அப்பிராமணனைப்பார்த்து "பிராமணோத்தமனே! இப்பொழுது நான் பாடுகிறபாட்டை ஒருதரம் கேட்பீரானால் இஷ்டலாபத்தையடைவீர்; நல்லபுருஷனை அடையவேண்டுமென்று சமுத்திரத்தினின்றும வருகின்ற என்னை எல்லா சாஸ்திரங்களிலும வல்லவளென்றும சங்கீதத்தில் தேர்ச்சியுள்ளவளென்றும் நீர் அறிவீராக" என்று சொல்லி தகப்பன்யாகம் நிறைவேறும்பொருட்டு ஆமையைவேண்டிக் காத்துக்கொண்டிருப்பவராக இருக்கின்ற யக்ஞசீலனைத் தன் பாட்டைக்கேட்கும்படிசெய்து, "ஹே விப்ரவர்ய! ஜகத்திற்கு எல்லாம் சவுக்கியத்தைத் தருகின்ற சமுத்திர கன்னிகை என்று என்னை நீர் அறிவீராக. நான் நெடுநாளாக எனக்கு ஒத்த கணவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன், எனக்குக் கணவனாயிருக்கத் தகுதியுள்ளவரும் மிகவும் சூரரும் மிகுந்த காமவின்பத்தை நான் மகிழும்படி யளிக்கக் கூடியவருமான உம்மை எல்லாம்வல்ல கடவுளல்லவோ இவ்விடத்திற் கொண்டுவந்து சேர்த்தார். உம்மைப் பார்ப்பதினாலேயே நான் ஜன்மம் எடுத்த பயனை அடைந்தேன். நான்செய்த தபசு பலித்து எல்லாத் தெய்வங்களு மிப்பொழுதுதான் சந்தோஷத்தையுடையவர்களாயினர்" என்று பலவாறாகப் புகழ்ந்துசொல்லி 'ஐயா நீர் என்னுடைய பாட்டை செவ்வையாகக் கேட்காவிட்டால் என்பிராணனை உம்முடைய காலண்டைவிட்டுவிடுவேன், அதற்குச்சந்தேகமில்லை, எந்தஸ்திரீயானவள் தன் கணவனையிழந்து தன் யௌவநத்தையும் ரூபத்தையும், வீணாக்குகிறாளோ அவளுக்கு வல்குலி என்றுபெயர். நல்ல இலக்ஷணமுடைய பெண்கள் தங்களுக்குச் சமமான வயதும், இலட்சணமும் உள்ளபுருஷனையடையாமற் போனால் அவளுடைய யௌவநமும், உயர்ந்த குலப்பிறப்பும், நல்ல அழகும் பயன் அற்றதாக ஆய்விடும். புருஷனிடத்தில் மிக்க ஆசையுடன் அவனைச் சேர வந்தபெண்ணைச் சேரவொட்டாமல் விலக்கினால், அப்புருஷன் அடுத்த பிறப்பில் அட்டையாகவும் ஆணும் பெண்ணுமல்லாத அலியாகவும் பிறப்பன் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகையால் என்னை இகழாமல், என்பாட்டைக் கொஞ்சம் கேட்டால் உமக்கு நல்லமங்களமுண்டாகும். உம்மை நான், சம்மானம் கேட்கவில்லை, எனக்குப் புருஷனாகமட்டும் ஆகும்படி உம்மைகேட்கிறேன்" என பட்சிகளும், பாம்புகளும், குழந்தைகளும், மரங்களும், மலைகளும் கேட்டு உருகும்படி, கொஞ்சங்கூடக் குற்றம் இல்லாமல் தேவதைகளும் கேட்டு ஆநந்திக்கும்படி பாடத்தொடங்கினாள். இந்தப் பிராமணன் சிறியவயதுள்ளவனாயும், நல்லகுணவானாயும், இலட்சணமுள்ளவனாயும் இருந்ததால் அப்பெண்ணுஞ் சிறுமியாயும், புருஷனையடையவேண்டுமென்கிற ஆசையுள்ளவளாயும், தனிமையாயும், நல்லரூபமுடையவளாயுமிருந்தபடியால் அவளிடம செல்லுகின்றமனதை முற்றும் தன்வசப்படுத்திக்கொண்டு, இவள் சிறிதுபொழுது தானே, தன்பாட்டைக் கேட்கவேண்டுகிறாள், அதைமட்டும் கேட்போமென்று நினைத்து அவள் கீதத்தில் மனதைச் செலுத்தினான். செலுத்திய உடனே சிறிதும் தனது எண்ணம தனக்குத்

தோன்றாதவனாய் இருந்தான். இரவு பகல் என்றும் இவனுக்கு தோன்றவே இல்லை. சந்தியாவந்தனமும் ஜபமும், தேவபூஜையும், யாகமும், தாயும், தந்தையும், பாட்டுக்கு முன்னிற்காமல் ஓடிப்போய்விட்டன. இப்படியிருக்கையில் இவனுக்கு ஆமையின் நினைவு எங்கிருந்து உண்டாகப்போகிறது. இவ்வாறு எழுநாட்கள்கழிந்தன. அவன் தகப்பன் யாகமும் அழிந்தது. அவன் தாய்தந்தையர் பசிபொறுக்கமுடியாதவர்களாய் இறந்துவிட்டார்கள்.

தெய்வத்தின் மாயையால் வந்த அப்பெண்ணும் திடீரெனமறைந்துவிட்டாள். அவள் திடீரெனமறைந்ததும், இப்பிராமணன் "இது என்ன ஆச்சரியமாயிருக்கிறது. எங்கேயோபோய் விட்டாளே இச்சிறுமி! எங்கே போய்த்தேடுவேன்! என்று புலம்பிக்கொண்டே மயக்கம் கொண்டவனாய் தன் நினைவு தனக்கு இல்லாமல் மூன்றுநாள் இருந்தான். பிறகுகொஞ்சம் கொஞ்சமாய் ஞானமடைந்து, தன் நினைவு தனக்கு வந்ததும் தன்னை மிகவும் நிந்தித்துக்கொண்டு, ஐயோ என் ஜன்மமும், எனது விரதமும் பெற்றோரிடத்தில் அன்புந் தேவபூஜை பிராமணபூஜை முதலியனவும வீணாயினவே! இந்த காலத்திற்குள் என் தகப்பன் கதி எப்படி ஆயிருக்குமோ? எனக்கு எப்பொழுது ஆமைகிடைக்கும? நான் எப்படி என்தகப்பன் யாகத்தை முடித்து வைக்கப்போகிறேன்? நான் வரும்பொழுதே என்தகப்பனார் ஊணுறக்கமில்லாமல் விரதத்தோடுயாகசாலைக்குவந்து காத்துக்கொண்டிருந்தாரே, என்தாயும், தகப்பனும் அதிகவயது சென்றவர்களாதலால் உபவாசமிருக்க அவர்களால் எப்படிமுடியும. அவர்கள் நிச்சயமாய் இறந்திருப்பார்கள். ஒருக்கால் பிழைத்திருந்தாலாகாதா? நான் ஆமையைப்பெற்றுக்கொண்டு போகிறேன். உயிரோடிருந்தால் என் காலதாமதத்திற்கு நான் மன்னிப்புக் கேட்பேன். இறந்துவிட்டால் பிறகு எனக்கு வரக்கூடிய பாபங்களெல்லாம் வரட்டும், அவைகளை என்னால் விலக்கக்கூடாது" என்று சொல்லிக்கொண்டு சமுத்திரராஜனைப் பிரார்த்தித்தான். சமுத்திரராஜன் உடனே எதிர்தோன்றி, ஆமையைக்கொடுக்க அதை ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் ஜலத்தோடு எடுத்து, அதை ஒரு பிரமபத்திரத்தால் (பிரமபத்திரம்=புகையிலை) மூடிக்கொண்டு சென்றான்.

இங்கிப்படியிருக்க, அங்கு யாகத்தைத் தொடங்கின யக்கியசீலனான கிழவன், மூன்றுநாள்வரையில் ஞானவான் வரும்வழியைப் பார்த்துக்கொண்டிருந்தும் அவன் வாராமையால் "என் குமாரன் எல்லாராலும் மிக்க அறிவுடையோனென்று கொண்டாடப்பட்டவன்; எல்லா சாஸ்திரங்களையும் நன்றாய் அறிந்தவன்; பெரியவர்களிடத்திலும் தகப்பனாகிய என்னிடத்திலும மிக்கபக்தியுள்ளவன். நான்யாகம் தொடங்கியது அவனுக்குச் செவ்வையாகத் தெரிந்திருந்தும் இதுவரையிலும் ஆமையுடன் திரும்பிவரவில்லையே! ஏதோ கெடுதலுண்டாயிருக்க வேண்டுமேயொழிய வேறில்லை, என்னுடைய யாகம் எப்படி நிறைவேறப்போகிறது. நானோ வயதுசென்றவன், என் மனைவியும் கிழவி, எப்படி நாங்கள் பட்டினி இருக்கப்போகிறோம்" என்று கவலையுடன

புலம்பிக்கொண்டிருந்தான். இவ்வாறு ஆறுநாட்கள் கழிந்தன. ஏழாம்நாள் தனது குமாரன் வராத விசாரத்தாலும், ஆகாரமில்லாமையாலும், யக்ஞசீலன் தன் பிராணனை விட்டான். இதைக்கண்ட அவன்மனைவியும் உயிர்விட்டாள்.

அங்கு யாகசாலையிலுள்ள ரித்விக்கு முதலிய பிராமணர்களும், பந்துக்களும், யாகத்திற்கு வேண்டிய சகல காரியங்களையும், நிறுத்திவிட்டுத்தாங்கள் ஒன்றும் செய்யத்தோன்றாதவர்களாய்க் கவலைப்பட்டுக்கொண்டு 'இவ்வளவு நல்லவர்களாகிய இவர்களுக்கு உத்தரகிரியைகளைச்செய்யப் புத்திரன் வராமற்போய்விட்டானே' யென்று புலம்பிக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் ஞானவான் ஆமையோடு யாகசாலையில் நுழைந்தான். உடனே, தன் தகப்பனையும் தாயையும் காணாதவனாய், அங்கு உள்ளவர்களால் தன்பெற்றோருடைய மரணத்தை அறிந்துகொண்டு உடனே கூர்மத்தை வேதிகையில்வைத்துவிட்டுத் தன்தகப்பன் பிரேதத்தின் மீதுவிழுந்து, கோவென்று கதறி அழுது, பிறகு தன்பாபத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென்பதை உத்தேசித்து மிக்கப்பெரியோர்களும் அறிவுடையோர்களும் நிறைந்து கூடியிருக்கும் நைமிசம் என்னும் வனத்திற்குத் தன்பெண்டிருடன் சென்றான். சென்றவன் அங்குள்ள பெரியோர்களை வணங்கித் தனது பாதகத்தைச்சொல்லி இதற்குப் பிராயச்சித்தம் சொல்லவேண்டுமெனப் பிரார்த்தித்தான். அவர்கள் இப்பாதகத்தைக் கேட்டு, "ஹே" பிராமணோத்தமா! நீ நல்ல ஞானவான் என்பதற்குச் சந்தேகமில்லை. உன் முந்திய ஜன்மத்துப் பாபத்தாலதான் உன் பிதா, மாதாக்கள் இறந்தார்கள். உன் பாதகத்தால்தான் யாகம் நிறைவேறாமல் போயிற்று. உன் பாபத்தால்தான் சமுத்திரராஜன் உனக்கு சீக்கிரம் ஆமையைக் கொடுக்கவில்லை. இந்த பிதிருஹத்திக்கு நீதான் பாத்தியஸ்தன் என்று கூறி அவன் முன்ஜன்மத்துப் பாதகத்தையும் அவனுக்குச் சொல்லத்தொடங்கினர்,

"ஞானவானே! நீமுன்ஜன்மத்தில் மதுரையில் பயிர்த்தொழிலால் மிக்க பணக்காரனான ஒரு சூத்திரன். உன்னுடைய பசுக்கள்கட்டியிருந்தகொட்டில் பழுதாயிருந்தது. மழைகாலம் வந்தபொழுது உனக்கு வேண்டியவர்கள் எல்லோரும அக்கொட்டிலைப் பழுதுபார்த்துச் சீர்திருத்தவேண்டுமென்று பலமுறை சொல்லியும், நீ கேளாதவனாய்ச் சும்மாவிருந்தாய். அதிகமாகப் பெய்தமழையால் அத்தொழுவம் இடிந்து விழுந்ததால் சில பசுக்கள் இறந்தன. சில பசுக்களுக்குக் குடல்கள் சரிந்தன. சிலவற்றிற்குக் கால்கள் ஒடிந்தன. இவற்றைப் பாபகருமம் எனப் பலர் உனக்குச் சொல்லியும் நீ அப்பாதகத்தைப் போக்கிக்கொள்ள வகைதேடாமல் சும்மாயிருந்துவிட்டாய். இவ்விதமாக இடிந்தயிடத்தில் மாடுகளைக் கட்டும்படி செய்த தோஷத்தால் உன் வீடு தீப்பிடிக்க நீயும் உன் சொத்துக்களும் அழிந்துவிட்டன. உடனே இப்பாதகம் நீங்க ஒரு மனுவந்தரம் நரகத்தில் கஷ்டங்களை அனுபவித்துப் பிறகு அந்த ஜன்மத்திலேயே வேதமோதியுணர்ந்த நல்ல பிராமணர்களுக்கு இரு

பது பசு தானஞ்செய்திருந்தமையால் இந்த ஜன்மத்தில் பிராமணனாகப் பிற ந்தாய். அந்த பாபம் பாக்கியிருந்தபடியால் இந்தப் பாதகம் உனக்கு நேர்ந் தது. இதை நீ போக்கிக்கொள்ள வகைதேடவேண்டும். இப்பாதகம் எல்லாப் பாதகங்களிலும் மேலானது. இதற்கு யாதொரு பிராயச்சித்தமும் சாஸ்திரத் தில் சொல்லப்படவில்லை. ஆயினும் எல்லா சாஸ்திரங்களினுலும் துணிந்த பொருளைச் சொல்லுகிறேம் கேட்பாயாகவென சௌநகர் முதலிய முனிவர் கள் சொல்லத்தொடங்கினர். "தெற்கே கும்பகோணமென்றொரு க்ஷேத்திர முண்டு; அதில் அமிருதசரஸ் என்று இரண்டு தீர்த்தங்களிருக்கின்றன. அவை களில் நீராடினல் கங்கையிலும், சேதுவிலும் கோதாவரி, கிருஷ்ண, காவேரி முதலிய நதிகளிலும் முழுகிய பலனெல்லாம் ஒருங்கே கிடைக்கும். அத்தீர்த் தத்தில் முழுகுமகாலம குரு சிம்மத்திலும், சூரியன் கும்பத்திலும சேர்ந்த மகாமக காலம. ஆதலால் அப்பொழுது நியமவிரதப்படி நீராடினல் உன் பாபம் தீரும் என உரைத்தனர். ஞானவான் அவ்விதமே கும்பகோணம் செ ன்று நீராடி, தேவபூஜை, பிராமணபூஜை, க்ஷேத்திர யாத்திரை முதலியனவை களைச் செய்து, ஒருவருஷம் அவ்வூரிற்றங்கிப் பிறகு தன்னகரடைந்தான். இவன் சகல பாபங்களுமநீங்கி, எட்டுப் புத்திரர்களையடைந்து, சகல செல் வத்தையும்பெற்றுக் கடைசியில் சாயுச்சியபதவியடைந்தான்.

6.—ஏமவாகு மனைவி வேதாளம் நீங்கிய கதை.

பூர்வத்தில் பாகல்வியநாட்டில் புண்ணியவாகுவென்னும் அரசனுக்கு ஏம வாகு என்றொரு புத்திரனுண்டு. அவன் தன் தகப்பனுக்குப்பிறகு பட்டத்தி ற்குவந்து இராச்சியத்தை மநுமுறைதவருது செங்கோல் செலுத்திக்கொண்டு வந்தான். இவன் மனைவி சுலோசனையென்பாள் சகல நற்குணங்களும் பொ ருந்தியவள். சுவர்ணபாகு (ஏமவாகு) இப்பெண்சாதியோடு சுகமனுபவித்து வருங்காலத்தில் ஒருநாள் அரண்மனைக்குச் சமீபத்திலுள்ளதோர் நந்தவனத் திற்குச்சென்று அங்குள்ள வாவியில் இருவரும் ஜலக்கிரீடைசெய்து பிறகு அவ்விடத்திலுள்ள மண்டபத்தில் ஒரு படுக்கையைச்சேர்ந்து இருவரும் கல ந்து சுகித்தபிறகு சுலோசனை தனியான ஓர் சயனத்தில் படுத்து உறங்கினள். அப்பொழுது அவள் உடுத்தியிருந்த ஆடை சற்று விலகியிருப்பதைக் கண்ணு ற்று அத்தோட்டத்திலிருந்த ஒரு வேதாளம் அவளைச் செம்மையாகப் பிடித் துக்கொண்டு தன் புருஷனைப்போலவே ஓயாது அவளுடன் மோகமனுபவித் துக்கொண்டிருந்தது. இதனல் அவளுடம்பிளைத்ததுமல்லாமல், அவள் ஓயா மல் தலையை விரித்துக்கொண்டு அழவும், சிறிதளவு சிரிக்கவும், வந்தவர்களை யெல்லாம் கோபித்துக்கொள்ளவும் ஆரம்பித்தாள். இதைக்கண்ட அரசன் மனங்கலங்கி மந்திரத்தாலும, சாந்தி ஹோமங்களாலும், வைத்தியத்தாலும் தன்னல் கூடியவரையில் முயற்சிசெய்தும் தன் மனையாளின் பித்து நீங்கா மையால் மனம் வருந்திக்கொண்டிருக்கையில் கார்க்கியர் என்னும் ஓர் முனி வர் அங்கு வந்து அரசன் மனேவிசாரத்தைப்பார்த்து, மாந்திரீகர்களை யழை த்து, மாந்திரீகர்களே! இராஜன் மனைவிக்கு அவள் முந்தியபிறப்பின் பாதக

த்தால் ஒரு வேதாளம் பிடித்துக்கொண்டிருக்கிறது. இவள் முன்ஜன்மத்தில் குருகையென்னும் ஊர் அரசன் மகள். இவள் எப்பொழுதும் தலையை விரித்துக்கொண்டு கண்ணைக் கோணலாக வைத்துக்கொண்டு தெருவில் விளையாடுகிற சிறு குழந்தைகளை பயமுறுத்தியதாலும், கணவனையும், குழந்தைகளையும், பெற்றோர்களையும், மற்றவர்களையும், பல்லைக் கடித்துக்கொண்டு ஓயாது வைததாலும், எவரையும் பெயர்சொல்லி யழைத்ததாலும், அன்னிய புருஷர்களையும் தன் புருஷனையும் கண்டால் சிறிதும் மரியாதையில்லாது இருந்ததாலும், எதைக்கண்டாலும் அடக்கமின்றிச் சிரித்துப் பரிகாசம் செய்த தோஷத்தாலும், இந்தஜன்மத்தில் வேதாளத்தால் பிடிக்கப்பட்டாள். இது தீரவேண்டின், காசியென்னுமிடத்தில் கங்கையில் விதிப்படி நீராடவேண்டுமெனக் கூறினர். உடனே மாந்திரீகர்களும் மற்றுமுள்ள மந்திரி பிரதானிகளும், அரசனுடன் புறப்பட அரசன் கங்கைக்கரைக்கு வந்து விதிப்படி சங்கல்பம் செய்துகொண்டு தன் மனையாளின் புடவை நுனியைத் தன் உத்தரீயத்தோடு முடிந்துகொண்டு ஸ்நானம்செய்ய இறங்கி ஒரு முழுக்கு முழுகினவுடனே இவ்விருவரையும் கங்கை அந்தர்வாஹினியாய் உள்ளேயே இழுத்துக்கொண்டு கும்பகோணம் மகாமகதீர்த்தம் வந்துவிட்டபடியால் அவ்விருவரும் மகாமகதீர்த்தத்தில் கரையேறினார்கள். உடனே அவ்விருவரும் மந்திரி முதலிய ஒருவரையும் காணாமல் திகைத்துக்கொண்டு நின்றார்கள். மந்திரி முதலியோர் கங்கையில் இறங்கியவர்களைக் காணாமல் வருந்தி, கார்க்கியர் அடி பணிந்து, இதன் உண்மை எங்களுக்குத் தெரியவேண்டுமெனப் பிரார்த்திக்க முனிவர் சற்று திகைத்து பிறகு ஞானக்கண்ணால் பார்த்து அவ்விருவரும் கும்பகோணம் இருப்பதையறிந்து, "கங்காநதியானவள் 12-வருஷத்திற்கொருமுறை கும்பகோணத்தில் அமிர்தசரசிற்குப்போய் நீராடுவதுண்டு. அதற்கு மகாமகமென்று பெயர். அந்தக் காலம் இப்பொழுது வந்துவிட்டபடியால் இவர்களையும் உள்ளேயே இழுத்துக்கொண்டுபோய்விட்டாள். நமது அரசனும் அவன் மனைவியும் அவ்விடத்தில் சௌக்கியமாயிருக்கிறார்கள், அரசன் மனைவி வேதாளம் நீங்கி நல்லதன்மையோடிருக்கிறார்கள்" என்றார். ஆகாயவாக்கும் "உண்மை உண்மை" என்று கூறிற்று. எல்லோரும் மிகுந்த சந்தோஷத்தோடும், ஆச்சரியத்தோடும் கும்பகோணம்சேர, அரசன் கன்னியாதீர்த்தக் கரையில் தன் மனைவியோடு ஆநந்தமாய் நாள் கழித்துக்கொண்டிருப்பதைக்கண்டு, "நீர் கங்கையில் மூழ்கி இங்கு எப்படிவந்தீரெனக் கங்கையிழுத்துக்கொண்டுவந்து இந்த வாவியுள் தள்ளினாள். ஆதலால் சகல பாபங்களினின்றும் நாங்கள் நீங்கியதுமன்றி, வேதாளமும் ரத வடிவங்கொண்டு சென்றது" எனலும் எல்லோரும் அந்நீராடி அத்தலத்திலுள்ள மூர்த்திகளைத் தரிசித்து, க்ஷேத்திரவாசம்பண்ணி, பஞ்சக்குரோச க்ஷேத்திரயாத்திரை முதலியவைகள் செய்தார்கள். சுலோசனை ஒரு புத்திரனைப் பெற்றாள். அதற்குப் புண்ணியவாகுவெனப் பெயரும் வைத்து எல்லோரும் சௌக்கியமாய் அவரவர் தேசம் சேர்ந்தார்கள். கார்க்கியரும் தம்மிடம் சென்றார். இவற்றை எழுதினோர் படிப்போர் கேட்போர் யாவரும் சகல பாபங்களினின்றும் நீங்கிச் சௌக்கியமாய் வாழ்ந்திரு[illegible]

PRINTED AT THE PRESIDENCY PRESS, VEPERY, MADRAS.

ஓ

விளம்பரங்கள்.

☛ புஸ்தகங்களை வி. பி. யில் அனுப்பி அதன் கிரயம் வசூல் செய்யப்படும்.

அணா 4-க்குக் கீழுள்ள தொகைக்கு வி. பி. சிஸ்டம் கிடையாததால், அணா 4-க்குக் கீழ்விலையுள்ள புஸ்தகங்கள் வாங்குகிறவர்கள் புஸ்தகக்கிரயத்தையும் தபால் சார்ஜையும் தபால் ஸ்டாம்புகளாக வாங்கி அனுப்பவேண்டும்.

தமிழ்ச் சட்டபுஸ்தகங்கள்.

மதுகரவேணி விலாசம் புஸ்தகசாலை.

கெங்காதரேசுவரர் அக்கிரகாரம்,

வேப்பேரி—மதராஸ்.

---

1. புது ஹிந்துலா விலை ரூ 1—4—0

இதில் ஹிந்துக்கள்செய்கிற விவாகங்கள், சட்ட விரோதமான விவாகங்கள், விவாகத்தை ரத்துசெய்தல், பெண்சாதியை நீக்குவது சுவாதீனப்படுத்துவது, ஜீவனாம்சம் கொடுப்பது, புனர்விவாகம், ஸ்வீகார மெடுக்கிறவிதம், இன்னாரை ஸ்வீகார மெடுத்துக்கொள்ளலாமென்பது, ஸ்வீகார மெடுத்துக் கொண்டபிறகு பிள்ளை பிறந்தால் ஸ்வீகாரப்பிள்ளையின் பாகம், மைனர்கள் விதவைகள் ஸ்வீகார மெடுத்துக்கொள்வது, பெண்சாதிக்கு ஸ்வீகாரஞ் செய்துகொள்ள அதிகாரங்கொடுப்பது, தீட்டில்செய்த ஸ்வீகாரமும் விவாகமும் செல்லாதென்பது, மைனர்களை காப்பாற்றுவது, விபசாரியான தாயிடமிருந்து குழந்தைகளைப் பிரிப்பது, பொதுக்குடும்பம், பிதுரார்ஜித சுவயார்ஜித சொத்துக்கள், பொதுக்கடன், பொதுச்சிலவு, பொது வரும்படி இவைகள் எல்லாரையும் சேருமென்பது, துர்விநியோகம் பொதுக்குடும்பத்தாரை கட்டுப்படுத்தாதென்பது, உயில்கள், வைப்பாட்டி விதவை இவர்களின் ஜீவனாம்சம், விபசாரியான விதவைக்கு ஜீவனாம்சங்கிடையாதென்பது, பாகம் ஜமீன்சொத்தை பாகிக்கக்கூடாதென்பது, பிறவிக்குருடு, செவிடு, ஊமை குஷ்டரோகி இவர்களுக்கு பாகங்கிடையாதென்பது, ஸ்திரீதனம், ஸ்திரீதன பாத்தியஸ்தர்கள், வார்சுகளின் வரிசைக்கிரமம், ஜாதிப்பிரஷ்டனை பிள்ளைக்கு வார்சு பாத்தியமில்லையென்பது, பெண்கள் வார்சாவது முதலிய அனேக விஷயங்கள் பிரிவிசவுன்சில், நான்கு ஹைகோர்ட்டுகள் இவைகளின் தீர்ப்பை யனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. ரத்தாய் விட்ட பழைய சட்டத்தை சிலர் விற்கிறார்கள், அதைவாங்கி ஏமாறவேண்டாம்.

2. புதிய விவசார சிந்தாமணி. விலை ரூ. 2—4—0

இதில் ஸ்டாம்பு, ரெஜிஸ்ட்ரேஷன், கோர்ட்டுக்கட்டணம், காலநிர்ணயம், இன்கம்டாக்ஸ், விவசாயத்திற்கும் கிணறு முதலியவைவெட்டுவதற்கும் சர்க்காரில் கடன்வாங்குவது, தபால், தந்தி, தந்தி மணியார்டர், பத்திரங்களின் மாதிரி, பத்திரங்கள் எழுதவேண்டிய விதமும் அதன் ஷரத்துகளும், அதற்கு ஒட்டவேண்டிய ஸ்டாம்பு இவ்வளவென்பது, கடன்பத்திரம், அடமான பத்திரம், வாடகைப்பத்திரம், போக்கியம், உடன்படிக்கை, ஜாமீன், பாகம், பரிவர்த்தனை, ஸ்வீகாரம், ஸ்வீகார அதிகாரம், முச்சலிக்கா, அதிகாரப்பத்திரம், வக்காலத்து, பவர் ஆவ் அட்டர்னி, விடுதலைப்பத்திரம் குத்தகைப்பத்திரம், பொருப்புப் பத்திரம், விற்பனை முதலிய சுமார் 50 விதப்பத்திரங்களும், ஒவ்வொரு பத்திரத்துக்கும் 3, 4 வித மாதிரிப்பத்திரங்கள் எழுதும் விதமும், அந்தந்த ஊரில் பிரயோகப்படுத்துகிற வார்த்தைகள் மாதிரியும், இன்னம் உபயோகமுள்ள சகல விவகாரங்களும் அடங்கியிருக்கின்றன.

3. ரெவினியூ போர்ட் உத்திரவு என்கிற ரெவினியூ சட்டம். விலை ரூ. 1—4—0

இதில் ரயித்துவாரி நிலங்களுக்கு தீர்வை போடுவது, சொந்தவரி, சர்க்கார்வரி, இருபோக சாகுபடி, ஒருபோக சாகுபடி, ஊறக்கு சாசனம், பட்டா, வைமாத்துவது, நிலங்களை உட்பிரிவு செய்வது. தர்க்காஸ்து, புறம்போக்கு நிலங்கள், கிஸ்தி வசூல், கிஸ்தி வசூலை நிறுத்துவது, வஜா செய்வது, ஜமீன்களின் அதிகாரம், வீடுகட்ட சர்க்காரில் நிலம் கொடுப்பது, ஜப்தி, ஏலம் நிலவிருத்திக்காகவும், உழவுமாடுவிதை வாங்குவதற்கும் சர்க்காரில் கடன் வாங்குவது, தண்ணீர் தீர்வை. இனாம் நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வை, கிராமக்கணக்கர்கள் ரெவினியூ அதிகாரிகள் செய்த அக்கிரமங்களைத் தெரிவித்தவனுக்கு சர்க்காரில் இனாம்கொடுப்பது, ரோட்செஸ் முதலிய மற்றவரிகள், கலெக்டர் ரெவினியூபோர்ட் இவர்களுக்கு அப்பீல் செய்கிறவிதம் மேல்வார குடிவார பாத்தியங்களை வசூல்செய்வது ஜமீன் இனாம். ஜாகீர்முதலிய கிராமங்களில் நடத்தவேண்டிய நடவடிக்கைகள் முதலிய ரெவினியூ சம்பந்தமான அனேக விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

4. மகம்மதியன் லா. விலை ரூ. 2—4—0 .

இதில் மகமதியர்கள் அனுசரிக்கவேண்டிய கல்யாணம், வார்சு பாத்தியம் வார்சுகளின் பிரிவுகள், வார்சுகளின் வரிசைக்கிரமங்கள், புருஷன் பெண்சாதிக்குள்ள சம்பந்தங்கள். அவர்கள் ஒருவரையொருவர் நீக்குவது, ஸதிரீதனங்கள், தர்மசொத்துக்கள், விற்பனைகள், பக்கபாத்தியங்கள், உயில்கள் ; தர்ம

சொத்தை பரிபாலிப்பதும் அவைகளை திருப்பி எடுத்துக்கொள்வதும், மைனர் சொத்தை காப்பாற்றுவது, அடிமைகள், அடிமைகளை சிறை நீக்குகிறவனுடைய அதிகாரங்கள், வேறு மதங்களை யனுசரிக்கிறவர்களுக்குச் சொத்துச்சேரா தென்பது, கொரானில் ஏற்பட்ட சொத்துபாத்தியஸ்தர்கள், முதலிய மகமதிய சட்ட சம்பந்தமான அனேக விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன இது மகமதிய ஹைகோர்ட்டு வக்கீல் ஒருவரால் அரேபி, பார்சி, துலுக் ஹிந்துஸ்தானி முதலிய பழையகாலத்து சாஸ்திரங்களிலிருந்தும் தற்காலத்து இங்கிலீஷ் சட்டங்களிலிருந்தும் ஆராய்ந்தெடுத்து எல்லா ஹைகோர்ட்டுத் தீர்மானங்களையும் பிரிவிகவுன்சில் தீர்மானங்களையும் அனுசரித்து எழுதப் பட்டிருக்கின்றன. கோர்ட்டு நடவடிக்கைக்கு உதவாத பழயகாலத்து சாதாரண சட்டத்தை சிலர் விற்கிறார்கள். அதைவாங்கி ஏமாரவேண்டாம்.

5. கிரிமினல் லா—விலை ரூ. 2—8—0

இதில் மாஜிஸ்ட்ரேட்டுகள் டிப்டி கலெக்டர்கள், சப் அல்லது ஜில்லா கலெக்டர்கள், செஷன் ஜட்ஜிகள்' ஹைகோர்ட்டார் இவர்கள் கிரிமினல் கேசு விஷயமாய் இன்னின்ன அதிகாரங்களைச் செலுத்தலாமென்றும், போலீசார்கள் இன்ன கேசுகளைமட்டும் பிடிக்கலாம் இன்னின்ன கேசுகளை விசாரிக்க அதிகாரமில்லையெனபது, அப்படிப்பிடிக்கிற கேசுகளில்கூட உடனே ஜாமீன் வாங்கிக்கொண்டு விட்டுவிடவேண்டுமென்றும், ஜாமீனைப் பிடித்த விடத்திலேயே வாஙகவேண்டுமேயொழிய ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போகக்கூடாதென்பது, சோதனைபோடுவது, ஜூரி, அசேசர் இவர்களுடையசுதந்திரங்கள், ஐகோர்ட் பிரிவிகவுன்சில் முதலான விடங்களுக்குள்ள அதிகாரங்கள், சமமன்கேசு, வாரண்டுகேசு, ஜாமீன்கேசு ராஜியாகிற கேசுகள், குற்றஙகளின் தன்மையும் அவைகளுக்கு தண்டனையின் விபரமும் காலமுமு, ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக்கு கேசுகளை மாற்றிக்கொள்வது அக்கிரமமாய்ப பிராதுகொண்டு வந்தவர்கள்பேரில் மானநஷ்டத்துக்குப்போவது முதலான கிரிமினல் சம்பந்தமான சகல விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. இதைவாசிப்பவர்கள் போலீசாருக்கு பயப்படவேண்டியதில்லை. அவர்களை தாங்கள் சொன்ன வேலையைக் கேட்டுக்கொண்டு வீட்டுவாசலில் கார்க்கும்படி செய்யலாம். சுவயமாகவே கோர்ட்டில் வக்கீல் உதவியில்லாமல் பேசலாம். போலீசார் செய்கிற அக்கிரமஙகளைத் தெரிந்துக்கொண்டு அவர்களைக்கண்டால் ஆட்டிவைத்து கெஞ்சும்படி செயயலாம். வக்கீல்களுக்கு அவர்கள் செய்வது போல நமக்கும் சலாம் போடச்செய்யலாம்.

6. புதுகிராமமுனிசீப்சட்டம், விலை ரூ. 1—4—0

இதில் கிராமமுனிசீப்புகள், கர்ணன்கள் இவர்களுக்கு சம்பநதப்பட்ட சிவில் கிரிமினல் விஷயங்களடங்கியசகசட்டஙகளையும, வெவ்வேறுஉபயோக

ள்ள பல புதுசட்டங்களையுஞ் சேர்த்து நாளது தேதிவரையில் சர்க்காரால் திருத்தப்பட்டபடி அச்சிட்டிருக்கிறோம்.

தமிழ் நாவல்கள்.

ஒவ்வொருவரும் படித்து ஆனந்திக்கத்தக்கது.

7. இரத்ந விமானம்,—தபால் சிலவுடன் அணா 14.

இச்சரித்திரத்தின் கதா நாயகனாகிய "ரிசுவகேது" தேசசஞ்சாரஞ் செய்வதற்காக பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்து, இரத்னவிமானம் பெற்று, மந்திரிகுமாரன் பத்னி இவர்களுடன் அதன்மேலேறிச் செல்லுங்கால், இடையில் பல துயரத்துக்குட்பட்டும் விமானத்தை யிழந்தும், மந்திரி|பத்னி இவர்களை இழந்து கஷ்டப்படும் போதுங்கூட மனோதைரியத்தை விடாமல் நாடெல்லாஞ் சுற்றிக் கடைசியாக தன்விமானத்தையும் அடைந்து, போகிறவிடங்களில் அங்கங்கேயுள்ள இராஜ கன்னிகைகளை மணந்து, கடைசியில் தன்னுப்தனை மந்திரி குமாரனையும் தன்னுடைத்தோழியான பத்னியையுஞ் சேர்ந்து தன்னூர்போயடைந்து பெற்றோர்களை மகிழச்செய்தான். இது நவரஸம் பொருந்தியதாய் வெகு எளிய நடையில்எழுதப்பட்டிருக்கிறது. சிறியபெண்களும் எளிதில் படித்தறியத்தக்கது, இதில் சொல்லப்பட்ட நீதிகள் மேன்மையானவை,

8. தாருககாசுவம்—தபால் சிலவுடன் அணா 14.

இச்சரித்திரத்தின் கதாநாயகிகளாகிய "கமலாட்சி" "ஜலஜாட்சி" என்பவர்கள் கணவரிடமிருந்து பிரிக்கப்பட்டு காமுகர்களான அன்னிய வாசர்களால் கொண்டுபோகப்பட்டு பலவந்தஞ்செய்யப்பட்டபோது, அவர்கள் தற்கால ஐசுவரியத்துக் காசைப்படாமல் பிரிந்துபோன தங்கள் புருஷர்களை எப்படியாவது கண்டுபிடித்துச் சேரவேண்டுமென்று ஆண்வேஷம் போட்டுக்கொண்டு பிசாசுபிடித்ததாக பாசாங்குபண்ணியும் இன்னும் பலவித தந்திரங்கள்செய்து, அங்கங்கேயிருந்து தப்பி வெளியே செல்லும்போது, இவர்களுடைய வனப்பைக்கண்டாச்சரியப்பட்டவர்கள் இவர்களைக்கூடவேண்டுமென்று தங்கள் கிரகங்களில் கொண்டுபோய்ப் பத்திரப்படுத்த, அவர்கள் பலதந்திரங்கள்செய்து அந்தந்த விடங்களிலிருந்து தப்பி வெளியேசென்று, கடைசியில் இருவரும் தங்கள் புருஷர்களையடைந்து சுயதேசம்போய்ச் சுகமாயிருத்தல் முதலிய விஷயங்கள் வெகு ஆச்சரியமாயிருக்கும். இதில் சமயத்துக்குத் தக்கபடி ஸ்திரீகள் சாகசஞ்செய்து புருஷர்களை தங்கள் வசமாக்கி ஏமாறச்செய்வதும், தங்கள் கற்புநிலைமைக்கு பங்கம்வாராமல் காப்பாற்ற அவர்கள் செய்த தந்திரங்கள் வெகு மெச்சத்தக்கது. இதில் ஸ்திரீ புருஷர்களனுசரிக்க வேண்டிய பல நீதிகளைக் காணலாம்.

9. நடுவேனிற் கனவு ரூ. 1-4-0

இது ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கில மகாவித்வானால் செய்யப்பட்ட "மிட்ஸம்மர் நைட்ஸ்ட்ரீம்" என்னும் கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு.

கும்பகோணம் காலேஜ் போதகர் S. நாராயணசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது.

10. ஹிந்து மதப்பிரசங்கம் அணா 2.

இது விவேகாநந்தஸ்வாமிகள் ஹிந்துமதவிஷயமாய் செய்த பிரசங்கத்தின் சாராம்சத்தின் தமிழ் தர்ஜுமா.

11. இல்லறம் நல்லதா? துறவறம் நல்லதா? அணா 1.

இதுவும் விவேகாநந்தரின் லக்சர்,

அறிவைப் புகட்டும் நாவல்கள்.

12.	துர்க்க பூசை	அணா 10.
13.	கரிசிலாதாள்	அணா 2.
14.	கற்புக்கரசி	அணா 6.

கிரந்த புஸ்தகங்கள்.

15 யஜுர்வேதாஹ்நிகம் 0—6—0

இதில் வைதிகள் அனுஷ்டிக்க வேண்டிய மகாசங்கல்பம், ஸ்நாந விதி, ஸ்நாநாங்க தர்ப்பணம், சிகோதக, வாஸோதகமந்திரம், யக்ஷ்மதர்ப்பணம், யஞ்ஞோபவீததாரணமந்திரம், திரிகால சந்தியாவந்தனம், அருணபிரார்த்தனை, சூரிய நமஸ்காரம், நவக்கிரக நமஸ்காரம், பிர்ம்மயஞும், ஸமிதாதானம், ஔபாஸநம், தர்ப்பணம், பூஜாவிதி, வைசுவதேவம், ஸிம்ஹாநுவாகம், திரிசுபர்ணம் உபாகர்மம் காயத்திரிஜப காமோகாரிஷீஜப சங்கல்பம் முதலியவைகள் அடங்கியிருக்கின்றன.

யஜுர்வேதசந்தியாவந்தனம்	0	1	0	ருக்வேத அமாவாசைத்தர்ப்பணம்	0	1	
யஜுர்வேத அமாவாசைத் தர்ப்பணம் ...	0	1	0	போதாயன அமாவாசை தர்ப்பணம்	0	1	0
				யஜுர்வேத உபாகர்மம்	0	2	0

மகாமக மகாத்மியம் கிலே அணா ... 0—2—0

கிராம முன்சீப்களுக்கு வேண்டிய

க்ரிமினல் ரிஜிஸ்டர்	1-க்கு	0	5	0
சிவில் ரிஜிஸ்டர்	1-க்கு	0	5	0
கியாலண்டர் (பாரம்)	50-க்கு	0	6	0
சிவில் பிரதிவாதிசம்மன்	100-க்கு	0	5	0
சிவில் சாட்சி சம்மன்	100-க்கு	0	5	0
க்ரிமினல் சாட்சி சம்மன்	100-க்கு	0	5	0
குற்றவாளி சம்மன்	100-க்கு	0	5	0
பிராஸ்படீடு மனுபாரம்	50-க்கு	0	6	0
ஜப்திக் கட்டளை பாரம்	100-க்கு	0	5	0
பிராது பிளெயின்ட்பாரம்	50-க்கு	0	6	0
வக்காலதநாமா	50-க்கு	0	6	0
வாதிக்கு மறுவாயிதா நோட்டீசு...	100-க்கு	0	5	0
டிக்கிரி நிறைவேற்ற ஆட்சேபனை செய்ய பிரதிவாதிக்கு நோட்டீசு	100-க்கு	0	5	0
ஏல இஸ்திரியார்	50-க்கு	0	6	0

சர்க்கார் கிஸ்திசெலுத்தியதற்கு கைச்சாதது

இரசீது) புஸ்தகம் 12 பக்கம் கொண்ட புஸ்தகம்	1-க்கு	0	0	6
ஷை ஷை	100-புஸ்தகம்	2	8	0
ஷை பைண்டு புஸ்தகம்	1-க்கு	0	4	0

ஒவ்வொருவரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அரியநூல்.

16. இ ர தி ச ா ஸ் தி ர ம்.

விசித்திர லீலைப்படங்களோடு தயாராயிருக்கின்றது.

இது சம்ஸ்கிருத சுலோகத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இதுபார்வதீ தேவிக்குப்பரமசிவனால் இரகசியமாக உபதேசம் செய்தருளியதை மகாருஷிகளால் பூலோகத்தாருககறிவிக்கப்பட்டது.

இதில்நான்கு ஜாதி ஸ்திரீகள் நான்கு ஜாதி புருஷர்களின் அங்கலட்சணங்களும், நடவடிக்கைகளும் விருப்பங்களும், இன்ன ஜாதி புருஷன் இன்ன ஜாதி ஸ்திரீயோடு சம்பந்தஞ்செய்வது உத்தமமென்றும், விதஇயாசமான சம்பந்தமேற்பட்டால் இன்னவிதமாய நடக்கவேண்டுமென்பது. சம்போகஞ்செய்ய

வேண்டிய உத்தமகாலங்களும், முறைகளும், காலந்தப்பி சம்போகம்செய்தால் ...ம் கேடுகளும், அதை நீக்கவேண்டிய வழிகளும், கொஞ்சங்கூட சம்போகமில்லாமலிருந்தால் நேரிடும் தீங்குகளும். வியாதிகளும் அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழிகளும், சரீரத்தை திடமாயும் ஆரோக்கியமாயும் வைத்துகொள்ள வேண்டியவழிகளும், சாப்பிட வேண்டிய லேகியங்களின் முறைகளும், சம்போகத்தினல் வியாதி உண்டாகாமலிருக்க வேண்டிய வழிகளும், கர்ப்போற்பத்தி, கர்ப்ப சின்னங்கள், கர்ப்பத்தைக்காப்பாற்ற வேண்டிய வழிகள் பிரசவம் சுகப்பிரசவவழிகள், பிரசவத்துக்குப்பின் இவ்வளவு காலம்வரையில் சம்போகங்கூடாதென்பது, கர்ப்பகாலத்திலும், பிரசவகாலத்திலும் உண்டாகிய சிலவியாதிகளுக்கு ஔஷதங்களும். அதை உபயோகிக்கும் வழிகளும். இன்னம் அனேக அவசியமான இரகசிய விஷயங்களும், எழுதப்பட்டிருக்கின்றன.

புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 1—4—0

ஒருதடவையில் 5-புத்தகம் வாங்குகிறவர்களுக்கு ஒரு புத்தகஞ்சேர்த்து ஆறுபுத்தகம் கொடுக்கப்படும்.

கவர்ன்மெண்டு தமிழ் மொழிபெயர்ப்பு

17. சென்னை ராஜதானி ஜமீன் குடிநிலச் சட்டம்.

(1903ளுபத்து 1-வது ஆக்ட்,)

அட்டவணையோடும், வியாக்கியானத்துடனும் அச்சிடப்பட்டிருக்கிற பெரியபதிப்பு.

இதனுல் 1865ளுபத்து 8-வது ஆக்ட் ரத்தாய்விட்ட

இது ஜமீன், மிட்டா. சுரோ...
களுக்குள்ள பாத்தியங்...
ஜமீன்தார் அதி...
தால் கவெ...
செ...

வது, குத்தகைபாக்கிக்காக ஜப்திசெய்வதும் வசூல்செய்வதும், தரிசு அல்லது சாவியானபோது தீர்வையை வஜாசெய்வது, இவ்வளவு வரிதான் நிலத்தின் பேரில் விதிக்கலாமென்கிறதுமான பலவிஷயங்களும், இதில் ஜமீன்தா. குடிகளுக்குள்ள பாத்தியதா பாத்தியங்களும் விவரமாய் வரையறுக்கப் பட்டிருக்கின்றன.

வெகு உயர்ந்த கடிதத்தில் பெரிய அட்சரமாக அச்சிட்டு பைண்டுசெய்யப்பட்டிருக்கிறது. இதன் விலை ப ா 1—4—0.

ஒரேசமயத்தில் 5 புஸ்தகம் வாங்குகிறவர்களுக்கு ஒருபுஸ்தகம் இனாமாக கொடுக்கப்படும்.

18· சிவில் புரோசிஜா கோட்.

[1908ளூ 5-வது ஆக்ட்]

கவர்ன்மெண்டு தமிழ் மொழிபெயர்ப்பு.

1909ளூ ஜனவரீ 1உ முதல் அனுஷ்டானத்துக்கு வருகிறது.

இதில் டிஸ்ட்ரிக்ட் முனிசீப், ஜில்லாஜட்ஜ், ஹைகோர்ட் இவைகளில் வியாச்சியம் தாக்கல்செய்தல், ஈரங்கிபோடுதல், விசாரணை, டிக்ரி, வாரண்டு, ஜப்தி, ஏலம், வியாச்சியம் செய்தவுடனே டிக்ரிக்கு முன்சொத்தை ஜப்திசெய்வது, ராஜியாவது, அப்பீல்கள் முதலிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

வெகு உயர்ந்தபதிப்பு விலை ரூபா **2-4-0**

அச்சிலிருக்கிற புஸ்தகங்கள்.

19. ப்ரைமேரி, எலிமெண்டரி ஸ்கூல் நூல்கள்.

• ••• போர்டு அண்டு முனிசிபாலிடி ஆக்ட்கள்.

ரலை,